செம்மண்

நிலம் 1 துகள் 16 வள்ளுவர் ஆண்டு 2051, 31ஐப்பசி - 06 கார்த்திகை 2020 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-

வளரட்டும் மஞ்சள்!

ஸ்டோ ஸ்வாமி

எவ்.டி.ஏ. எனப்படும் அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து ஒழுங்குபடுத்தும் அரச நிறுவனம், கொவிட்-19 தொற்றிற்கு, வெக்லுரி எனும் வர்த்தக நாமத்தில் அறியப்படும் ரெம்டெசிவிர் மருந்தினை பயன்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இதன் பிரகாரம், கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ள வளர்ந்தவர்களுக்கும், 12 வயதிற்கு மேற்பட்ட சிறாருக்கும் பயன்படுத்ததக்க விதத்தில் இந்த மருந்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உலகளாவிய அச்சுறுத்தலாக மாறியுள்ள கொவிட்-19 நிலைவரத்தின் போக்கு விபரீதமாகி வரும் வேளையில், இந்தத் தகவல் ஓரளவிற்கு ஆறுதலைத் தரும் வகையில் அமைந்துள்ளது.

கொவிட்-19 தொடர்பான உள்ளூர் தொற்று அதிகரித்து வரும் நிலையில் இலங்கை, சுவதாரணி என்னும் மூலிகை மருந்தினை அறிமுகப்படுத்தியிருக்கிறது. ஆயுள்வேத மருத்துவ முறைமைக்கு அமைய, உள்ளூர் மூலிகைப் பொருட்களை பயன்படுத்தி தயாரிக்கப்படும் இந்த குடிநீர் வகை மருந்தினை பருகுவதை ஊக்குவிக்கும் நடவடிக்கையிலும் அரசு இறங்கியிருக்கிறது.

மூலிகைகளுக்கு இருக்கக்கூடிய வைரஸ் எதிர்ப்பு தன்மையைப் பயன்படுத்தி, இந்த புதிய வைரஸை விரட்டுவது மற்றும் அதற்கெதிராகப் போராடத்தக்க வகையில் மனிதருக்குள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது போன்றனவே இந்த முயற்சிக்கான அடிப்படைகளாகும். மேற்கத்தைய வைத்திய முறை, கொவிட்-19இற்கு மிகச் சிறந்தது என்று ஒரு மருந்தினைக்கூட இதுவரை பரிந்துரைக்காத நிலையில், பாரம்பரிய வைத்திய முறையை சார்ந்த இந்த வகை முன்னெடுப்புகள் தொடர்கின்றன.

ஆனால், இலங்கை அரசோ வைரஸை மாத்திரமல்லாமல் வேறு பல நோய்களோடும் நோய்க்குரிய காரணிகளோடும் போராட வல்ல மற்றொரு மூலிகை மருந்திற்கு கட்டுப்பாட்டினை விதித்திருக்கிறது. கறிக்கு மாத்திரமல்லாமல், கலாசாரத்திற்கும் வண்ணம் சேர்க்கும் மஞ்சள், மக்களுக்கு கிடைப்பதை அரசின் அண்மைய கொள்கை மாற்றம் பாதித்திருக்கிறது. உறுதிப்படுத்தப்படாத உள்ளூர் உற்பத்தியை நம்பி இறக்குமதியை கட்டுப்படுத்தியது, சந்தையில் மஞ்சளுக்கு பெரும் கேள்வியை ஏற்படுத்தியிருக்கிறது.

நெருக்கடி

ரி.பி.அன்ரன்

கொரோனா வைரஸ் தாக்கம் இலங்கையில் கட்டுக்கடங்காமல் பெருகி வரும் நிலையில் நாடு நெருக்கடிகளை எதிர்கொள்ளத் தொடங்கியிருக்கின்றது. முதலில் பாதிக்கப்படும் நோயாளர்களை வைத்துப் பராமரிப்பதற்குத் தேவையான மருத்துவ தங்குமிடங்கள் இல்லை என்கிற நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. வைத்தியசாலைகள் தவிர்ந்த கொரோனா சிறப்பு நிலையங்கள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களை அரசு உருவாக்கி வருகின்றபோதும் அவை அதிகரித்துவரும் நோயாளர்களை எதிர்கொள்வதற்குப் போதியதாக இல்லை என்கின்றன மருத்துவ வட்டாரங்கள்.

கொரோனவின் இரண்டாவது அலை இலங்கையைத் தாக்கத் தொடங்கியதில் இருந்து சில நாள்களிலேயே பல நூற்றுக்கணக்காக நோயாளர்கள் அதிகரித்தனர். ஆனால், இந்த அதிகரிப்பை எதிர்கொள்வதற்கான மருத்துவப் படுக்கைத் தயார் நிலையில் மருத்துவ வட்டாரங்கள் இருக்கவில்லை என்கின்றனர் சுகாதாரத் துறையினர்.

"உண்மையில் சொன்னால், முதல் அலையை வெற்றிகரமாகக் கையாண்டதன் காரணமாக கொரோனாவை எதிர்கொள்வதில் ஒருவித அசட்டைத்தனம் இருந்தது. இரண்டாவது அலை ஒன்றை எதிர்கொள்வதற்கான போதிய தயாரிப்புக்கள் இருக்கவில்லை. முதல் அலையை எதிர்கொள்வதற்கு இருந்த ஆயத்தங்கள்கூட இல்லை" என்கின்றார் தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத சுகாதாரத்துறை அதிகாரி ஒருவர்.

போதிய தயார்ப்படுத்தல் இல்லை என்பது எந்தளவுக்கென்றால், கொரோனா தொற்றைக் கண்டுபிடிப்பதற்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் நாளொன்றுக்கு 9 ஆயிரம் என்கிற நிலையை எட்டியதை அடுத்து பரிசோதனைக்கான இயந்திரங்களில் பல பழுதடைந்துள்ளதால் அவற்றைத் திருத்தவோ மாற்றியந்திரங்களைப் பெற்றுக் கொள்ளவோ முடியாத அளவிற்கு நிலமை நெருக்கடியைச் சந்தித்துள்ளது.

இப்போது இந்த இயந்திரங்களைத் திருத்துவதற்கும் புதியவற்றை உடனடியாகப் பெறுவதற்கும் சீனாவின் உதவியை நாடுவது என்கிற முடிவுக்கு வந்திருக்கின்றார்.

"இரண்டாவது அலை ஒன்று பெருமெடுப்பில் வரும் என்கிற எதிர்பார்ப்புடன்கூடிய தயார்ப்படுத்தல் இருந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது" என்றார் செம்மண் பத்திரிகையிடம் பேசிய சுகாதாரத்துறை உயரதிகாரி.

கொரோனாவின் இரண்டாவது அலையைக் கட்டுப்படுத்த நாட்டை முழுமையாக முடக்குவதில்லை என்

(22ஆம் பக்கம் பார்க்க)

இ

துவரை காலமும் சிறீலங்கா தீவானது மாம்பழ வடிவுடையது, நெட்டாங்கு இவ்வளவு அகலாங்கு இவ்வளவு எனப் படித்திருப்போம். சீனாவின் கொழும்பு துறைமுக நகர விரிவாக்கத்திற்குப் பின்னால் (காலி முகத்திடலை அண்டிய கடலின் 296 ஹெக்டேயர் பகுதியை மண்ணிட்டு நிரப்பி அமைக்கப்படும் புதிய நகரத் தொகுதி. இதனை 'கடலிடமிருந்து நிலத்தை மீட்கும் திட்டம்' என்கிறார்கள்) இந்தத் தீவின் வரைபடமே மாற்றப்பட்டிருக்கிறது. இந்துமா சமுத்திரத்தின் மத்தியில் சிறு முத்துப்போன்றிருக்கும் தீவின் எதிர்கால இருப்பு தொடர்பிலோ, கடல் நீர்மட்ட அதிகரிப்பினால் எதிர்காலத்தில் தீவுக்கு ஏற்பட இருக்கும் அபாயம் குறித்த எச்சரிக்கைகள் குறித்தோ அக்கறை செலுத்தப்படாமலேயே இந்தத் திட்டம் முடிவுறுநிலையை எட்டியிருக்கின்றது. இலங்கையில் அமையும் சீனாவின் நகரம் வண்ணமயமானது, நாட்டின் அபிவிருத்தியை விரைவுபடுத்தக்கூடியது என்கிற விளம்பரங்களின் பின்னாலே இது இடம்பெற்றிருக்கிறது. அதாவது ஒரு நாட்டின் வரைபடத்தையே மாற்றியமைக்குமளவுக்கு இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துவிட்டது.

இந்தப் பொறியிலிருந்து இலங்கை தீவினால் இனி வெளிவரவும் முடியாது. காரணம் தலைக்கு மேல் எகிறியிருக்கும் கடன்கள். உதவிகள்.

(முழுக் கட்டுரைக்கு கடைசிப் பக்கம்)

பக்கம் 18

மாசம் ரூ. 5 லட்சம் உழைப்பேன்!

பக் 14

நிலவில் நிறைய நீர் ஆனால் குடிக்க முடியாது...?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்

எழும் கேள்விகள்

அமெரிக்கச் செயலர் மைக்கேல் பொம்பியோவின் கொழும்பு வருகையையொட்டி சீனா, அமெரிக்கா இடையே எழுந்த கருத்து வெளிப்பாடுகள், வெளிப் பார்வைக்கு இலங்கையை ஒரு வல்லரசுகளின் பனிப் போர்க் களமாக மாற்றியுள்ளன என்ற கருத்தை வெளிப் படுத்தின.

இலங்கையைச் சீனா வேட்டை விலங்கைப்போல் சூறையாடுவதாக அமெரிக்காவும் இரு நாடுகளின் உற வில் தலையீடு செய்வதாகச் சீனாவும் மாறி மாறிக் குற்றஞ் சாட்டிக் கொண்ட கருத்துக்கள் மூலம் இந்த கருத்துரு வாக்கம் வெளிவந்துள்ளது. மேற்குலக இந்த அறிக்கை களை ஒரு முரண் நிலையில் வைத்தே வெளிப்படுத்தின.

பொம்பியோவின் வருகையைத் தொடர்ந்து மற்றொரு கவனம் ஈர்க்கும் சம்பவமும் இடம்பெற்றது. அது, இந்தி யத் தூதுவர் திடீரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைச் சந்தித்துக் கலந்துரை யாடியமை.

கொழும்பு வரும் அமெரிக்கத் தலைவர்கள் பொது வாக எதிர்க் கட்சித் தலைவர்கள் மற்றும் தமிழ்த் தலை வர்களையும் சந்திப்பதை தமது நிகழ்ச்சி நிரலில் வழக்க மாகக் கொண்டிருப்பார்கள். ஆனால் தனது 12 மணி நேர குறுகிய பயணத்தில் ஆட்சியாளர்களைத் தவிர்த்து பொம்பியோவின் சந்திப்புக்களுக்கு நிகழ்ச்சி நிரலில் இடமளிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால், கொழும்பு வருவதற்கு முன்பாக பொம்பியோ இந்தியாவிற்குச் சென்றுவிட்டே வந்திருந்தார். பொம்பியோ சம்பந்தனைச் சந்திக்காததையும் அவரது பயணம் முடிந்த துமே இந்தியத் தூதுவர் சம்பந்தனைச் சந்தித்தமையையும் இந்தப் பின்னணியிலேயே வைத்து நோக்க வேண்டும். பொம்பியோ சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் குறித்து இந்தியத் தூதுவர் ஊடாகச் சம்பந்தனுக்குத் கூறப்பட்டி ருப்பதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்க முடியாது.

அதாவது அமெரிக்க - சீன முரண் நிலையில் இந்தி யாவின் ஆதரவோடு தமிழர்கள் பக்கம் அமெரிக்க நிலைப்பாடு சாய்வதற்கான வாய்ப்புக்களை இது வெளிக் காட்டியது என்று எடுத்துக்கொள்ளலாம்.

தமிழர்களின் பிரச்சினைக்கு பூகோள அரசியலைச் சரியாகக் கையாள்வதன் மூலம்தான் சரியான தீர்வைக் காண முடியும் என்று தமிழ்த் தேசிய அரசியல் பேசும் கட்சிகள் இதுவரையில் சொல்லி வந்தன. இன்னும் தெளி வாகச் சொன்னால் சீன - மேற்குலக முரண்பாட்டில் தெற்கு சீனாவோடு அணிசேர்வதால் தவிர்க்க முடியாமல் இந்தி யாவும் மேற்குலகும் தமிழர்களோடு அணி சேரவேண்டிய நிலைப்பாடே இந்த பூகோள அரசியல் எதிர் தமிழர் நிலைப் பாடு என்கிற சம்பாடு.

பொம்பியோவின் கொழும்பு வருகையின்போது நிகழ்ந்த காட்சிகள் இந்தச் சமன்பாட்டில் பெரும் தாக் கத்தைச் செலுத்தக்கூடிய அதிஉச்ச நிகழ்தகவு என்று கொண்டால், தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த வாய்ப்பை எப்படிப் பயன்படுத்திக்கொள்ளப் போகின்றன என்பதே இங்குள்ள கேள்வி.

பூகோள அரசியல் தமக்குச் சார்பாகத் திரும்பும் தரு ணத்தில் அதனைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண் டும் என்று இதுவரையில் சொல்லிவந்தவர்கள், இப் போது அந்தத் திருப்பத்துக்கான தொடக்கம் நிகழந்தி ருப்பதாக தோன்றுகின்றபோது என்ன செய்யப் போகி றார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் கிடைத்துள்ள இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தந்துவிடுவார்களா?

ராஜபக்சக்களின் சீனச் சாய்வு நிலைப்பாடுகள் தமி ழர்கள் தமக்கான அரசியல் நல்விளைவுகளை அறுவடை செய்யமுடியுமா? இன்றுள்ள தமிழ்த் தலைவர்கள் அதனைச் சாத்தியமாக்கிக் காட்டுவார்களா? இத்தகையதொரு தரு ணத்திற்காகத்தான் அவர்கள் காத்திருந்தார்கள் என்றால், இதோ அவர்கள் முன் அந்த வாய்ப்பு வந்திருக்கிறது, அதனைப் பயன்படுத்தி தமிழர்களைக் கரையேற்றி விடுவார்களா? அல்லது வரலாற்றில் கடந்துபோன பக்கங்களைப் போலவே மீண்டும் அப்படி ஒரு வாய்ப்பு வரும் என்று காத்திருப்பார்களா?

கட்டுப்பாடும் தட்டுப்பாடும்

கொவிட்-19 இன் முதல் தாக்குதலின் போது ஏற்பட்ட பொருளாதாரச் சரிவை சரி செய்ய, இறக்குமதிக் கட்டுப்பாட் டினை அரசு அறிமுகம் செய்திருந்தது. அதன் ஒரு பாகமாக இறக்குமதி செய யப்படும் மஞ்சளும், கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. தமிழ் சிங்கள வேறு பாடு இல்லாமல் இலங்கையரென எல் லோராலும் பயன்படுத்தப்படும் மஞ்சள் மீதான கட்டுப்பாட்டினைத் தொடர்ந்து அது சந்தையிலிருந்து நழுவியதுடன் கறுப்பு சந்தையை நோக்கியும் நகரத்தொ டங்கியது. சாதாரண விலை மஞ்சள், இலங்கையின் கறுப்புச் சந்தையில் ஐந்து மடங்கு விலையில் விற்கப்பட்ட தாக 'தி இந்து'வின் மீரா சிறினிவாசன் குறிப்பிடுகிறார்.

மஞ்சளுக்கு சந்தையில் ஏற்படும் தளம் பலைக் கருத்தில் கொண்டு, கடந்த ஏப் ரல் மாதத்தில் அரசு கட்டுப்பாட்டு விலை யினை அறிவித்திருந்தது. ஒரு கிலோ கிராம் மஞ்சள் தூளின் உச்சபட்ச சில் லறை விலையாக 750 ரூபாயினை நுகர் வோர் விவகார அதிகாரசபை நிர்ணயித் திருந்தது. எனினும், அதைத் தொடர்ந்து சாதாரண தேவைக்கேனும் மஞ்சளினை கொள்வனவு செய்வதென்பது சாத்தியமற்றதாகிவிட்டது. இன்று தலைநகரம் தவிர்ந்த நாட்டின் பல பகுதிகளிலும் மஞ்சள் அரியவகைப் பொருள்கள் பட்டியலில் இடம்பிடித்துவிட்டது.

மஞ்சளாகும் பாக்கு நீரிணை

இலங்கைச் சந்தைக்குத் துறைமுகங்கள் வழியாக மஞ்சள் வந்து சேருவதில் கட்டுப்பாடுகள் எதிர்கொள் ளப்பட்டதால், பாக்கு நீரிணை, மஞ்சள் நீரிணையாக மாற்றம் பெற்றுவிடுமோ என எண்ணு மளவிற்கு, இந்தியாவிலிருந்து கடத்தல்கள் இடம்பெறத் தொடங்கின.

கடந்த ஓரிரு மாதங்க ளுக்குள் மாத்திரம், இலங்கை யின் தென்மேற்கு கரையோ ரத்திலும் அதற்குச் சமீபமான இந்தியக் கரையிலும் கிலோக் கணக்கில் மஞ்சள் கைப்பற்றப் பட்டிருந்தது. இலங்கைக்கு கடத்தி வரப்படுவதற்குத் தயா ரான நிலையிலும், இலங் கைக்குக் கடத்தி வரப்பட்ட நிலையிலும் கைப்பற்றப்பட்ட மஞ்சளினால் இரு நாட்டுக் காவல்துறை யினரும் அடிக்கடி 'மஞ்சள் நீராட்டப் பட்டனர்' என்றால் அது மிகை அல்ல.

இலங்கையின் மஞ்சள் தேவை வருடமொன்றுக்கு 7 ஆயிரம் தொன் என வும் அதில் 5 ஆயிரம் தொன் மஞ்சளை வழங்குவது இந்தியா எனவும் 'தி இந்து' குறிப்பிடுகிறது. வெறும் 2 ஆயிரம் தொன் மஞ்சளே இலங்கையில் விளைவிக்கப் படுகிறது.

மஞ்சளின் மகிமை - குர்க்குமின்!

இலங்கையின் உலர் மற்றும் இடைத் தர வலயத்தில் தனிப்பயிராகவும் தென் னந்தோட்டங்களில் ஊடுபயிராகவும் பயிரிடப்படும் மஞ்சள், பிரதானமாக குருநாகல், கம்பஹா, கேகாலை, கண்டி, மாத்தளை மற்றும் அம்பாறை மாவட்டங் களிலேயே செய்கை பண்ணப்படுகிறது. இஞ்சிக் குடும்பத்தைச் சேர்ந்த குர்குமா லோங்கா (Curcuma longa) எனும் தாவரத் தின் றிசோம் (Rhizome) என வழங்கப்ப டும் வேர்த்தண்டுக் கிழங்கே மஞ்சளாக மிளிருகின்றது. நடுகை செய்து 8-10 மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய மஞ்சள், சில நாட்கள் நீடிக்கக்கூடிய பத னப்படுத்தலின் பின் பாவனைக்கு உகந் ததாகிறது.

மஞ்சளில் காணப்படும் பிரதான செயற் படு மூலக்கூறான குர்க்குமினே (Curcu min) மஞ்சளில் பிரதிபலித்து விளங்கும் மருத்துவ மற்றும் இரசாயன குணவியல்பு களிற்கான அடிப்படை என அறிவியல் கூறுகிறது. இந்த குர்க்குமின் உள்ளடக்கம் மஞ்சளில் 2 - 6 வீதமாகக் காணப்படுவது டன், அது மஞ்சளின் இனத்திற்கு இனம் வேறுபடுவதாகவும் விவசாய மற்றும் கால நிலை நிலைமைகளைப் பொறுத்து அது வேறுபட முடியும் எனவும் குறிப்பிடப்படு கிறது.

வர்த்தக கலாச்சார, சமய, பொருளா தார மற்றும் மருத்துவ குணாதிசயங்க ளைத் தன்னுள்ளே கொண்டிருக்கும் மஞ் சள், கொவிட்-19 உடன் போரிடக்கூடிய வல்லமை உடையது எனப் பரவலாக இன்னும் ஏற்றுக்கொள்ளப்படாத சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. மஞ்சளில் இருந்து பிரித்தெடுக்கப்படக்கூடிய பொலிபீனொல் ப்தார்த்தமான குர்க்கு மின், பல்வேறுபட்ட மருத்துவ குணாதிச யங்களை கொண்டிருப்பது அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், கொவிட்-19 தொற்றினை கட்டுப்படுத்தும் இயல்பு மஞ்சளுக்கு இருப்பதாக குறிப் பிடுகிறார்கள் மருத்துவ அறிஞர்கள் சிலர்.

மறுப்பு

கை கழுவுவதையும் சமூக இடை வெளியைப் பின்பற்றுவதையும் கொவிட்-19 தொற்றிற்கான முற்றடுப்பா

கக் குறிப்பிடும் உலக சுகாதார நிறுவ னம், மஞ்சள் கொவிட்-19 தொற்றை தடுக்கும் என்பதற்கு அறிவியல் ஆதா ரங்கள் இல்லை என்கிறது.

மஞ்சள் கொவிட்டை விரட்டுகிறதோ இல்லையோ, சொதியை மட்டுமல்ல சோற் றையும் மஞ்சளாக்கி அழகு பார்க்கும் நம் மவர்களின் கைகளுக்கு மஞ்சள் தற் போது எட்டாமல் இருப்பது மிகவும் வேத னைக்குரியதுதான்.

மஞ்சள் தண்ணீரில் காலையும் மாலை யும் குளித்துப் பழகிய வீட்டு வாசலும் முற்றமும், மஞ்சள் தட்டுப்பாட்டினால் வரண்டு போயிருக்கின்றன என்பதென் னவோ உண்மை. கடல் கடந்து வரும் மஞ்சளை கட்டுப்படுத்துவதில் முன் வைத்த காலை பின்வைக்க மாட்டேன் எனச் சொல்லும் அரசு, சுபீட்ச நோக்கு தேசிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உள்நாட்டு மஞ்சள் உற்பத்தியாளர்களை பலப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

மஞ்சள் உற்பத்தியில் தன்னிறைவை எட்ட திடசங்கற்பம் பூணும் அரசு, மஞ் சளுக்குள்ள மருத்துவ குணத்தை, கொவிட்-19 இற்கு எதிராகப் பயன்ப டுத்தும் ஆய்வு களையும் ஊக்குவிக்க வேண்டும். அது, மஞ்சளுக்குள் பொதிந்து கிடக்கும் மருத்துவ இரகசி யங்களை வெளிக்கொணர்வதுடன், உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குச் சிறந்த சந்தை வாய்ப்புக்களையும் திறந்து வைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகலைவன்

கிழக்கு மேற்கு இடையிலான இலங்கையின் சடுகுடு ஆட்டம்

அது சமாதானத்திற்கானகாலம் என்று சொல்லி அறியப் பட்ட காலம். கிளிநொச்சி இலங்கையின் இரண்டா வதுதலைநகரத்திற்குரிய மதிப்போடிருந்தது. இலங்கை வான் படையின் உலங்குவானூர்திகள் அடிக்கடி அங்கு வந்து தரையிறங்கிச் சென்றுகொண்டிருந்தன. அமைதியைத் தேடிப்பிடிப்பதற்காககொழும்பு அரசின் பிரதிநிதிகளும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளும் நாடுநாடாகப் பறந்துகொண்டிருந்த காலம்.

அந்த அமைதியைத் தேடிப் போகும் பய ணங்களுக்கு முன்பாக கிளிநொச்சியில் இருந்து உலங்கு வானூர்திகள் புறப்பட முன் னரும், பேச்சு முடிந்து வந்திறங்கியவுடனும் யாழ்ப்பாணத்தில்இருந்துபத்திரிகையாளர்கள் கிளிநொச்சி மைதானத்தை நோக்கிப் பறந் தோடிப் போவதை வழக்கமாகக் கொண்டி ருந்தனர்.

அப்படி ஒரு தடவை உலங்கு வானூர்தி யில் கிளிநொச்சியில் வந்திறங்க இருந்த புலிகளின் அரசியல் ஆலோசகர், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் வருகைக்காகக் காத்திருந்தபோதுநான் பணியாற்றிக் கொண் டிருந்த பத்திரிகை நிறுவனத்தின் மூத்த பத் திரகையாளருடன் கிளிநொச்சி

யின் மையத்தில் அமைந்திருந்த காவல்துறை அலுவலகத்தில் அதன் பொறுப்பாளரான பால சிங்கம் நடேசனைச் (தமிழ்ச் செல்வனுக்குப்பின்னர் அரசியல் துறைப் பொறுப்பாளராகப் பத வியேற்றவர்) சந்திக்கக்கிடைத் தது.

கிளிநொச்சியின் மீளெழுச்சி குறித்துப்புலிகள் புளகாங்கிதம் அடைந்திருந்த வேளை அது. ஒரு நிழல் அரசை அவர்கள் கட்டியெழுப்பிக்கொண்டிருந்த காலம். எதிர்காலம் குறித்தும் மலரப்போகும் தமிழீழம் குறித்தும் நீண்ட பரந்த கனவுகள் விர விக்கிடந்தன.

அந்தப் பின்னணியில் அரசியல் மற்றும் கள நிலவரங்கள் தொடர்பில் நடேசன் எம்மோடு பலவற்றையும் பேசினார். அப்போது அவர் சொன்ன ஒரு முக்கியமான விடயம். "நான் இப்போது அதிகம் சீனா பற்றியே படித்துக்கொண்டி ருக்கின்றேன். அது பற்றிய புத்தகங்களைத்தான் வாசிக்கின்றேன். சீனாவிட மிருந்து நாம் கற்றுக்கொள்வதற்கு அதிகம் இருக்கின்றது. அவர்களின் அபி விருத்தி, வளர்ச்சி எமக்கொரு முன்னுதாரணம். எதிர்காலத்தில் நாமும் அதைப் போன்ற விரைவான வளர்ச்சியை நோக்கித்தான் செல்லவேண்டும்" என்றார்.

இது நடந்து கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் கடந்து இலங்கையின் அதிபர் கோட்டாபய ராஜபக்சவின் வாயிலிருந்தும் "இலங்கை சீனாவைப் போன்ற விரைவான அபிவிருத்தியைக் காணவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்" என்கிற வார்த்தைகளைக் கேட்க முடிந்திருக்கிறது.

சீனாவின் வளர்ச்சியை மாதிரியாகக் கனவு கண்ட புலிகளின் நிலை, அதுவும் சீனா கொடுத்த ஆயுதங்களாலேயே வந்த வினை ஊரறிந்த இரகசியம். இப்போது இலங்கை அதிபர் வெளிப்படையாகப் பொது வெளியிலேயே தெரிவித்திருக்கக்கூடியஇந்தப்புதியகனவின்விளைவுஎப்படியாகப்போகின்றதோ?

சீன - அமெரிக்க பனிப்போர்

இலங்கை அதிபர் சீனாவின் வளர்ச்சியைப் போன்ற இலங்கையின் வளர்ச்சியைக் கனவு கண்ட சில வாரங்களிலேயே இலங்கை என்கிற நாடாவது மிஞ்சுமா என்கிற அச்சம், பீதியைக் கிளப்பிவிட்டுள்ளன அமெரிக்காவும் சீனா வும்.

இந்த இரு நாடுகளும் இலங்கையைமுன்வைத்து விடுத்துள்ள அறிக்கைகள் இலங்கையில் ஒரு அரசும் ஆட்சியும் இருக்கின்றனவா என்கிற கேள்வியையும் கூட எழுப்பியுள்ளன.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் போம்பியோவின் கொழும்பு வருகைக்கு சில மணி நேரங்களுக்கு முன்னராகக் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் விடுத்த அறிக்கையில் அமெரிக்காவுக்கு எதிராகக் கடுமையான விமர்சனம் முன்வைக்கப்பட்டது. இலங்கை - சீன உறவில் அமெரிக்கா தலையீடு செய் கின்றது என்று குற்றஞ்சாட்டியது சீன தூதரகம்.

அமெரிக்கச் செயலர் பொம்பியோவின் வருகையையொட்டி வோஷிங்டனில் கருத்து வெளியிட்ட துணைச் செயலார் டீன் தொம்சனின் கருத்துக்கள் வெளிப் படையாகவே தூண்டுவனவாகவும் தலையீடு செய்வனவாகவும் இருந்தன என்று தனது அறிக்கையில் சாடியிருந்தது சீனத் தூதரகம்.

சீனாவின் அறிக்கை, இலங்கை என்கிற எளிமையான நாட்டை அமெரிக்கா துன்புறுத்துவதாக அர்த்தப்படுத்தக்கூடிய வகையில் அமைந்திருந்தது. அது அவ்வாறு சொல்வதற்குக் காரணமும் இருந்தது.

அமெரிக்கத் துணைச் செயலர் வோஷிங்டனில் தெரிவித்த கருத்தில் வேட்டையாடும் விலங்கைப் போன்று இலங்கையை மோசமான ஒப்பந்தங்களுக் குள் சீனா சிக்க வைத்துள்ளது என்று அவர் தெரிவித்திருந்தார். மற்றொரு வகையில் சொன்னால் இலங்கையைச் சீனா சூறையாடுகின்றது என்று அமெ ரிக்கா தெரிவிப்பதாகவும் கொள்ளலாம்.

இதைத்தான் தூண்டி விடுகின்ற தலையீடு என்று சீறியது சீனா.

சீனாவைவேட்டையாடும்விலங்குக்கு ஒப்பிட்ட அமெரிக்கா, இலங்கைக்குத் தானொரு நல்ல நண்பன் என்று தன்னைத் தானே வர்ணித்துக்கொண்டது.

அதிபர் - பொம்பியோ சந்திப்பு

சீன - அமெரிக்க நாடுகளின் இந்த முதல் கட்ட அறிக்கைப் போரின் பின்னர் கொழும்பை வந்தடைந்தார் அமெரிக்கச் செயலாளர் பொம்பியோ. இந்தி யாவில் தனது அலுவலகப் பயணத்தை முடித்துக்கொண்டு அவர் இலங்கைக்கு வந்தார்.

அதிபர் கோட்டாபய ராஜபக்சவை விரைவிலேயே [illegible] அதன் பின்னர் அவரும் அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவும் [illegible] செய்தியாளர் சந்திப்பையும் நடத்தினர்.

> **வெளித் தோற்றத்திற்கு ராஜபக்சக்கள் சீனா பக்கம் சாய்வதைப் போன்று தோன்றினாலும், சீனாவிடம் இருந்து கடனுதவிகள் பலவற்றையும் பெற்றுக்கொண்டாலும் கிழக்கு மற்றும் மேற்குக்கு இடையிலான உறவுகளை அவர்கள் தெளிவாகவே கையாள்கின்றார்.**

அந்தச் சந்திப்பில், அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவையும் வைத்துக் கொண்டு அமெரிக்காவின் கருத்தை மீண்டும் அழுத்தி உரைத்தார் பொம்பியோ. இலங்கையைச் சீனா கெட்ட ஒப்பந்தங்கள் ஊடாகச் சூறையாடுகின்றது என்றார்.

கேட்டுக்கொண்டிருந்த அமைச்சர், அதற்கு மறுப்பெதுவும் தெரிவிக்கவில் லை. ஆனால், இலங்கைக்கு அனைவருமே நண்பர்கள் அனைவருடனும் நல் லிணக்கத்துடனேயே நடந்துகொள்வோம் என்றார் பவ்வியமாக.

அதிபருடனான பொம்பியோவின் சந்திப்பின் பின்னர் அதிபர் செயலகம் விடுத்த அறிக்கையில், இலங்கையைச் சீனா கடன் பொறிக்குள் வீழ்த்தவில் லை என்பதை விளக்கியதுடன் போருக்குப் பின்னரான காலத்தில் இலங்கைக்கு சீனா வழங்கிய உதவிகள் குறித்தும் எடுத்துக்கூறினார் என்று தெரிவிக்கப்பட் டது.

அதேநேரம் அமெரிக்காவின் முதலீடுகளை இலங்கை பெரிதும் வரவேற்பதாக வும் அதிபர் தெரிவித்திருந்தார் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந் தது.

பொம்பியோ வருகைக்குச் சில நாள்கள் முன்னதாகக் கொழும்புக்கு வந்தி ருந்த சீனத் தூதுக் குழுவினரைச் சந்தித்த அதிபர் கோட்டாபய ராஜபக்ச, சீனாவின் 'அபிவிருத்திப் பாணியைப் பின்பற்றித் துரித வளர்ச்சியை எட்டத் தான் எதிர்பார்க்கிறார் என்றார்.

இலங்கைக்குச் சீனா வழங்கிய கடன்கள் ஒரு பொறி என்று சொல்லப்படும் ஆய்வுகளைப் பொய்யானவை என்று நிரூபிப்பதற்கும் விரும்புகின்றார் என்றும் அவர் சீனத் தூதுக்குழுவிடம் தெரிவித்திருந்தார்.

நடுநிலை நாடகம்

1977இல் ஆட்சியைப் பிடித்த ஜே.ஆர்.ஜெவர்த்தன தனது அயலுறவுக் கொள்கையில் அமெரிக்காச் சாய்வை அதிகம் கடைப்பிடித்தார். அதன் விளைவாகத்தான் அப்போது சோவியத் ஒன்றியச் சாய்வைக் கொண்டிருந்த இந்தியா தமிழர்களின் போராட்டத்தைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு இலங்கையில் ஆயுத வன்முறையை வளர்த்துவிட்டது.

இதன் மூலம் சூடு கண்ட பூனையாகிய சிங்கள ஆட்சியாளர்கள், அதன் பின்னர் இது விடயத்தில் அதாவது கிழக்கையும் மேற்கையும் கையாளும் விடயத்தில் மிக நிதானமாகவும் தெளிவாகவுமே இருக்கிறார்கள். இது கத்தி யின் கூர் முனையில் நடப்பதற்கு ஒப்பான சித்துவிளையாட்டு என்பதைத் தெட்டத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

அதேசமயம், இந்த கிழக்கு மேற்கு சடுகுடுவிற்கு இடையில்தான் இலங்கையின் துரித வளர்ச்சியை நகர்த்த முடியும் என்பதிலும் தெளிவாக இருக்கின்றார்கள். அது ராஜபக்சக்களுக்கு மட்டுமேயான உத்தியல்ல. ரணில் விக்கிரமசிங்க ஆட்சியிலும் இதே உத்திதான் இருந்தது.

22 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● குமரன்

நாங்கள் என்ன செய்யிறது?

வர்த்தகர்களின் வேதனை

இன்றையநாளினைப்பொறுத்தவரை வடக்கு வாழ் தமிழரது உயிர்ப்பை பலதும் கேள்விக்குறியாக்கி வருகின்றன. அந்த வகையிலானது தான்வெளிமாவட்டவர்த்தகர்களின், வடக்கு நோக்கிய வருகையும் வர்த்தக நடவடிக்கைகளும். இவர்களது இந்த வர்த்தக நடவடிக்கைகளால் தாம் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றோம் என்கிறார்கள் உள்ளூர் வர்த்தகர்கள். அதுவும் கொரோனாவுக்குப்பின்னரான காலத்தில் தமது வருவாயில் பெரும் பகுதியை வெளிமாவட்ட வர்த்தகர்கள் களவாடி விடுகிறார்கள் என்றும் கடுமையாகச் சாடப்படுகின்றது.

எங்கட கடை இதில 20 வருசத்துக்கு மேல கிடக்குது. திறந்து கொஞ்சக்காலம் நல்லாத்தான் வியாபாரம் நடந்தது. பிறகு எங்களிட்ட இருக்கிற உடுப்புகள் இப்பத்தை பெம்பிளைப்பிள்ளையளுக்கு பிடிக்கேல்ல எண்டு உங்கால இடப்பக்கம் போனா சுன்னாகம் வரும் வலப்பக்கம் போனா யாழ்ப்பாணம் வரும் எண்டு சொல்லிக் கொண்டு பெரிய பெரிய கடையள கண்டிட்டு போக வெளிக்கிட்டினம். இருந்தும் எங்களிட்ட வாடிக்கையா வாங்கிறவை எண்டு கொஞ்சப் பேர் இருக்கினம் அவையள்தான் அனேகமா எங்களை நாடி வந்திச்சினம். ஆனா இப்ப அதுவுமில்லாம போயிடும் போல கிடக்கு. உங்க பாருங்கோ.. (300 மீற்றர் தொலைவிலிருந்த வீதியோரமாக விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வெளிமாவட்ட வியாபாரியின் கடையை காண்பித்தவாறு.) உப்பிடி கடையள போட்டா நாங்கள் எங்கயெண்டு போய் தொழில் செய்யிறது? எங்கடை குடும்பத்தை எப்பிடி காப்பாத்திறது?

கொந்தளிக்கிறார் 60 வயது முதியவரான சிவகடாட்சம்.

ஆலயங்களில் திருவிழாக்கள், மாபெரும் இசைக் கச்சேரிகள், கண்காட்சிகள் போன்ற சன நடமாட்டம் அதிகமுள்ள வேளைகளில் தமது வியாபாரத்தை பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணி வடக்கு நோக்கி வந்தவர்கள் எமது மக்கள் தங்கள் மீது கொண்ட அதீத பிரியத்தினாலோ என்னமோ தற்காலிக வியாபாரத்துக்காக வந்தவர்கள் தற்போது குடும்பமாகவே வந்து குடியேறி விடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பல வர்த்தகர்கள் கவலைப்படுகிறார்கள். வியாபாரப் போட்டி நிலையாக அதிகரிக்கின்றது என்பது அவர்களின் கவலை.

உணவகங்களில் ஆரம்பித்து ஆடைகள், பிளாஸ்டிக் பொருட்கள், மட்பாண்ட பொருட்கள், அலங்காரப்பொருட்கள், இலத்திரனியல்பொருட்கள் என்று இன்னும் பல வகையான பொருட்களை தமதுபிரதேசங்களில் இருந்து குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து கொண்டுவந்து வடக்கு மக்கள் வெகுவில் ஏமாந்து விடுவார்கள் என்ற நம்பிக்கையில் பல மடங்கு விலைகளுக்கு விற்பனை செய்கிறார்கள் என்று வர்த்தகர் ஒருவர் போட்டுத் தாக்கினார்.

மாலை வேளைகளில் சன நடமாட்டம் அதிகம் காணப்படும் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியை பார்க்கப் போனால், வண்ணார் பண்ணையில் ஆரம்பித்து கொக்குவில், கோண்டாவில், மருதனார்மடம், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப் பழைவரை படிரகவாகனங்களிலும், கார்களிலும், முச்சக்கர வண்டிகளிலும் கொண்டுவந்து அமைக்கப் பட்டிருக்கும் சிறிய சிறிய உடுபுடவை கடைகளையும், பிளாஸ்டிக் விற்பனை மற்றும் இலத்திரனியல் பொருள் விற்பனை நிலையங்களையும் காணலாம். அவை அனைத்துக்கும் உரிமையாளர்கள் வெளிமாவட்டத்தினர்.

இவர்களுக்கு வரும் வருமானத்தைப் பார்த்துவிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள சில பெரிய கடைக்காரரும் ஆளை வச்சு பாதையோரக் கடைகளைப் போடத் தொடங்கிற்றினம் என்கிறார் பாலேந்தி.

எங்களுக்கு எண்டு கடவுள் சதி செய்யிறார் போல. பள்ளிக்கூடம் தொடங்கிற காலம், பள்ளிக் கூடங்கள், ரியூசன்களில ஏதும் தினங்கள் நடக்கிற காலம், அதை விட கலியாண வீடு, பிறந்தநாள் எண்டு விசேங்கள் நடக்கிற காலங்களிலதான் எங்களுக்கும் வியாபாரம் நடக்கும். முக்கியமா நாங்கள் பரிசுப் பொருள்கள விக்கிறதால எங்களை தேடிச் சனம் வரும். ஒரு வருச கடைசியில எடுக்கிற புத்தகபாக் எல்லாம் அடுத்த வருசம் முடியிறதுக்குள்ள வித்து முடிஞ்சிடும். அப்பிடிதான் வியாபாரம் நடந்தது.

ஆனால் இப்ப விக்கிறதுக்கு எண்டு எடுக்கிற புத்தகபாக் முதற்கொண்டு எல்லாச் சாமானும் சரிக்கரைவாசி விக்காம கடைக்குள்ளையே கிடக்கு. ஒரு நாளில ஆயிரம் ரூபா வியாபாரம் நடக்கிறதே பெரிய விசயம். ஏனெண்டா இப்ப படி வாகனங்களில விதம் விதமா கொழும்பில இருந்து ஹான்ட் பாக், பள்ளிக்கூட பாக், ரவலிங் பாக், எண்டு கொண்டுவந்து ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு சந்தியில போட்டு விக்கிறாங்கள். இப்பிடி வித்தா நாங்கள் எங்கையண்டு போய் வியாபாரம் பாக்கிறது.. என்று தமது வியாபாரம் பாதிக்கப்பட்டு வருவதை கோபமாய் அள்ளிவீசுகின்றார். பான்சி பொருள்கள் விற்பனை நிலையத்தை நடத்திவரும் சிவதாஸ்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக மாநகராட்சி, உள்ளூராட்சி மன்றங்களிடம் முறைப்பாடு செய்தும் எந்தப் பயனும் இல்லை என்கிறார்கள் வர்த்தகர்கள்.

எங்களை யார் பாதுகாக்கப் போகிறார்கள் என்று ஏங்குகின்றனர் அவர்கள். கொரோனா ஒரு புறத்தில் கொன்றால், கொண்டு வருவோர் மறு புறத்தில் கொல்கிறார்கள் என்பதே அவர்களின் வேதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய்க்கிழமை காலையில
கொஞ்சம் கொஞ்சமா தான்
தண்ணீர் வந்தது, பேந்து பார்த்தா
இரவு எட்டுமணியிருக்கும்
திடீரெண்டு வீட்டச்சுத்தி
தண்ணீர்வர வெளிக்கிட்டுது,
கொஞ்ச நேரத்தில வீடு கடலுக்கு
நடுவில இருக்கிறமாதிரி வந்திட்டு.

தொடரும் அவலம்...!!

கஞ்ச வந்து ஒருவருசமாகீட்டுது.. இப்பிடி வாறது இதுதான் முதல்முறை. ஒண்டும் செய்யேலாதுளங்களுக்கெண்டுதலையில எழுதிவச்சுகிடக்கு போல... இராவோடு இரவா வீடுகளுக்குள்ள தண்ணி புகுந்ததால என்ன செய்யிறது ஏது செய்யிறதெண்டு தெரியாம திகைச்சுப் போயிட்டம். சின்னப் பிள்ளையளையும் வச்சுக் கொண்டு நாங்கபடுற கஸ்டம் சொல்லேலாது...

யாழ்ப்பாணம், கல்லுண்டாய் அரச குடியேற்றத் திட்டத்திற்குள் வாழும் ஒருவரின் உளக்குமுறல் இது.

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை காலை திடீ ரென கடல் நீர் இந்தப் பகுதிக்குள் நுழைந்ததால் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துகொண்டது. இரவு 08 மணிக்கு பின்னரான வேளையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உள்பட்ட ஜே.35, ஜே.36 கல்லுண்டாய் குடியேற்றத்திட்டப் பகுதியில் உள்ள வீடுகளே இவ்வாறு நீரில் மூழ்கின.

அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உவர் நீர்த் தடுப்பணையில் ஏற்பட்ட உடைப்பு காரணமாகவே கடல் நீர் கிராமங்களுக்குள் உள்நுழைந்துள்ளது.

யாழ்.குடாநாட்டின் நிலக்கீழ் தண்ணீரைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு நிலப்பகுதிக்குள் காணப்படும் தண்ணீர்க் கொள்ளிடங்களை நன்நீராக்கும் திட்டத்தோடு உருவாக்கப்பட்டதுதான் இந்த உவர் நீர் தடுப்பணைகள். தொண்டைமானாறு, செம்மணி, கல்லுண்டாய் ஆகிய பகுதிகளில் இந்தத் தடுப்பணைகள் அமைக்கப்பட்டுள்ளன. மழை நீரை இந்தப் பகுதிகளுக்குள் சேர்ப்பதன் ஊடாக இந்தப் பகுதியில் தேங்கியிருக்கும் கடல் நீரை நன்னீராக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம்.

இவ்வாறு சேகரிப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் உவராவதைத் தடுப்பதுடன் நிலத்தடி நீர்க்கொள்ளளவையும் அதிகரிக்க முடிகிறது.

இதற்காகக் கல்லுண்டாயில் அமைக்கப்பட்ட உவர் நீர்த் தடுப்பணையில் ஏற்பட்ட உடைப்பின் காரணமாகவே கடல்பெருக்கின்போது கடல் நீர் உள்நுழைவதற்கான காரணம் என்று அதிகாரிகள் கூறுகின்னர்.

கடல்நீர் திடீரென உள்நுழைந்ததால் வீடுகளுக் குள் தண்ணீர் புகுந்ததை அடுத்து பாதிக்கப்பட்ட மக்கள் அயல்வீடுகளில் அன்றிரவுதஞ்சமடைந்தனர்.

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் பல்வேறு பகுதிகளிலும் நிரந்தர வீடுகளின்றி வாழ்ந்து வந்த வர்களுக்கு, சொந்தமாக குறிப்பிட்ட அளவு பரப்பு டைய காணித் துண்டும் 10லட்சம் ரூபா பெறுமதியான நிரந்தர வீடுகளும் கல்லுண்டாயில் அமைக்கப் பட்டுள்ளன. இங்கு 80 வீடுகள் அவ்வாறு கட்டப்பட் டுள்ளன. எனினும் முழுமையாக மக்கள் இன்னும் இங்கு குடியேறிவிடவில்லை. ஒரு சில வீடுகள் இன் னும் ஆட்களின்றியே உள்ளன.

குடிதண்ணீர்வசதி, பாதைவசதிகள் போன்றன சரியான முறையில் செய்துகொடுக்கப்படாமையே குடியேற்றம் முழுமையடையாமைக்குக் காரணம் என்று மக்கள் கூறுகின்றனர். இவற்றைச் சகித்துக் கொண்டு குடியேறியவர்கள் மாரிகாலங்களில் தண் ணீரில் தத்தளிக்கவேண்டிய நிலையே காணப்படு கின்றது.

செவ்வாய்க்கிழமை காலையில கொஞ்சம் கொஞ்சமா தான் தண்ணீர் வந்தது, பேந்து பார்த்தா இரவு எட்டுமணியிருக்கும் திடீரெண்டு வீட்டச்சுத்தி தண்ணீர்வர வெளிக்கிட்டுது, கொஞ்ச நேரத்தில வீடு கடலுக்கு நடுவில இருக்கிறமாதிரி வந்திட்டு. கடல்தண்ணி என்னண்டோ குடியேற்றத்துக்குள்ள வந்திட்டுது எண்டது மட்டும் விளங்கீட்டு, இரவோட இரவா யார் யாருக்கெல்லாம் அறிவிக்கவேணுமோ எல்லாருக்கும் அறிவிச்சிட்டு, தண்ணீர் புகாம

இருந்த பக்கத்துவீடுகளுக்கு போயிட்டம். அறிவிச்சு கொஞ்ச நேரத்திலயே பொலிஸ், ஆமி உட்பட கனபேர் வந்திட்டினம் கடற்றொழில் அமைச்சருக்கும் இது தொடர்பா அறிவிச்சம் உடனடியா எங்களுக்கு தேவையான பாதுகாப்பை குடுக்கச்சொல்லி அவர் அறிவிச்சாதால இரவிரவா எங்களுக்கு எந்த பிரச்ச னையும் வராத மாதிரி பொலிஸ் பாதுகாப்புக் கொடுத்தது. நாங்களும் இரவிரவா நித்திர முழிச்சு தான் இருந்தம், பேந்து விடியதான் அரச அதிபர் முதற்கொண்டு எல்லாரும் வந்திச்சினம் வந்து இப்ப எங்களுக்கு இந்த கடல் தண்ணீர் குடிமனைக்குள்ள வரமா இருக்கிற அளவுக்கு தற்காலிகமா மண்அணை செய்து தாறம் எண்டு வேலைதிட்டம் நடந்து கொண் டிருக்குது.. எப்பிடியெண்டாலும் நிரந்தரமா நாங்கள் இஞ்சதான் இருக்கப்போறம், அதுக்கேற்றமாதரி வழிவகை செய்து தரவேணும் எண்டுறது தான் எங் கடைகோரிக்கை..என்றவாறுகடல்நீர்உட்புகுந்தமை யால் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்..

எங்களுக்கெண்டு ஒரு நிரந்தர வீடு வேணும் எண்டுதான், அரசு தாறத வேண்டாம் எண்டகூடாது [illegible] ஆனால் இப்ப சரியா கஸ்டப் வேண்டிக்கிடக்கு.

இந்த கடல்நீர் பிரச்சினை இப்ப திடீர்எண்டு வந்தது தான். ஆனால், முக்கியபிரச்சினை பக்கத்தில இருக் கிற குப்பைமேடு.. பகல் நேரத்தில வீட்டில இருக்கே லாது அந்தளவுக்கு இலையான். சாப்பிடவோ, நித் திர கொள்ளவோ, ஒரு விசேசம் செய்யவோ ஏலாது அந்தளவுக்கு பகலில இலையான் தொல்லை. அதே போலதான் இரவில, வண்டு, லைட் போட்டா உடனும் வீடு முழுக்க வண்டாதான் கிடக்கும் லைட்ட நிப் பாட்டிபோட்டுதான் இருக்க வேணும். இதுகள் போக, காத்து வளம் மாறி அடிக்கத்தொடங்கினா, குப்பை மேட்டில இருந்து வாற மணம் அதை வார்தையால சொல்லேலாது. இப்பிடி நெடுகலும் நாங்கள் கஸ்டப் படவேண்டிக் கிடக்குது. இந்த கடல்நீர் புகுந்ததுக்கு பிறகு கன அரசியல்வாதிகளில இருந்து பெரிய பெரிய ஆக்கள் எல்லாம் வந்து போயினம் எல்லாரும் எங்கடை பிரச்சினைக்கு தீர்வு பெற்றுதாறம் எண்டனம் பொறுத்திருந்துதான் பாக்கவேணும் என்கிறார் அந்தப்பகுதியில் வசிக்கும் ரசித்தா.

ஆனைக்கோட்டை, சாவல்காடு, குருநகர், கொட்டடி போன்ற பகுதிகளில் அரச காணிகளில் பலகாலமாக வசித்துவந்தவர்களே இந்த கல் லுண்டாய் குடியேற்றத் திட்டப் பகுதியில் கடந்த ஆண்டு ஏப்பரல் மாதமளவில் குடியேற்றப்பட்டி ருந்தனர். கடற்றொழில், மேசன், கூலிவேலை போன்ற தொழில்களை வாழ்வாதாரமாக கொண் டிருக்கும் இவர்களுக்கு மற்றைய பிரச்சினைக ளைத் தாமாகவே தீர்த்துக்கொள்ளும் சக்தி கிடையாது.

இப்பிடி தண்ணீர் ஊருக்குள்ள வாறது இது தான் முதல் முறை, என்ன காரணம் எண்டு தெரி யேல்ல.. முதல் மழை பெய்யேக்க ஊருக்குள்ள நிண்ட தண்ணியை வெளியேற்ற உவர் நீர்த் தடுப்பணையிலை சின்னதா வெட்டி விட்டிருக்கினம் போலக் கிடக்கு. அது திடீர் எண்டு கடல் நீர் மட்டம் உயர்ந்ததால அணை உடைச்சுக் கொண்டு ஊருக் குள்ள வந்திட்டு. இப்ப தற்காலிகமாகத் தண்ணி உள் ளுக்குள்ள நுழையாம இருக்கிறதுக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தோட சேர்ந்து மண் அணை கட்டிறம், இதுக்கான நிதி ஒதுக்கப்பட்டா தான் நிரந்தரமான அணை ஒன்றை அமைக்க முடியும், அதே போல குப்பை மேட்டுபிரச்சினையும் சனத்துக்கு பாதிப்பா தான் இருக்குது. இருந்தும் அது தொடர்பாக வழக்கு நடக்குது. அந்த வழக்கிண்டை தீர்ப்புதான் இது தொடர்ந்து இங்கையே இருக்கிறதா அல்லது அகற் றுறதா எண்டதை தீர்மானிக்கும்.. என்று குறித்த பகுதி கிராம சேவகர் க.சுதர்சன் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் அரச காணிகளில் சிறிய கொட்டில் கள் அமைத்தும், தற்காலிக வீடுகளிலும் வசித்த வர்கள், நிரந்தர வீடு, காணி கிடைத்துவிட்டது என்று எண்ணி சந்தோசப்படுவதா அல்லது நிரந்தர வீடு கிடைத்தும் இங்கும் பல துன்பங்களை அனுபவிப் பதை எண்ணி நொந்துகொள்வதா எனத் தெரியாது தொடர்ந்தும் அல்லலுறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையல் சமையல்

சோளச் சுண்டல்



சுண்டல் என்றாலே நமக்கெல்லாம் ஞாபகத்துக்கு வருவது கடலைச் சுண்டல்தான். சரஸ்வதி பூசைக் காலம் தற்போதுதான் நிறைவடைந்திருக்கிறது. கிட்டத்தட்ட பத்து நாள்கள் வரை இந்தக் காலத்தில் பலரும் சுண்டலைச் சுவைத்திருப்பீர்கள். தவிர தள்ளுவண்டில்களிலும் தாராளமாகக் கிடைக்கிறது இந்தச் சுண்டல். சுண்டிச் சமைப்பதால் (அவித்தல், பொரித்தல்போல சுண்டிச் சமைத்தலும் சமையலில் ஒரு வகை) இது சுண்டல் என்று பெயர்கொள்கிறது. நாம் நெல் அரிசிச் சோற்றைப் பிரதான உணவாகக் கொள்வதுபோல ஆபிரிக்கர்கள் சோளத்தைத் தான் சோறுபோல உண்கிறார்கள். அத்தோடு அதைப் பலவடிவங்களில் சமைத்துண்கிறார்கள். சோளனை மூலப் பொருளாகக் கொண்ட பல உணவுகளை ஆக்கி உண்கிறார்கள். இப்போது யாழ்ப்பாணம் தொடங்கி இலங்கை முழுதும் கூடத் தெருக்கள் தோறும் சோளப் பொத்திகளை அவித்து அடுக்கி வைத்துக் காட்சிப்படுத்திப் பலரும் விற்பனையில் ஈடுபட்டு வருகிறார்கள். எனவே இந்தச் சோளனைக் கொண்டு தயாரிக்கின்ற உணவு ஒன்று குறித்து இம்முறை பார்ப்போம். கடலைச் சுண்டல்போலத்தான் இந்தச் சோளச் சுண்டல். இந்தச் சோளச் சுண்டலை நாமும் ஒருதடவை சமைத்து ருசித்துத் தான் பார்ப்போமே!

என்னென்ன தேவை?

சோளப் பொத்திகள்(5அல்லது6), வெண்ணெய் 2மேசைக் கரண்டியளவு, கடுகு - 1 கரண்டி, மிளகு - 10, துருவிய தேங்காய்ப் பூ ஒரு மேசைக்கரண்டி, பாதித் தேசிக்காய், சீனி சிறிதளவு, கொத்தமல்லித் தழை (நறுக்கியது) - சிறிதளவு.

எப்படிச் செய்வது?

சோளப் பொத்திகளை அவித்து அவற்றிலிருந்து சோள மணிகளை உதிர்த்து எடுத்துக்கொள்ளுங்கள். (உதிர்த்த சோளமணிகள் கடையில் கிடைக்கிறது தேவையானால் அதை வாங்கி அவித்து எடுத்துக் கொள்ளலாம்). அவித்தவற்றை இரண்டு டம்ளர்கள் (நீளமான டம்ளர்கள்) அளவில் அளந்து எடுத்துக் கொள்ளுங்கள். தேங்காய்த்துருவல், மிளகு, உப்பு, சர்க்கரை ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து அரையுங்கள். சட்டியை அடுப்பில் வைத்து வெண்ணெய் விட்டு அது காய்ந்ததும், கடுகு சேர்த்துக் கொள்ளுங்கள். கடுகு பொரிந்துவரச் சோளம், அரைத்த தேங்காய்க் கலவை ஆகியவற்றைப் போட்டு வதக்குங்கள். வதங்கியதும் இறக்குங்கள். இறக்கியதும் தேசிப் புளியைப் பிளிந்து விடுங்கள். இப்போது நன்றாகப் பிரட்டுங்கள். சோளத்தின் இயற்கையான வாசனையோடு நன்றாக இருக்கும். விருப்பமானால் கொத்தமல்லித் தழைகளைத் தூவி அலங்கரிக்கலாம்.

காட்டூன்



இந்த வார சுடோக்கு

			4	5		8		
		6	3		9			2
4	2							7
9		2					8	
		3	2	1	8	7		
	5					1		4
7							9	5
2			5		7	3		
		1		2	3			

இந்த சுடோக்கு விளையாட்டுத் தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 09 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக் கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

செம்மண்
சுடோக்கு
551A, கஸ்தூரியார் வீதி,
யாழப்பாணம்.

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றி பெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

5	4	2	6	8	1	9	7	3
9	6	7	3	4	5	2	8	1
8	1	3	9	2	7	6	5	4
2	9	1	7	3	8	5	4	6
6	3	5	2	1	4	7	9	8
7	8	4	5	9	6	3	1	2
3	2	8	4	5	9	1	6	7
4	5	6	1	7	3	8	2	9
1	7	9	8	6	2	4	3	5

கடந்த வார சுடோக்கிற்கான சரியான விடைகளை எழுதிய வெற்றியாளர்.

த.மோகனரூபன்,
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அமெரிக்காவின் அடுத்த அதிபர் யார்?

அமெரிக்காவை இனிவரும் 4 ஆண்டுகள் வரை ஆள்வதற்கான அதிபரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் கார்த்திகை மாதம் (நவம்பர்) 3ஆம் திகதி நடக்கவிருக்கிறது. 2016ஆம் ஆண்டு நடந்த அந்த நாட்டு அதிபர் தேர்தலில் அமெரிக்கக் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற டொனால்ட் ட்ரம்ப் இந்தத் தேர்தலிலும் போட்டியிடுகிறார்.

ட்ரம்பை எதிர்த்து அமெரிக்க ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பைடன் போட்டியிடுகிறார். அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில், துணை அதிபராக இருந்தவர் இவர். அதற்கு முன்பிருந்தே அமெரிக்க அரசியலில் இருந்து வருபவர்.

இவர்கள் இருவரைத் தவிரவும் அதிபர் வேட்பாளர்களாக அங்கு பலர் களமிறங்கியிருந்தாலும், அமெரிக்காவின் அரசியல் வரலாற்றில் அந்த நாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகள் சார்பாகப் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் ஒருவரே வெற்றியீட்டி வருகின்றனர். அமெரிக்க அரசியலில் இவ்விரு கட்சிகளுமே மாறி மாறி ஆட்சியமைத்தும் வருகின்றன. சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்று அதிபரான ஜோர்ச் வோஷிங்டன் மாத்திரம் இதற்கு விதிவிலக்கு.

கருத்துக் கணிப்புகள்

தேர்தல் பரப்புரைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில், தேர்தல் குறித்த கருத்துக் கணிப்புகள் பல நடத்தப்பட்டு முடிவுகள் வெளிவந்துள்ளன. இந்தக் கருத்துக் கணிப்பு முடிவுகளின்படி ஜோ பைடனே அதிக வாக்குகளைப் பெற்று முன்னிலையில் நிற்கிறார்.

மிகப்பிந்தியகணிப்புஒன்றின்படிபைடன் 51வீத வாக்குகளையும் ட்ரம்ப் 43வீத வாக்குகளையும் பெறுவார்கள் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி பைடனுக்கே அதிக வாக்குகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இப்படியிருக்க, ட்ரம்பே மீண்டும் அதிபராவார் என்கிற எதிர்பார்ப்பும் இங்கு சேர்ந்து நிலவுவதுதான் ஆச்சரியமான விடயம். இதற்கு வலுவான காரணங்கள் இருக்கவே செய்கின்றன. கடந்த தேர்தலும் இதற்கு நல்லதொரு படிப்பினை. அத்தோடு அமெரிக்கத் தேர்தல் களமும் சற்று வித்தியாசமானது.

கடந்த தேர்தல் படிப்பினை

இறுதியாக 2016ஆம் ஆண்டில் நடந்த அதிபர் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று முன்னிலை வகித்தவர் ட்ரம்புக்குப் போட்டியாகக் களமிறங்கிய ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனே. ட்ரம்பை விட அவர் கிட்டத்தட்ட மூன்று மில்லியன் வாக்குகள் அதிகம் பெற்றார். ஆனாலும் அவர் தேர்தலில் வெற்றிபெறவில்லை. ஏனென்றால், அமெரிக்கா 'எலக்டோரல் காலேஜ்' வாக்குகள் எனப்படும் வாக்காளர் தொகுதிகள் முறையைப் பின்பற்றுகிறது. எனவே, அதிக வாக்குகளைப் பெறுவது என்பது அங்கு வெற்றியைத் தீர்மானிப்பதாக இருக்காது.

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றியை முடிவு செய்வது மக்கள் செலுத்துகின்ற வாக்குகள் மாத்திரம் அல்ல. அங்குள்ள மாநிலங்கள் ரீதியாக வேட்பாளர் ஒருவர் பெறுகின்ற வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கின்றன. அங்குள்ள 540 தேர்தல் குழு வாக்குகளில் 270 வாக்குகளைப் பெறுபவரே அதிபராக அரியாசனத்தில் அமர்வார். இதைத் தீர்மானிப்பது குறிப்பிட்ட சில மாநிலங்களே. இந்த மாநிலங்களை இனங்கண்டு காய்நகர்த்தினாலேயே வேட்பாளர்களால் வெற்றிக் கனியைப் பறித்துக்கொள்ள முடியும்.

வெற்றியைத் தீர்மானிக்கின்ற மாநிலங்கள்

தபால் மூலமாகவும், நேரிலுமாகக் கிட்டத்தட்ட 5 கோடி வாக்காளர்கள் வாக்களித்துவிட்டனர். இன்னமும் வாக்களிக்காத சில மாநிலங்களும் அங்கு இருக்கின்றன. இந்த நிலையில் பைடன் - ட்ரம்ப் இருவருக்கும் இடையிலான இறுதி விவாதம் ஒன்று நடந்தது. அந்த விவாதமானது வெறும் 3 சதவீத வாக்குகளைக் கொண்ட மேற்படி வாக்களிக்காத மாநிலங்களை மையப்படுத்தியே அமைந்தது. ஆனால் இந்த மாநிலங்கள் வெற்றியைத் தீர்மானிப்பவையல்ல.

இந்த விவாதத்தின் போது ட்ரம்ப்பின் பார்வை எல்லாம் பென்சில்வேனியா, மிச்சிக்கன், வடகரோலினா போன்ற இந்தத் தீர்மான மாநில வாக்காளர்களின் மீதே இருந்தது. அந்த மாநிலங்களில் உள்ள கறுப்பின ஆண்கள் பெருமளவில் வாக்களித்தால் அது தனது வெற்றிக்கு உகந்ததல்ல என்ற நோக்கத்தோடு, பைடன் - ஒபாமா கொண்டுவந்த தீர்மானங்களால் பல கறுப்பின ஆண்கள் சிறைப்படுத்தப்பட்டனர் என்று தாக்கிப் பேசினார் ட்ரம்ப்.

ட்ரம்ப்பின் வெற்றிக்கு அவசியம் பென்சில்வேனியா மாநிலத்தின் 20 வாக்குகளே. இந்தத் தீர்மான மாநிலங்களில் கொரோனாவால் பாடசாலைகளும், பல தொழில்களும் முடங்கியிருப்பது தொடர்பான கருத்து வேறுபாடுகளும் இந்த விவாதத்தில் இடம்பெற்றது. கொரோனாவோடு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். நாட்டை மூடக்கினால் அமெரிக்கா அழிந்துவிடும் என்ற ட்ரம்ப்பின் நிலையை ஆதரிப்போர் கணிசமாக உள்ளனர். எனவே 2 இலட்சத்து 23 ஆயிரம் அமெரிக்கர்கள் இறந்துள்ள நிலையில் தொற்றோடு வாழக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பவர் அதிபராகத் தொடர்வதற்குத் தகுதியற்றவர் என்பதாகப் பைடனின் வாதம் அமைந்தது.

தேர்தல் நெருங்கிவரும்போது குண்டு!

இதுவரையான கருத்துக் கணிப்புகளில் பைடனே முன்னிலை வகிக்கிறார். ஆனாலும் அவர்தான் வெல்வார் என்று அறுதியிட்டுவிட முடியாது. கடந்த தேர்தலில் பின்னடைவைச் சந்தித்திருந்த ட்ரம்ப்பை இறுதியில் வெற்றிபெற வைத்த தீர்மானகர மாநிலங்கள் என்று குறிப்பிடப்படுகின்ற மாநிலங்களின் தீர்ப்பே அதைத் தீர்மானிக்கும்.

கடந்த தேர்தலில் கிளாரி கிளின்டனுக்கு நடந்ததும் அதுதான். இருப்பினும் இந்த மாநிலங்களின் செல்வாக்கும் பைடன் பக்கமே சாய்ந்துள்ளன என்று கூறப்படுகிறது. இதனால், ஆட்சியிலுள்ள அதிபர் ட்ரம்ப் தேர்தல் நெருங்கி வருகின்ற இறுதித் தருணங்களில் பைடனைக் குறிவைத்துப் பல குண்டுகளை வீசிச் சூழலை மாற்றியமைப்பார் என்று அரசியலவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

அதாவது 2016ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் 10 நாட்களுக்கு முன்பு ஹிலாரி கிளின்டனின் மின்னஞ்சல்கள் தொடர்பான அமெரிக்கப் புலனாய்வுத் துறையின் விசாரணை அறிவிக்கப்பட்டு அதன் விளைவாகவே அவரின் தோல்வி சாத்தியப்பட்டது. அதேபோல பைடனின் மகன் ஹண்டர் பைடன், உக்ரைன் நாட்டுடன் வைத்திருந்த தொழில் தொடர்பில் பல ஊழல்கள் உள்ளன என்றும் அவற்றுக்கும் ஜோ பைடனுக்கும் தொடர்புண்டு என்றும் பல குற்றச்சாட்டுகளை ட்ரம்ப் தரப்பு முன்வைத்து வந்தது.

அதையொட்டிய குண்டுகளை இறுதி நேரத்தில் ஆளும் ட்ரம்ப் தரப்பு வீசலாம் என்பது அரசியலாய்வாளர்களின் கணிப்பு. அத்துடன் தேர்தல் நாளுக்குச் சற்று முன்பு கொரோனாவுக்குத் தடுப்பூசி கண்டு பிடித்து அனுமதி அளிக்கப்பட்டுவிட்டதாக ட்ரம்ப் தரப்பு அறிவித்தாலும் அறிவிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் கடைசி நிமிடத்தில் வாக்காளர்களைத் திசை திருப்பக் கூடிய வாய்ப்பு ட்ரம்புக்குக் கிடைக்கும். எது எப்படியிருப்பினும் முடிவை முடிவில்தான் நாம் தெரிந்துகொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனாக் குறள்

சீனாக் கொரோனா சீறிடும் நாட்டினில்
தானாக நிற்பாய் தனித்து.
தனித்துநீர் நின்றிடில் தொற்றாதாம் நன்றே
தனித்துநீர் செய்வீர் தவம்.
தும்மல் இருமல் தொடர்ந்திடும் போதினில்
கம்மென் றிருக்காதே காட்டு.
மெல்லிய காய்ச்சலில் தேகம் உளைகையில்
சொல்லிய பாட்டினில் செய்.
தொட்டால் கரத்தைநீ தொடர்ந்து கழுவிடு
விட்டால் விரைவாய் விசும்பு.
கைகொடுத்தல் தன்னைக் களைந்திடு தண்புவியில்
கைகூப்பி நிற்பாய் கனிந்து.
உன்கையே உன்தனுக்கு ஊறுசெய்யும் ஆதலினால்
முன்கையை வையாய் முகம்.
மூக்கொடு வாய்தன்னை மூடுதல் நன்றாமுன்
போக்கொடு போகாமல் பேண்.
முகத்தின்கண் மாஸ்குளன் ஆதல் அனைவர்
சுகத்தினைக் காக்கும் சுவர்.
தொற்றைத் தவிர்க்கும் உபாயங்கள் சொன்னோம்
உற்றதை நோக்கி உணர்.
சொல்லிய வண்ணம் செயல்கள் புரிந்திடில்
இல்லையோர் ஊறுனக்கு இங்கு.

நா.நவராஜ்

Price: Rs. 1150 (Islandwide Free Delivery for ezcash Payment)
விபரங்களுக்கு அழையுங்கள்: 0769 355 944
யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
'யாழ் முற்றம்' - இல: 461, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி உப தபால் நிலையம் அருகில்)

செருக்குநடைச் சிங்கங்களும் அலங்கார மயிலும்...!!

முறைத்தும் விரட்டியும்
உறுமிக் கடித்து
தாக்குவதாயும்
நாலு கொழுத்த
சிங்கங்களின் வாயில் அகப்பட்டது
ஒரு வண்ணமயில்

தோகை நீண்டு
கொண்டை பெருத்த
அந்த அலங்கார மயிலின் மீது கொண்ட
சில்லறைக் காதலுக்காகவோ
அல்லது,
பல்லிடுக்கிலிருந்து கிளறித்துப்பும்
சதைத்துண்டுக்காகவோ
அல்லது,
ஏப்பங்களின் பின்னரான
எலும்புத் துண்டுக்காகவோ
சிறைப்படுத்தி இறகுபிடுங்கும்
முயற்சியில் திளைத்திருக்கின்றன
சிங்கங்கள்...

குத்திக்கிழித்தும்
புரட்டிப் புரட்டி தூக்கிஎறிந்தும்
மிரட்டிப் பார்கின்றன சிங்கங்கள்
இருந்தும்,
இதுவரை உள்ளிருந்தோ
வெளியிருந்தோ எதுவும்
உதிர்ந்ததைக் காணாத சிங்கங்கள்.

தம் பல்லிடுக்கில்
சிக்கியிருந்த சதைத்துண்டுகளை
துடைத்தெறிந்து
குடித்துத் தாங்கெட்டுப்போன
குருதிக் கறைகளை
வெற்றிப்பாலென்று கூறி

இன்னும் வீராப்போடு
வேட்டைப் பற்களையும்
விரல் நகங்களையும் நன்கு தீட்டி
அங்குசத்தை மயிலின் (அடுத்தவன்)
கடைவாய்ப்பல்லுக்குள் இட்டு
துலாவுகின்றன
பற்களின் கறை பற்றி ஆராய்ந்து
அறிக்கைவிட....

வானொலி நிகழ்ச்சி (பக்க)

பட் வுமன்

ஹொலிவூட் திரைக் கலையகங்களில் ஒன்றான டி.சி. கொமிக்ஸ், பட் வுமன் கதாபாத்திரத்தின் முதல் பார்வைச் சுவரெட்டியை வெளியிட்டுள்ளது. டி.சி. கொமிக்ஸின் புகழ்பெற்ற கதாபாத்திரமான பட் மான் (ஆண் சுப்பர் ஹீரோக்கள்) கதாபாத்திரம், திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சித் தொடர்களாக வெளியாகிப் பெரும் வரவேற்பைப் பெற்ற நிலையில் அதுவே தற்போது பெண் கதாபாத்திரமாக அறிமுகமாகிறது. பெண் கதாபாத்திரமான இதற்குத் தனியே கொமிக்ஸ் கதைகள் எழுதப்பட்டிருந்தபோதிலும் திரைப்படங்கள் எடுக்கப்படவில்லை. கார்ட்டூன் வடிவில் திரைப்படங்கள் வெளியாகியிருந்தாலும் அவை கூட வரவேற்பைப் பெறவில்லை. இந்தச் சூழலில் பட் வுமன் கதாபாத்திரத்தை முன்னிறுத்தி டி.சி கொமிக்ஸ் 2019 ஆம் ஆண்டு ஒரு வெப்சீரிஸை வெளியிட்டது. இது ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. இதனால் இந்த ஆண்டு அதன் இரண்டாம் பாகம் வெளியாகவிருந்தது. அது கொரோனா அச்சுறுத்தலால் அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதில் கருப்பினத்தைச் சேர்ந்த பெண்ணான ஜவிசியா லெஸ்லி பட் வுமனாக நடிக்கவுள்ளார். இதற்கான முதல் பார்வைச் சுவரொட்டியையே தற்போது டி.சி. வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

800 ஆல் என் உயிருக்கு ஆபத்து!

இலங்கைக் கிரிக்கெட் வீரர் - சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படமாக 800 என்ற பெயரில் விஜய் சேதுபதி நடிப்பில் உருவாக இருந்த திரைப்படம் நின்றுபோனது. அந்தத் திரைப் படத்தில் விஜய் சேதுபதி நடிப்ப தற்குத் தமிழ்த் திரையுலகத்தைச் சேர்ந்த பலரும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இந்தத் திரைப்படம் தொடர் பாகக் கருத்துகளை வெளியிட்ட தால் பலரும் தன்னைத் தொலை பேசியில்மிரட்டுகிறார்கள்,அதனால் தனதுஉயிருக்கு ஆபத்துஏற்பட்டி ருக்கிறது என்று அந்தப் படத்தை இயக்கவிருந்த சீனுராமசாமி தெரி வித்திருக்கிறார்.

தென்மேற்குப் பருவக்காற்று, கண்ணே கலைமானே உள்ளிட்ட படங்களை இயக்கிய அவர், தனது கீச்சகப் பக்கத்திலேயே இந்தக் கருத்தைப் பதிவிட்டுள்ளார். மேலும் முதல்வர் அய்யா தனக்கு அவசரமாக உதவ வேண்டும் என் றும் குறிப்பிட்டிருந்தார். இதையடுத்து குரல் பதிவு மூலம் மட்டும், தனக்கு ஆபத்து இருப்பதாகவும் தன்னைக் காப்பாற்றும்படியும் கூறினார். தற்போது அவரது வீட்டிற்குச் சென்ற ஊடகவியலாளர்களிடம் 800 விவகாரத்திற்குப் பிறகு தனக்குத் தொடர் தொலைபேசி மிரட்டல்கள் வருகின்றன, தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அத்தோடு , "விஜய் சேதுபதி இந்தப் படத்திலி ருந்து விலக முடிவெடுத்து 'நன்றி வணக்கம்' எனப் பதிவிட்டதும் அவரை தொலைபேசியில் அழைத்து 'இதற்கு என்ன பொருள்? என்றேன். அதற்கு விஜய் சேதுபதி, இந்தக் கதை பிடித்துத்தான் நடிக்க ஒப்புக்கொண்டேன். பிறகுதான் அதில் அரசியல் விமர்சனம் இருப்பது புரிந்தது. என்ன செய்வதெனத் தெரியாத சூழலில் தயாரிப்பு நிறுவனமே தனது முடிவை அறிவித்தது. ஆகவே 'நன்றி வணக்கம்' எனத் தெரிவித்தேன் என்றார்.

அதற்குப் பிறகு நான் ஏதோ விஜய் சேதுபதிக்கு எதிராகச் செய்தி வெளியிட்ட தாகக் கருதி, தொடர்ந்து தொலைபேசியில் அழைக்கிறார்கள். வாட்ஸ் அப்பில் அழைக்கிறார்கள், பயமுறுத்திக்கொண்டே இருக்கிறார்கள். எதற்காக இதைச் செய்கிறார்கள் என எனக்குத் தெரியவில்லை. இதையடுத்து பதற்றம் ஏற்பட்ட தால் அவ்வாறு பதிவிட்டேன்" என்றுள்ளார்.

தரை மேற்பரப்பின் தூய்மையைப் பேணுவதற்கு சன் தரைக் கிருமி நீக்கித் திரவத் தெளிப்பான்!

இலங்கையில் மிகப் பிரபலமான "சூர்யா" என்கிற வர்த்தக நாமத்தின் கீழ் வீட்டுப் பாவனைப் பொருள் களைத் தயாரிக்கும் நிறுவனமான சண் மச் கொம்பனி (தனியார்) வரைவுள்ளது நிறுவனம், "சண்" என்கிற வர்த்தக நாமத்தின் கீழ் புத்தம் புதிய பொருள்களை அறி முகம் செய்துள்ளது.

நிறுவனத்தின் தலைவர் தேசமான்ய சூரிராஜன் மற்றும் பணிப்பாளர் கௌரிராஜன் அவர்களினால் இவை அறிமுகப் படுத்தப்பட்டன.

மக்களின்நம்பிக்கையைவென்றுபுதிதுபுதிதாகப் பொருள் களை உருவாக்கும் இந்த நிறுவனம் தற் போது நோய்க் கிருமிகளை இல்லாதொழிக்கும் பாதுகாப்புப் பொருளை புத்துணர்ச்சியூட்டும் நறுமண த்துடன் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தப் பொருளின் முக்கியத்துவம் மற்றும் அவ சியம் குறித்து நிறுவனத்தின் பணிபாளர் கௌரி ராஜன் அவர்கள் கிருமி நீக்கித் திரவத்தின் அறிமுக நிகழ்வில் விளக்கினார். "உலகில் பெரும் கொள்ளை நோயாகப் பரவி வரும் கொரோனா குறைவதற்கான சாத்தியக்கூறுகளைக் காணமுடியவில்லை. இதி லிருந்து பாதுகாப்புத் தேட கைகளை மீண்டும் மீண் டும் கழுவுங்கள், உடமைகளைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருங்கள் என்று உலக சுகாதார அமைப்புமீண்டும் மீண்டும் வலியுறுத்துகின் றது. சந்தையில் குவிந்துகிடக்கும் பல்வேறு வகை யான பொருள்களுக்கு மத்தியிலிருந்து எமது உயிரை, வாழ்வைப் பாதுகாப்பதற்கான தரமான பொருள்க ளைத் தெரிந்தெடுக்கவேண்டிய நிர்ப்பந் தம் எமது முன் உள்ளது. அதனால்தான் மக்களின் நம்பிக்கையை வென்ற நிறுவனமான சண் மச் "ஆரோக்கியமான வாழ்வு. ஆரோக்கியமான தேசம் என்கிற எமது தொலைநோக்கோடு சமரசங்களுக்கு அப்பாற் பட்ட தரத்தை உறுதிப்படுத்தியபடி சண் தரைக் கிருமி நீக்கித் திரவத் தெளிப்பானை அறி முகப்படுத் தியுள்ளோம். லெமன் மற்றும் ஜஸ் பைன் நறுமணங் களுடன் புத்துணர்ச் சியூட்டும் வகையில் இவை சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன" - எனத் தெரிவித்தார்.

இந்த தயாரிப்பு உணவு தர உற்பத்தியாக்கமா கச் சான்ற ளிக்கப்பட்டது, 'சன்' வர்த்தக நாமம், தரைமேற்பரப்பில்தண்ணீரைப்பயன்படுத்தாமலேயே 99.9 சதவீதமான கிருமிகளையும் மொத்தமாக நிர்மூலமாக்குவதற்கு உத்தரவாதம் அளிக்கிறது. கிருமிகளுக்கு எதிரான அகல் நிரல் உயிரியல் செயல்பாடு எனப் படும் தொழில்நுட்பத்தின் பயன் பாட்டின் ஊடாகச் இந்தச் செயற்பாடு இடம்பெறுகின் றது.

புதுமைகளுக்கு முன்னிடம் அளிப்பதால், சந் தையில் குவிந்து கிடக்கும் சாதாரணமாக கிருமி கொல்லிகளில் இருந்து இது முற்றிலும் வேறுபட்ட பரிமாணத்தைக் கொண்டிருக்கின்றது. இதன் லெமன் மற்றும் ஜஸ் பைன் நறுமணம் ஒவ்வொரு வரின் உணர்வுகளையும் கிளர்ச்சியுறச் செய்வ துடன்புத்துணர்ச்சியையும் ஊட்டுகின்றது.

கொள்ளை நோய்ப் பெருந்தொற்றுக்காரண மாக சுகாதாரத்துறை யினர் சுகாதாரம்மற்றும் சுத்தம் என்பவற்றை மீண்டும் மீண்டும் வலி யுறுத்தி வரும் நிலை யில் தரமான, நம்பக மான ஒரு தயாரிப்பை எல்லோருமே தேடு கின்றார்கள். தங்களு டைய எல்லாத் தேவை களையும் நிறைவேற் றக்கூடிய ஒரே பொரு ளாக இருப்பதையே அவர் கள் விரும்புகின்றார்கள். அந்தத் தேவையைமுழுமையாகப்பூர்த்தி செய்யக்கூடிய வகை யில் இத் தயாரிப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

பெருந் தொற்றுக் காலத்தில் தரை மேற்பரப்பின் தூய்மையைப் பேணுவதுமிகமுக்கியமானகடமை என்கிற பழக் கத்தை இலங்கை யின் நுகர்வோரிடம் அழுத்திப் படி யவைத்து சுகாதாரம் தொடர்பில் அவசியமான ஒழுக்க மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள திரவகிருமி நீக்கித் தெளிபான் தயாரிப்பு ஊடாக சண் மச் நிறுவனம் முயற்சி செய்கின்றது.

விரைவிலேயே தனது திறமை வாய்ந்த விநியோகஸ்தர்கள் மூலம் சந்தையில் எல்லா இடங்க ளிலும் இந்தத் தயாரிப்புக்களைச் சந்தைப்படுத்த முடியும் என்று சண் மச் நிறுவனம் எதிர்பார்க்கின் றது.

நிறுவனத்தின் பல சிறந்த தயாரிப்புகளில் இந் தத் தயாரிப்பு முதன்மையானது என்றாலும், சன் தயாரிப்பு வரம்பில் கை கழுவி திரவம் மற்றும்

சண் மச் நிறுவனத்தின் மிக நம்பகரமான உற்பத்தி இரு ரக நறுமணங்களுடன் இப்போது சந்தையில்...!

மூலிகை கொசு விரட்டும் லோன் ஆகி யவையும் அடங்கும். இந்த இரண்டு தயாரிப்புகளும் அனைத்து தோல் வகைகளுக்கும் ஏற்ற மூலப் பொருள் கள் கொண்டே தயாரிக்கப்படுகின் றன.

சண் மச் நிறுவனம் சுமார் 40 வருடங் களுக்கு முன்னதாக ரி.ஆர்.ஆர்.ராஜ னால் உருவாக்கப்பட்டது. அப்போது உருவான அந்த வர்த்தக நாமம் இலங்கை முழுவதும் தாக்கத்தைச் செலுத்தியது. மெழுகு பூசப்பட்ட மிக வும் பாதுகாப்பான நெருப்புக் குச்சி களைத் தயாரிக்கும் முதல் நிறுவன மாக அது வரலாற்றின் பக்கங் களில் பதிவாகி யிருக்கின் றது. இருள் சூழ்ந்த நேரங்க ளில் எல் லாம் இலங்கையின ரது ஒவ்வொரு வீட்டிலும் ஒளி ஏற்றப்படுவதை அது உறு திப்படுத் தியிருக்கின்றது. ஆபிரிக்க நாடுகளிலும் தனது வர்த்தகத்தை விரி வுபடுத்தி யதன்மூலம் சர்வதேச சந்தை யிலும் இந்த நிறுவனம் கால் பதித்தது.

சூர்யாவின் தயாரிப்புவரம் பில் 14 வெவ்வேறு வகைகள் வரையிலான ஊதுபத்திகள், சூர்யா மெழுகுவர்த்திகள் மற்றும் சன் டூத்பிக்ஸ் மிக முக்கியமானவை. இந்த தயா ரிப்புகள் அனைத்தும் தரம், பாதுகாப்பு ஆகியவற்றில் உயர்ந்தவையாகஅங்கீகரிக் கப்பட்டுள்ளன மற்றும் நுகர்வோருக்குமிக நெருக்க மானவை என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட ஆக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஞ்சை கொரோனா இன்னும் இல்லைத்தானே?

- கதிரேசன் காத்தவராயன் -

அதிலை கோயிலடிப் பக்கம் மானம்பூத்திருவிழா கொரோனா விதிமுறையளோடை நடக்குதாம் எண்டினம். ஒருக்கால் அதையும் பாப்பமெண்டு அங்கை போனன் பாருங்கோ. அங்கை போனால் சனமெண்ட சனம்... சரியானசனம் மூக்கு - வாய் முடியில்லை இடைவெளியில்லை எனக்கெண்டா சரியான சந்தேகமாப் போச்சுது கொரோனா நூறுகளின்ரை மடங்குக ளிலை ஆக்களைப் பிடிக்கிறதைக் கண்டு பிடிக்கினம்... தனிமைப் படுத்தல் ஊரடங்கு முடக்கம் அது இதுவெண்டு கதையள் அடிபடுகிறதை நம்புறதோ? நம்பாமல் விடுகிறதோ? என்னத் தைத்தான் செய்யிறது?

என்ரை கூட்டாளியளாரும் நிண்டால் கேட்டு கிளியர் பண் ணலாமெண்டால் என்னண்டு அவங்களைக் கண்டுபிடிக்கிறது? எண்டு யோசிச்சபடி நிக்க செல்லரண்ணையும் நடேசம்மானும் ஒருபக்கத்தாலை வந்தினம். மற்றப் பக்கத்தாலை தம்பர் வந்தார். அவையிட்டக் கேட்டால் அவைக்கும் இதுகள் ஒண்டுமாய் விளங் கேல்லையாம். அதோடை தம்பர் ஒரு விசயம் சொன்னதும் எங்களுக்குக் குழப்பம் கூடிவிட்டுது. அதென்னண்டால் கொரோ னாப் பிரச்சனை இருக்கிறதாலை திருவிழாவை இரவு ஏழு மணிக்கு முதலிலை முடிக்க வேணுமெண்டு பீ.எச்.ஐ. ஓடர் போட்டிருக்கிறார் எண்ட கதைதான் பாருங்கோ. செல்லரண்ணை அப்பாவியாய் "அப்ப ஏழு மணிக்கு முதல்லை கொரோனா பர வாதாமோ?" ஏண்டு கேட்டார் பாருங்கோ ஒரு கேள்வி. அது நியாயமான கேள்வியோ இல்லையோ?

"இப்பிடிக் கனக்கக் கேள்வியள் இருக்குப் பாருங்கோ. ஆனால் பதிலை ஆரிட்டைக் கேக்கிறதெண்டுதான் தெரியேல்லை?" எண்டு நடேசம்மான் சொல்லிப்போட்டு எல்லாரையும் ஒருக்காப் பாத்தார். "இஞ்சார் தெரியாமத்தான் கேக்கிறன் கலியாண மண்டபங்களுக்கு அய்ம்பது பேருக்கு நூறு பேருக்கெண்டு அனுமதி குடுக்கினமாமல்லே? அந்த ஆக்கள் பிரச்சனையில்லாத ஆக்களெண்டு என்னண்டு கண்டுபிடிக்கிறது? அது சரி ஆனால் இப்பவும் பஸ்சுகளிலை அடைஞ்சுதானே ஏத்திறாங்கள்?" எண்டு அவரே சொல்லி நிப்பாட்டினார். "இஞ்சார் நடேசு சந்தைப் பக்கம் போகேல்லையே? அங்கை பாரன் சனத்தின்ரை இடிபாட்டை" எண்டார் தம்பர். ஒருத்தரும் வாய் திறக்கேல்லை.

'இஞ்சார்... ஒண்டு சொல்லட்டே? எண்டு நான் நிப்பாட்ட "சொன்னாத்தானே தெரியுமெண்டு" செல்லரண்ணை ஆவலாய்க் கேட்டார். சரி... சொல்லுறன்... "எங்கடையாக்களின்ரை குண மென்ன? கழுத்துக்கு மேலை போய் மூக்கிலை முட்டேக்கை தானே வெள்ளம் வெள்ளமெண்டு அலறுறதுதானே இப்ப என் னப்பா இடுப்பளவுக்கு வந்திட்டுதே இல்லைத்தானே? எண்டல்லே இருக்கிறம். ஆனால் ஒண்டு... மூக்கில்லை தலக்கு மேலை போட் டுது. அதை இன்னும் கண்டு கொள்ளயில்லை அவ்வளவுதான். சும்மா ஒரு வீம்பிலை சவடால் விட்டுக்கொண்டிருக்கிறமெண் டதுதான் உண்மை பாருங்கோ. நாடாளுமன்றத்திலை சமூகத் தொற்றாய் மாறேல்லை எண்டு அமைச்சர் சொல்லுறார். வருத் தக்காறரோடை தொடர்பிலை இருந்தாக்கள் பாதிக்கப்படுகிறதாய் அறிக்கையள் வருகுது. தொடர்பிலை இருந்தவை சமூகத்திலை இல்லாத ஆக்களோ? இதுகளைக் கொஞ்சம் அவதானமாய்த்தான் பாக்கவேணும். அதைவிட அவதானமாய்த்தான் கதைக்க வேணும்" எண்டன்.

"ஓமோம் கதிரேசு.. இது பெரிய இடத்துப் பிரச்சனை. சனம் தான் பாவங்கள். சட்டங்கள் கனக்க இருக்கு. அதுகளை பிர யோசனமாப் பாவிக்கத்தான் ஆக்களில்லை. றோட்டிலை தெரு விலை பாருங்கோ ஆராவது முகத்துக்குக் கவசம் போட்டிருக்கி னமோ எண்டு? ஏன் இஞ்ச கோயிலடியிலை பாருங்கோவன் ஆராவது போட்டிருக்கினமோ எண்டு?" நடேசம்மான் கேட்ட திலையும் ஒரு நியாயமிருக்கல்லே?

அதோட உந்தக் கை கழுவுகிற விசயம் இருக்கல்லே அதை ஆராவது பாத்தனீங்களே? அதையும் பாப்பாரில்லை. எண்டு நான் சொல்லிக்கொண்டிருக்க தம்பர் குறுக்கிட்டு "அதிலை என்ன கதிரேசண்ணை பிரச்சனை எல்லா இடத்திலையும் இருக்குத்தானே? நேற்றும் அதிலை பாங்குக்கு காசெடுக்கப் போக.செக்குறுட்டி கழுவுறதைப் பாத்துத்தானே உள்ளுக்கை விட்டவன்" எண்டார்.

"சரியடா தம்பர்... கழுவுறது சரி... என்னண்டு கழுவுறது எண்டதுதான் பிரச்சனை. கழுவுறத்துக்கெண்டிருக்கிற பைப்பை கையாலை முறுக்கித் திறந்தல்லே மூட வேண்டிக் கிடக்குது. கழுவினாப் பிறகு தொடுகிறதாலை கழுவினதின்ரை பயன் இல் லாமலுக்கல்லே போகுது? ஒருத்தரும் இந்த விசயத்தைக் கவ னிக்கயில்லை."

"நான் அதிலை செக்குறுட்டியைக் கேட்டனான். அதுக்கு அவன் இஞ்ச இன்னும் கொரோனா வரயில்லைத்தானே எண் டல்லே சொல்லுறான். அப்ப என்ன செய்யிறது?"

"சரி சரி பேரப்பெட்டையை ரியூசனாலை ஏத்தி மற்ற ரியூச னிலை விட வேணும்..."

"அட இண்டைக்கும் ரியூசனோ" எண்ட தம்பருக்கு எதைச் சொல்ல? போட்டு வரட்டே.

எப்படியிருக்கிறது வூஹான்...?

கொரோனா வைரஸ் முதன் முதலில் கண்டறியப்பட்ட இடம் சீனாவின் வூஹான் நகரம். சீனாவின் ஹ்பே மாகாணத் தின் தலைநகர் அது. கொரோனா வைரஸ் அங்கு கண்ட றியப்பட்டாலும் அது எங்கிருந்து – எப்படி வந்தது என்பது குறித்துத் தீர்க்கமான முடிவு இன்னமும் கண்டறியப்படவில்லை.

சீனாவிலிருந்து வந்த இந்த வைரசைச் சீனாதான் உருவாக்கியது – இது சீன வைரஸ் என்று அமெரிக்கத் தரப்பில் சொல்லப்பட்டு வருகிறது. எது எப்ப டியிருப்பினும் வூஹானில் இருந்தே கொரோனா வைரஸ் உலகின் ஏனைய பகுதி களுக்கும் பரவியுள்ளது என்றே பதிவுகளுள்ளன. அந்தப் பரவல்கூடப் பல கட்டங்களாகி – அலைகளாகப் பதிவாகியுள்ளது. உலக நாடுகள் பலவும் இதைச் சமாளிக்க முடியாமல் திணறிக்கொண்டிருக் கின்றன. இந்த நிலை யில்தான்மறக்கமுடியாத அந்த வூஹான் நகரின் நிலை இப்போது எப் படியிருக்கிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் சிலாகிக்கத் தொடங்கியி ருக்கின்றன.

அந்த நகரம் எப்படி இருக்கிறது எனப்பலரும் தேடத் தொடங்கியிருக்கி றார்கள். அந்த நகரம் சீனாவின் முக்கியமான சுற்றுலா மையமாக மாறி வருகிறது என்று கூறப்பட்டு கிறது. சீனாவின் தேசிய தினத்தை முன்னிட்டு (ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி யிலிருந்து 7ஆம் திகதி வரை) வூஹான் நகரம் அமைந்துள்ள ஹ்பே மாகாணத் திற்கு 5.2 கோடி சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளார்கள் என்று சொல் லப்படுகிறது. 5.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்த மாகாணத்திற்கு இந்த ஒரு வார காலத்தில் வருமானமாக வந்துள்ளது.

குறிப்பாக வூஹான் நகரத்திற்கு மட்டும் 1.9 கோடி சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்கிறது அந்த மாகாணத்தின் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை. இயல்புநிலை திரும்பி இருந்தாலும், கடந்தாண்டை ஒப்பிடும்போது இந்த வருமானம் 52 சதவீதம் அளவு குறைவாகவே உள்ளது என்கிறது சீனா. அங்கு இயல்பு நிலை திரும்பிக் கொண்டிருந்தாலும் குளிர்காலம் நெருங்கிக் கொண் டிருப்பதால் இரண்டாவது அலை அங்கு எழுமா என்கிற பதற்றம் அங்குள்ள வர்களிடமும் பரவலாக இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு மகேஷ்

உறவின் உறுத்தல்கள்

"ஏன் இவள் இப்படிச் செய்கிறாள்?

திருமணமாகிக் குழந்தைகளைப் பெற்று அவர்களைப் படிப்பித்து அவர்களுக்கும் தொழில் பெற்றுக்கொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தவர் நாகராசா. அவர்களும் இப்பொழுது திருமணமாகித் தனிக்குடித்தனம் போய் விட்டார்கள். இன்று இங்கே அந்தப் பழைய வீட்டில் நாகராசா மனைவியுடன் ஒன் றாகத்தான் வாழ்கிறார்.

இருவரும் தாம் தனியே இருப்பதாகச் சொல்லிக் கொண்டாலும் இப்பொழுது பல வேளைகளில் நாகராசா தானே தனித்திருப்பதாகப் பிதற்றிக் கொள்ளுகிறார். அவரைத் தனிமைப்படுத்தி வைப்பதில் அவரது மனைவியே மகிழ்ச்சிகாகவும் பல வேளைகளில் அவருக்குத் தோன்றுவ துண்டு.

ஏன் இவள் இப்படிச் செய்கிறாள்?

மனைவிதான் அன்று வேளையும் சாப்பாடு சமைப்பாள். சோறு, பிட்டு, இடியப்பம் எல்லாமே நன்றாகச் சுவையாக ஆக்கிப் போடுவாள். அவளின் சமையலோ பிரமாதம்! சுவையான உணவுகள்! நாகராசா ஆனந்தப்படுவார்.

சமைத்த உணவுகளைப் பாத்திரங்களிலிட்டு, மேசையில் அழகாகப் பரப்பி அடுக்கி வைத்து மனைவி, பிள்ளைகளோடு ஒன்றி இருந்து உண்பதில் கண்ட மகிழ்ச்சி, இப்பொழுது அவரிடத்தில் இல்லை. கணவனும் மனைவியும் மாத்திரமே! தனித்திருப்பதாக ஒரு வேதனை!

உணவு சமைக்கும் தனது மனைவிக்குச் சில வேளைகளில் நாகராசா வெங்காயம் உரித்துக் கொடுத்தும் தேங்காய் துருவிக் கொடுத்தும் உத வுவதுண்டு.

இன்றும் மனைவியின் சமையற் பாரத்தைச சிறிது குறைத்து வேலைச் சிரமத்தை இலகுபடுத்துவதற்காக அதே உதவிகளைக் காலையிலே செய்து கொடுத்துவிட்டே சென்றிருந்தார்.

இவள் ஏன் இப்படிச் செய்கிறாள்?

நாகராசா சாப்பிடும் ஆவலோடு வீட்டினுள் நுழைந்தார்.

குசினியில சாப்பாடு இருக்குப் போட்டுச் சாப்பிடுங்கோ! வந்ததும் வராத துமாக நேரங் கடந்த சாப்பாட்டைச் சாப்பிடுவதற்கான அறிவிப்பை அவ ரின் மனைவி விடுத்தாள்.

அவருக்கு மனது வலித்தது. ஒய்வின் பின்னரும் ஓடி ஓடி வேலை செய்து உணவை உண்ண ஆசையோடு வந்தபோது இந்த அறிவிப்பு அவரைச் சுட்டது.

குசினிக்குள் நுழைந்தார்.

சமைத்த உணவும் அதனை ஏந்திய பாத்திரங்களும் குசினி மேசையில் ஒழுங்கற்ற கோலத்தில் திசைகள் மாறிப் பரவிக் கிடந்தன. உணவு பரிமா றும் கரண்டிகளும் தட்டுகளும் அலங்கோலமாக அங்கும் இங்குமாகக் குழம்பிக் கிடந்தன.

தானாகவே தனது வழமையான கை கழுவலோடு கோப்பையையும் கழுவிக் கையில் எடுத்தார்.

அவர் கழுவிக் கையிலெடுத்த கோப்பைக்குள் எதிரில் அவரின் கண்ணில் தெரிந்த மூடப்பட்ட பாத்திரங்களைத் திறந்து சோறு கறிகளை ஒவ்வொன் றாக நிரப்பிக் கொண்டார்.

சோற்றுக் கோப்பையைக் கையில் ஏந்தியவாறே குசினியை விட்டு வெளியேறினார். எதிர்ப்பட்ட முன்னறைக் கதிரையில் மனைவியின் எதி ரில் உட்கார்ந்தார்.

சோற்றையும் கறிகளையும் சேர்த்துக் கைகளால் பிசைந்த குழையல், உண்பதற்குச் சுவையானது. அது அவருக்கு ஏனோ சுவைக்கவில்லை. பசிக் களையுடன் சாப்பிட்டார். வயிற்றை நிரப்பவே சாப்பிட்டார்.

மீன் பொரியல் இருந்ததே எடுத்தீர்களா? என்ற மனைவியின் குரல், அவரின் எண்ணத்தைக் கோப்பைக்கு வெளியே, குசினிக்குள் மேயவிட்டது. பொரியல் எங்கே இருக்கிறது? அவர் காணவில்லை!

நினைவில் மேலெழும் பல வேதனைக் கேள்விகளோடு மனக் கண்ணால் குசினிக்குள்ளே பொரித்த மீனைத் தேடினார்.

நான் அங்கே பொரியலைக் காணவில்லை! என்றார் சிறிது எரிச்சலோடு.

கண்ணை எங்கே வைச்சுக் கொண்டிருந்தனீங்கள்? என்று கிண்டலடித் தாள் அவள்.

அவருக்கு அது கோபத்தையே மூட்டியது. அடக்கிக் கொண்டார்.

நாகராசா உணவை வேகமாகச் சாப்பிட்டு முடித்தார்.

அவருக்கு முன்னாலிருந்த கதிரையிலிருந்து எழுந்து சென்ற மனைவி ஒரு பொரித்த மீன் துண்டுடன் இப்பொழுது அவரெதிரிலே நின்று கொண்டி ருந்தாள்.

அவர் சாப்பிட்ட கையாலேயே அதனை வாங்கி வாயிலிட்டுக் கடித்து மொற மொற எனச் சாப்பிட்டார். கையலம்பினார். கோப்பையை உரிய இடத் தில் கவிழ்த்தார். மனைவியின் எதிரில் மீண்டும் வந்து அமர்ந்து கொண்டார்.

ஏதோ சாப்பிட்டு விட்டோம் என்ற திருப்தியுடன் கூடியது அவரின் அமைதி.

மேசையில் எதிரில் கிடந்த அன்றைய தினசரியை விரித்தார்.

சிறிது நேரம் தொடர்ந்த அமைதி!.

கிருஷ்ணவேணி இப்பவும் உங்களோடதான் வேலை செய்கிறாளா? திடீரென மனைவி கேட்ட கேள்வி அவரிடம் ஏனோ பல சந்தேகங்களை எழுப்பியது.

யார்? எந்தக் கிருஷ்ணவேணி? என்று அவர் கேட்டார்.

கிருஷ்ணவேணியை உங்களுக்குத் தெரியாதுதான்!

சந்தேகம் கலந்த அவளது வார்த்தைகள் அவரை ஏளனம் செய்தன.

அவரது ஓய்வுநிலையிலும் அவரைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் மனைவியின் பார்வையை அவளிடத்திலிருந்து நாகராசாவால் அகற்றவே முடியவில்லை.

மலையகத்தில் நாகராசா வேலை செய்தபொழுது அங்குள்ள ஓர் ஆசி ரியையுடன் அவருக்குத் தொடர்பிருப்பதாக யாரோ சொன்ன கதையைக் கேட்டு மகளையும் தூக்கிக் கொண்டு பஸ் ஏறி ரயில் ஏறி அங்கே பறந்து போனவள்.

அவரை அங்கிருந்து மாற்றலாகி வரும்படி வேண்டி வீட்டுக்கு அருகிலுள்ள அலுவலகத்தில் நாகராசாவைக் கடமை ஏற்கச் செய்தவள்.

அவரது சம்பளத்தில் ஒரு பகுதியை அலுவலகத்திலுள்ள யாரோ பெண் ணுக்குக் கொடுப்பதாகச் சொல்லக் கேட்டு அங்கேயும் தொடர்ந்து அவரை வேலை செய்ய விடாமல் குறைகூறித் திருமலைக்கு மாற்றம் பெறச் செய் தவள்.

நாகராசா பதவி உயர்வுக்காய் நல்லதெனத் தேடிச்சேர்ந்து பட்டம்பெறக் கற்ற இடத்திலும் பெண் விரிவுரையாளருடன் தோழமையுடன் கூடிய நேசம் கொண்டிருப்பதாக யாரோ கூறிய கதையைக் கேட்டு அவரை நச்சரித்தாள் அதுகேட்டு அவராகவே அவள் விருப்பப்படி கல்வியையும் இடைநிறுத் திச் சம்பள உயர்வைக் காணாமலேயே பென்சன் பெறக் காரணமானவள்.

அவர் வேலை செய்த இடங்களிலெல்லாம் பெண்களைத் தொடர்புபடுத்தி யார் யாரோ கதைகூறும் பேச்செல்லாவற்றையும் கேட்டு ஏசும் மனைவியின் சொல்லுக்கடங்கித் தனது கடமையை தனது சேவையை இடைநிறுத்தி இடைநிறுத்திப் பல இடங்களுக்கும் மாறிமாறி மனைவிக்காகவே தன்னைத் தன் உயர்ச்சியை இழந்தவர்தான் இந்த நாகராசா.

அவரது செயற்பாடுகளில் எல்லாம் பெண்களைத் தொடர்புபடுத்தி மனைவி சந்தேகம் வெளியிடும் போதெல்லாம் அவளைத் திருப்திப்படுத் தவே அப் பெண்களின் பார்வையிலிருந்து விலகி இருந்து, தன்னைத்தானே அவர்களிடமிருந்து தொலைவாக்கிக் கொண்டார்.

இன்றைய ஓய்வுநிலையிலும் அவரது தொழிற் திறமைகளால் அவர் செய்யும் வேலைகளுக்கு அவரின் அலுவலகத்தில் நிறையவே மதிப்பு இருந்தது.

அங்கேயும் அரச பணியில் அன்று அவருடன் கடமையாற்றிய கிருஷ்ண வேணி வேலை செய்கிறாள்.

மனைவியிடமிருந்து அவளின் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே நாகராசாவின் மனம் துணுக்குற்றது. என்றும் போல் இன்றும் மனைவி கொண்ட சந்தேகத்தின் வலிமையை உடைக்க வழி தெரியாமற் தத்த ளித்தார்.

இளமையும் அழகும் நிரம்பிய அன்றைய நாள்கள் இன்று அவரிடத்தில் இல்லை. மனைவியிடத்திலோ நாகராசா மீதான அன்பும் உறவும் கலந்த உரிமை இன்னமும் குறையவேயில்லை

இன்றும் அவரின் மனைவி மீது விளைந்த முதுமையும் தளர்வும் அவருக்குள்ளே செழித்த நேசத்தையும் பாசத்தையும் குலைத்து விட வேயில்லை.

தொடரும் சந்தேகங்களால் விரியும் கோபதாபங்களை விலக்கிக் கொள்ள அவர் தனக்கான அனைத்தையும் விட்டுக் கொடுத்ததாக உணர்ந்தார்.

அவரது குடும்பத்துக்காக மனைவி பிள்ளைகள் மீது கொண்ட நேசத் துக்காக அவர் தன்னைக் குறுக்கி அனைத்தையும் அர்ப்பணித்தபோதும் அவர்கள் தமக்காகவே தன்னைப் பயன்படுத்தினார்களோ என்ற சந்தேக மும் அவரிடத்தில் படரவே செய்கிறது. மனைவி பிள்ளைகள் மீது கொண்ட அவரது அன்பு அதனைத் தடுத்தது.

மனைவியின் சந்தேகத்தைத் தொலைத்து எதனையும் அனுசரித்துப் போகத் தூண்டும் மனத்தோடு நாகராசா ஓய்வின் பின்னரான இந்த வேலை யையும் இப்பொழுது விட்டுவிடவே துணிந்தார்.

இப்பொழுது மனைவி தன் கையால் ஆக்கி விருப்போடும் அன்போடும் உறவோடும் பரிமாறும் உணவின் சுவை நாகராசாவுக்கு அலாதியானதாகத் தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரக் கவசங்கள்...!

பெருந்தொற்று ஆரம்பித்ததற்குப் பிற்பட்ட காலம் மனித வாழ்க்கையையே புரட்டிப்போட்டுள்ளது. ஒரு வருடத்தை எட்டும் நிலையிலும் கண்ணுக்குப் புலப்படாத வைரஸ் கட்டுக்கடங்காமல் பரவிக் கொண்டே இருக்கிறது. தடுப்பூசிகள், தடுப்பு மருந்துகள் கண்டறியப்படாத நிலையில் - அவை ஆராய்ச்சிக் கட்டத்தில் இருக்கும் நிலையில் அதன் பரவலைத் தடுப்பதற்காகப் பல வழிவகைகளைச் சுகாதாரத் தரப்பினரும், அரசுகளும் முன்மொழிகின்றன.

வீட்டிலிருந்து வெளியே செல்லும் தருணங்களில் அடிக்கடி சவர்க்கரம் - கிருமி நீக்கிகள் இட்டுக் கைகளைக் கழுவுமாறும், பொதுவெளிகளில் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்குமாறும், முகக் கவசங்களை அணிந்துகொள்ளுமாறும், கைகளை மூக்கிலோ, கண்ணிலோ தொடுவதை இயன்ற வரைக்கும் தவிர்க்குமாறும் எனப் பல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றைக் கடைப்பிடிக்காத பட்சத்தில் அதைக் குற்றமாகக் கருதிச்சிறை, தண்டம் எனத் தண்டனைகள் வழங்கும் திட்டங்கள்கூட வகுக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றுக்கு மத்தியில் முக்கியம் பெறுபவைதான் முகக் கவசங்கள். பெருந்தொற்றுக்காலத்தில் அதிகம் அரசுகளால் கவனிக்கப்படும் விடயமாகவும் இது இருக்கிறது.

முகக் கவசங்களின் வகைகள்

பொருந்தொற்று இங்கு அறிமுகப்பட்ட காலத்தில் முகக் கவசங்களுக்குப் பலரும் முண்டியடித்ததில் கையிருப்பில்



இருந்த முகக்கவசங்கள் விற்றுத் தீர்ந்தன. இதனால் சிறிது காலம் அவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவியது. ஒரு சில வியாபாரிகள் அதிக விலையில் கூட அவற்றை விற்றனர். ஒருசிலர் தமது கைக்குட்டைகள், இதர துணிகளைக் கொண்டு மூக்கு மற்றும் வாய்ப் பகுதி மூடிக்கொள்ளும் வகையில் கட்டிக்கொண்டனர். ஒரு நாள் பாவனைக்கு என்றும், ஒரு சில மணிநேரப் பாவனைக் கென்றும் தயாரிக்கப்பட்ட தற்காலிக முகக்கவசங்களும் பொதுவில் கிடைக்கத் தொடங்கின. துணியிலான - ஆடைகள் தைத்து வெட்டிய கழிவு மற்றும் வெட்டுத் துணிகளில் தைக்கப்பட்ட துணிக் கவசங்களும் விற்பனையிலிருக்கின்றன.

அணிவதில் ஏமாற்று

நோய்க் காப்பு மற்றும் நோய்த் தடுப்புக்காக முகக் கவசங்களை அணிகின்ற நிலை மாறி அரசுகள் விதித்துள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற காவல்துறையினரைச் சமாளிப்பதற்காகவும், தண்டனையைத் தவிர்ப்பதற்காகவுமே மக்களில் பலரும் இன்றைக்கு முகக்கவசங்களை அணியும் சூழல் உருவாகிவிட்டது.

இதனால் ஒரு நாள் அல்லது சில மணிநேரங்களுக்கு மாத்திரம் அணிவதற்கேற்ற வகையில் தயாரிக்கப்பட்ட முகக் கவசங்களைப் பலரும் வார, மாதக் கணக்கில் அணிந்து திரிகிறார்கள்.

இந்த நீடித்த பயன்பாட்டைத் தாங்க முடியாத அந்தக் கவசங்கள் பஞ்சு, தும்புகள் புடைக்கக் காட்சியளிக்கின்றன. இதில் மற்றொரு வகையினர் நாடிப்பகுதியில் முகக்கவசங்களைக் கொழுவித் திரிகிறார்கள். காவலர்களைக் கண்டால் அதை மூக்குவரை மேலுயர்த்திவிடுகிறார்கள்.

இவ்வாறாக நோய் தவிர்ப்புக்கு என்றில்லாமல் காவலர்களைக் கையாள்வதற்காகவே பலரும் முகக் கவசங்களை அணிந்து திரிகிறார்கள். அதேபோல காவலர்களும் கூட அரசின் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு முகக் கவசம் அணிந்திருக்கிறாரா நபர் என்று பார்க்கின்றனரே தவிர, அந்த முகக் கவசம் குறித்து மேலதிக பரீட்சிப்புகளை மேற்கொள்ள முனைவதில்லை.

ஒரு முகக் கவசத்தைத் தொடர்ந்து 4 மணி நேரத்திற்கு மேலாகப் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளனர் சுகாதாரத் துறையினர். ஒரு நாளைக்கு வெளியே செல்வதாக இருந்தால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முகக் கவசங்களை கையுடன் எடுத்துச் செல்லுமாறும் மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். பயன்படுத்திய முகக் கவசங்களை ஆங்காங்கே கண்ட இடங்களிலும் வீசி விட்டுச் செல்லவேண்டாம் என்பதையும் அறிவுறுத்தியுள்ளனர்.

அணியாமலேயே ஏமாற்றுபவர்கள்

முகக்கவசங்களைச் சரிவர அணியாதவர்கள் மற்றும் தரமான - உகந்த முகக் கவசங்களை அணியாதவர்கள்போக முகக் கவசமே அணியாத நபர்களும் இருக்கிறார்கள். இவர்கள் தலைக்கவசம் அணியாமல் திரிந்த வழக்கத்தைக் கொண்டவர்களாகப் பெரும்பாலும் இருக்கலாம்.

இவ்வாறு பல ரகங்களில் முகக் கவசப் பயன்பாடு இருப்பதால் இது குறித்துச் சமூக வலைத்தளங்களில் பரவலான கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன. அதில் முகக் கவசம் அணியாதவரை அறப்படிச்சதுகள் என்றும், வாயை மட்டும் மூடும் விதமாக முகக் கவசம் அணிபவர்களை அரை லூசுகள் என்றும், நாடியில் முகக் கவசங்களைக் கொழுவித் திரிபவர்களை முழு லூசுகள் என்றும், வாயையும் மூக்கையும் மூடி முகக் கவசங்களை அணிபவர்களைச் சிறந்த மனிதர்கள் என்றும் விளக்கப்படம் வரைந்து பட்டியல் படுத்தும் கருத்துக்கள் உலாவுவதும் கவனிக்கத்தக்கது.

இதுபோல பல கருத்துகள் முகக் கவசங்கள் தொடர்பில் பகிரப்பட்டு வருகின்ற அதேநேரம் பொதுவில் பேச முடியாத சில கருத்துகளும் அவற்றில் அடக்கம்.

சரிவர அணிந்தாலும் ஏமாற்று

முகக் கவசங்களைச் சரிவர அணிபவர்களைச் சிறந்த மனிதர்கள் என்று சமூக வலைத்தளங்களில் பெரும்பான்மை அரட்டையர்கள் வரையறுத்தாலும் குறிப்பிட்ட சிலர் அவர்களும் அடிமுட்டாள்களே என்கின்றனர். அவ்வாறு சரிவர அணிபவர்களை அரசு ஏமாற்றுகிறது என்றும் அவர்களும் சமூகத்தில்

அதாவது கொரோனா வைரஸ் வாய், மூக்கு, மற்றும் கண்கள் வழியாகப் பரவும் என்று ஆய்வுகளின் மூலம் தெரிந்துகொண்ட பின்பும் கண்களையும் மூடும் விதமான கண் ணாடி(பிளாஸ்ரிக்) கவசங்களை அணிய வலியுறுத்தாமல் வாயையும், மூக்கையும் மாத்திரம் மூடும் வகையிலான கவசங்களை முகக் கவசங்கள் எனும் போர்வைக்குள் புகுத்தி அவற்றை அணியுமாறு கட்டாயப் படுத்தியிருப்பது ஏமாற்று வேலை என்று அவர்கள் வாதாடுகின்றனர்.

ஆனாலும் கைகளை அடிக்கடி சுத்தம் செய்தால் அவை கண்களைத் தொடும்போது கண்களினூடாக வைரஸ் நுழையாது என்றும் மூக்கு, வாய்போல எச்சில் - சளித் துகள்களைக் கண்கள் வெளித் தள்ளுவதில்லை என்றும் ஆகவே அனைவரும் கைகளைக் கழுவி வாய், மூக்கை மூடி முகக் கவசங்களை அணிந்தால் போதும் என்றும் மறு தரப்பு வாதிடுகிறது.

எது எப்படியிருப்பினும் இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் முகக்கவசங்களும் மக்களும் பலவித இணக்க - பிணக்குப் பாடுகளுடன்தான் இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனம் இது பேய்க் கதை

ஆவித் தொல்லையைத் தவிர்க்கும் வேப்பம் மரம்

குகராசா - கோப்பாய் வடக்கு

எனக்கு மிகவும் பழக்கமான ஒரு குடும்பம் திடீரெனத் துக்கத்துக்குள்ளான சம்பவத்தையே இங்கு குறிப்பிடுகிறேன். அந்தக் குடும்பத்தினருடைய உறவுக்காரர் ஒருவர் சென்ற ஆண்டு வெளிநாட்டிலிருந்து கொழும்புக்கு வருகை தந்தார். அவரை அங்கிருந்து வீட்டுக்குக் கூட்டி வருவதற்காக அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளும், மகனும் வான் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றனர்.

தந்தையும் ஒரு மகளும் மட்டும் வீட்டில் இருந்தார்கள்.

வெளிநாட்டிலிருந்து வந்தவரை விமான நிலையத்தில் கண்டறிந்து அவரை வீட்டுக்கு அழைத்து வந்த வழியில் அவர்கள் வாடகைக்கு அமர்த்திய வான் விபத்துக்குள்ளாகிவிட்டது. அந்த விபத்தில் தாயும் மகளும் விபத்து நடந்த இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்கள். வெளிநாட்டிலிருந்து வந்த உறவினரும் மகனும் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர். அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள்.

உயிரிழந்த தாயையும், மகளையும் அடக்கம் செய்து ஓரிரு நாள்கள் ஆகியிருந்த நிலையில், கடுமையான காயத்துக்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மகனும் இறந்து விட்டார் என்று செய்தி கிடைத்தது. பின்னர் அவரது உடலும் அடக்கம் செய்யப்பட்டது. இதன் பின்னர், அந்தக் குடும்பத்தில் எஞ்சியிருக்கும் தந்தையும் மகளும் இரவில் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாது அவதிப்பட்டனர். காரணம், அவர்களின் வீடு அமைந்துள்ள சூழலில் நாய்கள் குரைப்பது, அவர்களின் வீடு மற்றும் மதிற் கதவுகளில் தட்டுவது, முனகுவது போன்ற சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன.

இந்தத் தொல்லைகள் அதிகரித்துச் சென்ற காரணத்தால், அந்தத் தகப்பனும் மகளுமாகச் சென்று பூசாரி ஒருவரைச் சந்தித்துத் தமக்கு நடந்ததைக் கூறியிருக்கிறார்கள். அவர் அவர்களுக்கு ஆறுதல் கூறி "அது வேறேதும் இல்லை. விபத்தில் அவலச்சாவு அடைந்துள்ள மூவரும் ஆவியாக உங்கள் வீட்டைச் சுற்றித் திரிகிறார்கள். இது பாசத்தின் விளைவாக ஏற்பட்டது. நீங்கள் பயப்பிடவேண்டிய அவசியம் இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், "உங்கள் வீட்டில் வேப்ப மரம் இல்லையா?" என்று கேட்டிருக்கிறார். "இருந்த பெரிய வேப்ப மரம் ஒன்றை இந்த விபத்து ஏற்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர்தான் வெட்டினோம்" என்று கூற, "வேப்ப மரம் உள்ள வீடுகளில் ஆவிகளின் தொல்லை இருக்காது. அதனால்தான் நம் முன்னோர் வேப்ப மரங்களை வீடுகளில் நாட்டினார்கள்" என்று கூறிய பூசாரி, தான் வீட்டுக்குக் காவல் செய்து தருகிறேன் என்று முடிவில் கூறியிருக்கிறார். நான் குறிப்பிடுகின்ற இந்தச் சம்பவம் உண்மையானது.

பின்னர் நான் பலரிடம் இந்த வேப்ப மர விடயம் பற்றி வினாவினேன். வேப்ப மரம் உள்ளவர்களின் வீடுகளில் ஆவித் தொல்லைகள் இருக்காது என்றே பலரும் சொல்லினர். ஒரு வித நம்பிக்கையாகப் பலரும் இதைக் கொண்டிருப்பதும் தெரிந்தது. எனது வீட்டிலும் பெரிய வேப்ப மரம் ஒன்று உண்டு. பேய், பிசாசுகள், ஆவிகள் குறித்த நம்பிக்கையுள்ளவர்கள் வேப்ப மரங்களை வீட்டில் நட்டு வளர்ப்பதும் தெரிய வந்தது. எது எப்படியோ... அனைவரும் வீடுகளில் மரங்களை வளர்ப்பது சூழலுக்கும் நன்மையளிக்கும் தானே!

உங்களின் தேவைக்கு நீங்களே பயிரிடுங்கள்!

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான கத்தரி, தக்காளி, மிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு.

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகளும் விற்பனைக்கு உண்டு.
வெண்டி - பால்வெண்டி 10கிராம் 150/=
பயிற்றங்காய் - குரங்குவால் 10கிராம் 100/=
கத்தரி - திருநெல்வேலி ஊதா 10கிராம் 150/=
கீரை 30 - 40கிராம் 100/=
தக்காளி 4கிராம் 200/=
பாகற்காய் - திருநெல்வேலி 10கிராம் 200/=
பச்சைமிளகாய் 5கிராம் 100/=
சோளம் 50கிராம் 120/=
பூசணி 20விதை 200/=
முள்ளங்கி 10கிராம் 100/=
பீற்ரூட் 10கிராம் 150/=
முருங்கை - PKM1 15விதை 250/=

வீட்டில் போதிய இடம் இல்லாதவர்களுக்கு Grow Bag வசதி மூலம் மரக்கறிக் கன்றுகள் விநியோகிக்கப்படும்.



மிளகாய் - 200/=
கத்தரி - 250/=
தக்காளி - 250/=
வெண்டி - 250/=

இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட பசளைகள் மற்றும் பூச்சிச் கொல்லிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.



யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் விநியோகிக்கப்படும்.

உங்களின் வீடுகளிற்கு விநியோகிக்கப்படும்.

விநியோக கட்டணம் -
யாழ் மாநகர எல்லை - 50/=
வலிகாமம் - 100/=
தென்மராட்சி - 150/=
வடமராட்சி - 200/=
தீவகம் - 250/=

இலங்கை முழுவதும் தபால் மூலமாகவும் விதைகள் அனுப்பி வைக்கப்படும்

தொடர்புகளுக்கு:- 077 411 4422
shop.semba.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> சந்திர மேற்பரப்பில் பரந்துபட்ட அளவில் நீர் மூலக்கூறுகளைக் கண்டறிந்ததாகக் கூறுகிறது. அதாவது திரவ நீர் சந்திரனில் இல்லை. ஆனால் முன்பு அறிந்ததைவிட அங்கு பரவலாக அதிகளவில் திண்ம நிலையில் நீர் உள்ளது என்று கூறியுள்ளனர் ஆராய்ச்சிக் குழுவினர்.

நிலவில் நிறைய நீர் ஆனால் குடிக்க முடியாது...?

பூமியைத் தவிர்த்து எங்கெல்லாம் வாழ முடியும் என்று தேடி வருகிறான் மனிதன். சூரியக் குடும்பத்திலுள்ள மற்றைய கோள்களில் மனித வாழ்க்கைக்குகந்த நீர், காற்று மற்றும் சூழல் ஏதாவது நிலவுகின்றனவா என்பது குறித்து அவன் தேடிக்கொண்டே இருக்கிறான்.

இதில் செவ்வாய்க் கிரகம் மீது அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால், வெப்ப வாயுக்கள் நிறைந்த மிகவும் கூடான கோள் என்று கருதப்படுகின்ற - சுற்றுவட்டப் பாதையில் பூமிக்கு முன்பாக அமைந்த வெள்ளிக் கோளின் வளிமண்டலத்தில் உயிர்கள் இருப்பதற்கான முதல் அறிகுறிகளைக் கண்டறிந்ததாக அறிவியலாளர்கள் அண்மையில் தெரிவித்தனர்.

அந்தக் கண்டுபிடிப்பு தெளிவுபட உறுதிசெய்யப்பட்டுவிட்டால் இதுவரை செவ்வாய்க்கு விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்கள் கொடுக்கும் கவனத்தையும் ஒதுக்கும் பணத்தையும் இனி வெள்ளிக்கும் கொடுப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில்தான் தற்போது சந்திரனில் பெருமளவில் நீர் இருக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன்மூலம் அனைவரினது பார்வையும் மறுபடியும் சந்திரன் மீது விழுந்துள்ளது. அங்கு நீர் இருந்தாலும் அதைக் குடிக்க முடியாது என்பதுதான் இதில் 'டுவீஸ்ட்'.

நிலவில் நீர்

நிலவில் கால் பதிப்பதற்கு முன்பிருந்தே அறிவியலாளர்கள் சந்திரன் குறித்து ஆராயத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் அங்கு கால் பதித்தது விண்வெளியில் முதல் வெற்றி. கால் பதித்தது மட்டுமல்லாமல் விண்வெளியில் மனிதர்களால் அதிகம் ஆராயப்படுவதும் பூமியின் துணைக்கோளான சந்திரன்தான்.

11 ஆண்டுகளுக்கு முன்பு அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் சிறிய அளவில் நீர் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இப்போது அறிவியலாளர்கள் குழு ஒன்று சந்திர மேற்பரப்பில் பரந்துபட்ட அளவில் நீர் மூலக்கூறுகளைக் கண்டறிந்ததாகக் கூறுகிறது. அதாவது திரவநீர் சந்திரனில் இல்லை. ஆனால் முன்பு அறிந்ததைவிட அங்கு பரவலாக அதிகளவில் திண்ம நிலையில் நீர் உள்ளது என்று கூறியுள்ளனர் ஆராய்ச்சிக் குழுவினர்.

அவர்களின் கூற்றுப்படி நீர் மூலக்கூறுகள் பல சந்திரனின் மேற்பரப்பில் உள்ளன. பல கனிமங்களுக்குள் அவை சிக்கியுள்ளன. மேரிலாந்தில் உள்ள நாசாவின் கோடார்ட் விண்வெளி வானூர்தி மையத்தின் கேசி ஹொன்னிபால் என்பவர் தலைமையிலான குழுவே சந்திர மேற்பரப்பில் இந்த நீர் மூலக்கூறுகளைக் கண்டறிந்துள்ளது.

நீரின்றி அமையாது உலகு

மனித வாழ்வுக்கு நீர் இன்றியமையாதது. அது விலைமதிப்பற்ற வளம். மனிதர்களால் உற்பத்தி செய்ய முடியாதது.

பூமியில் அது தேவைக்கேற்ப இருந்தாலும் மனிதர்கள் நீரை மாசுபடுத்துவதைக் கைவிடுவதாகவில்லை. சந்திரனில் நீர் கண்டறியப்பட்டால், அங்கு மனித இருப்புசாத்தியப்படலாம். அங்குதங்குகின்ற விண்வெளி வீரர்கள், பயணிகளுக்குக் குடிதண்ணீர் விநியோகம் அல்லது எரிபொருளுக்கான மூலப்பொருள் போன்றவற்றை அதிலிருந்து பெறலாம் என்று அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.

இதனால், சந்திரனில் தற்போது கண்டறியப்பட்டுள்ள மறைந்துள்ள தண்ணீரைப்பிரித்தெடுத்துப்பயன்படுத்துவதற்கு ஆராய்ச்சியாளர்கள் முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர். சந்திர மேற்பரப்பில் நீர் மூலக்கூறுகள் கண்டறியப்பட்டாலும் சில கனிமங்களுக்கு இடையிலேயே அது சிக்கியுள்ளதால் இலகுவில் அங்கு தண்ணீரை அள்ளிவிடமுடியாது.

கண்டறிந்த விதம்

மேரிலாந்தில் உள்ள நாசாவின் கோடார்ட் விண்வெளி மைய ஆராய்ச்சியாளர்கள் தொலைநோக்கியைப் பயன்படுத்தி சோஃபியா வான்வழி ஆய்வகத்திலிருந்து சந்திரனை ஆராய்ந்தபோது இதைக் கண்டறிந்தனர்.

இதன் தலைமை அதிகாரி கேசி ஹொன்னிபால் சந்திரனில் திண்ம நீரைக் கண்டறிந்த விதம் குறித்துக் குறித்துக் குறிப்பிடுகையில், நாம் கண்டுபிடித்தது பனிநீர் என்று பலரும் நினைக்கிறார்கள். அது உண்மை இல்லை. இது வெறும் நீர் மூலக்கூறுகள் - அவை சந்திரனின் முழுதும் பரவியிருந்தாலும் அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்டு பனியாகவோ அல்லது திரவ நீரையோ உருவாக்கவில்லை என்கிறார்.

மற்றொரு ஆய்வு

நேச்சர் ஆஸ்ட்ரோனமி இதழில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வில், சந்திரனின் மேற்பரப்பில் குளிர் பொறிகள் என்று அழைக்கப்படுகின்ற பகுதிகள் நிரந்தர இருளில் இருக்கின்றன. அவற்றின் வெப்பநிலை மைனஸ் 260 டிகிரி பாரன்ஹீட் (-163 டிகிரி செல்சியஸ்) ஆக உள்ளது. அதாவது உறைந்த நீர் பில்லியன் கணக்கான ஆண்டுகளாக அங்கு நிலையானதாக இருக்கும் அளவுக்கு அதுகுளிர்ச்சியாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

கொலராடோ பல்கலைக்கழக அறிவியலாளர்கள் பால் ஹெய்ன் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் நாசாவின் சந்திரனை ஆய்வு செய்யும் ஆர்பிட்டர் விண்கலத்தின் தரவைப் பயன்படுத்தி, சந்திரனில் பல்லாயிரக்கணக்கான பில்லியன் சிறிய நிழல்கள் இருப்பதைக் கண்டுபிடித்தனர். இதில் பெரும்பாலானவைதுருவப்பகுதிகளில் அமைந்துள்ளன. சந்திரனில் பல பகுதிகள் நீர் பனியைக் கொண்டிருக்கக்கூடும் என்பதை எங்கள் ஆராய்ச்சி காட்டுகிறது என்று ஹெய்ன் கூறுகிறார்.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டுமா?

நிறைய நீரைச் சந்திரனில் கண்டுபிடித்துள்ளதான இந்த அறிவிப்புக்குப் பிறகு இது குறித்து மேலதிகமாகத் தேடுவதற்காக விண்வெளி வீரர்களை சந்திரனுக்குத் திரும்ப அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது. நிலவிலுள்ள நீர் குடிப்பதற்குக் கிடைக்குமா என்று அவர்களின் ஆய்வு முடிவுகளின் பின்னரே தெரியவரும்.



சந்திரனில் நீர் துருவப் பகுதியில் நிறைந்திருக்கிறது என்று கூறப்பட்டாலும் அது அங்கு மட்டும் கட்டுப்படுத்தப்படவில்லை. சந்திரனில் அது பரவலாக உள்ளது என்கிறார் ஹொன்னிபால். பூமி நீர் நிறைந்தது. சமுத்திரங்கள், நன்னீர் ஏரிகள் மற்றும் பனிக்கட்டிகள் ஆகியவை உள்ளன. பூமியின் நெருங்கிய தோழனான சந்திரனில் நீரின் தோற்றத்தைப் புரிந்துகொள்வது பூமியின் நீரின் தோற்றம் பற்றியும் வெளிச்சம் போடக்கூடும் என்கிறார் ஆராய்ச்சியாளர் ஹெய்ன்.

எது எப்படியோ இனிக் கொஞ்சக் காலத்துக்குச் சந்திரனையே சுற்றிவரப்போகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள் என்பது மாத்திரமே இப்போதைய நிலவரம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எந் நாளும் நலம் வாழ



ஆமணக்கு

மருத்துவர் - கந்தையா சோதிதாசன்

பூமணக்கும் பூங்குழலே காமாலை
கண்நோய் கடும் மூலம் தான் விலகும்
ஆமணக்கால் தீருமாம் முட்டு வலியோடு கீல் வாதம்
போக்குமாம் குடலேற்றம் சிறுநீர்க் கல் விலகும்
பொன்னாகும் நின் மேனி பேரழகே மலச்சிக்கல்
நீக்குமாம் மழலையுண்ண பால் சுரக்கும். ஆதலினால்
ஆமணக்கு மாநிலத்தில் நன் மருந்தென்றறி.

விளக்கவுரை: மலர்களின் வாசம் வீசும் கூந்தலையுடையவளே. சூட்டினால் ஏற்படும் கண்நோய்கள் மூலநோய் என்பன ஆமணக் கால் குணமாகும். இதன் எண்ணையால் மூட்டுவலி கீல் வாதம் என்பனவும் குணமாகும். இது சிறுநீர் கல்லுக்கு மருத்துவமாக நூல் களில் சொல்லப்படுகிறது. இது தோலுக்கு நிறமளிக்கிறது. இதன் எண்ணெய்யுடன் மஞ்சள் சேர்த்துக் கலந்து பூசி வர தோலின் கருமை நீக்கி பொன்னிறத்தை தருகிறது. பேரழகையுடையவளே! இது மலச்சிக்கலை நீக்குவதில் சிறப்பாகச் செயற்படுகிறது 4 தேக் கரண்டி அளவு ஆமணக்கு எண்ணெய், 1 தேக்கரண்டி அளவு தேன் ஆகியவற்றை நன்றாகக் கலந்து உள்ளுக்குள் சாப்பிட சுகபேதியா கும். சிறுவர்களுக்கு இந்த அளவில் பாதியும், கைக்குழந்தைகளுக்கு இந்த அளவில் நான்கில் ஒரு பங்கும் தரலாம். இது ஒரு சிறந்த கை மருந்தாகும். இது குழந்தைகள் அருந்தும் தாய்ப்பால் சுரப்பை அதி கரிக்கச் செய்கிறது. (தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்க பசுமையான ஆமணக்கு இலையை நெய் தடவி, அனலில் இலேசாக வதக்கி, இளஞ்சூடான நிலையில் மார்பில் வைத்துக் கட்டலாம்.) எனவே பல நன்மைகள் கொண்ட ஆமணக்கினை இந்த நிலத்தின் நன் மருந்தென்று அறிவாயாக.

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேனர்ஸ்

கிருபா லேனர்ஸ் KIRUBAA LEARNERS

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேலன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர்களைச் சார்ந்து வாழ விரும்பும் முஸ்லிம்கள்

● வி.அருணாசலம்

1915 இல் கண்டிக் கலகம் இடம்பெற்றது. முஸ்லிம்களின் பள்ளிவாசலுக்கு முன்னால் பேரிகைகளையும் வாத்தியங்களையும் சிங்களவர்கள் இசைத்ததுதான் முஸ்லிம் சிங்கள முரண்பாடாக உருவெடுத்தது. இதையொட்டி நடந்த கலகத்தில் பிரித்தானிய நீதிமன்றம் சிங்களவர்கள் 9 பேருக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியது.

சேர்.பொன் இராமநாதன் பிரிட்டன் சென்று அந்தத் தூக்குத் தண்டனைத் தீர்ப்பை பிரித்தானிய முடியுடன் பேசி இல்லாமல் செய்திருந்தார். பிரிட்டனிலிருந்து அவர் கொழும்புத் துறைமுகத்துக்குக் கப்பலில் வந்திறங்கியபோது அவரை யானை மீது ஏற்றி ஊர்வலம் நடத்திச் சிங்களவர்கள் கௌரவித்தார்கள். முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் இது தமிழர் பற்றிய மனக்கசப்பை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்தின் பின் சிங்கள ஆட்சியாளர்களுடன் இசைந்து வாழும் முடிவை முஸ்லிம் தலைவர்கள் எடுத்தார்கள்.

2019 ஏப்பிரல் 21 ஆம் திகதி சஹ்ரான் தலைமையில் நடந்த குண்டு தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம் - சிங்கள உறவில் எதிர்பாராத வகையில் பெரும் விரிசல்கள் ஏற்பட்டன. எனினும் அப்போது ஆட்சியில் இருந்த நல்லாட்சி அரசை வைத்து ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் போன்றவர்கள் சாதுரியமாகக் காய் நகர்த்திக் கொண்டார்கள். முஸ்லிம்களுக்கு எதிரான ஓர் இனக்கலவரத்தைத் தவிர்த்துக் கொண்டார்கள்.

தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள் அரசியலில் நிலை தடுமாறும் சூழல் காணப்பட்டது. அதன் பின்னர் 2019 நவம்பர் 17ஆம் திகதி அதிபர் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் களமிறங்கிய கோட்டாபயவைத் தோற்கடித்து சஜித் பிரேமதாசவை வெல்ல வைப்பதன் மூலம் தாம் இந்த நாட்டில் நிலைக்க முடியும் என்று நினைத்து சஜித் பிரேமதாசவுக்கு முஸ்லிம்கள் வாக்களித்தபோதிலும் அதுமுடியவில்லை. அடுத்தசந்தர்ப்பமாக 2020பொதுத் தேர்தலில் சஜித்தைப் தலைம அமைச்சராக்குவதன் மூலம் தமக்கான அரசியல் தளத்தைத் தக்கவைக்க முடியும் என நினைத்துச் செயற்பட்ட போதிலும் 3 இல் 2 பெரும்பான்மைப் பலத்தை கோட்டாபய அரசே பெற்றது.

முஸ்லிம்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படும்போதெல்லாம் முஸ்லிம் தலைவர்கள் வன்முறையில் ஈடுபடுவதில்லை. மாறாகத் துஆ கேட்பார்கள் (பிரார்த்தனை). மகிந்த ராஜபக்ச 52 நாள்கள் தலைமை அமைச்சராக மைத்திரியால் பதவியில் அமர்த்தப்பட்டபோது, ஹக்கீம், ரிசாத் ஆகிய இருவரும் புனிதமக்காவுக்கான உம்ராத் தொழுகைக்குச் சென்றதன் மூலம் நெருக்கடியைத் தவிர்த்தார்கள்.

இவ்வாறான சூழலில் சஹ்ரான் குண்டுதாக்குதலை மேற்கொள்வார் என முஸ்லிம் தலைவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. இந்தத்தாக்குதல்தொடர்பான விசாரணைகள் முஸ்லிம்களைப் படிப்படியாக எல்லா மட்டங்களிலும் ஓரம் கட்டுவதாக அமைந்தது. மாட்டிறைச்சி வெட்டத் தடை, கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களை இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்யாது விட்டமை, ரிசாத் பதியுதீனின் சகோதரினின் கைது, ரிசாத் கைது என எல்லாமே முஸ்லிம்களைத் துரத்துவதாக அமைந்தன.

முஸ்லிம்களின் தெரிவு சிங்களவரே

முஸ்லிம்களின் முதன்மைத் தொழில் முயற்சி வியாபாரம். அதற்கு இங்குள்ள பெரும்பான்மை இனத்தவரின் கொள்வனவு மிகமிக அவசியமானது. வடக்குக் கிழக்குக்கு அப்பால் முஸ்லிம் மாணவர்கள் சிங்கள மொழியிலும் தமது கல்வியைக் கற்கின்றனர். 30 வருட சிங்கள - தமிழர்களின் போராட்ட காலத்தில் கூட முஸ்லிம்கள் சிங்களவர்களுக்குச் சாதகமாகவே செயற்பட்டனர்.

மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் ஜிகாத் என்கிற தனியான முஸ்லிம் படைப்பிரிவு ஒன்றைக் கிழக்குமாகாணத்தில் களமிறக்கும் பிரேரணையை முன்வைத்தார். ஆனால் அப்போதைய பாதுகாப்பு அமைச்சராகவிருந்த ரஞ்சன் விஜயவர்த்தனதான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

முஸ்லிம்களின் பேரம் பேசும் ஆற்றல்

1981ஆம் ஆண்டு அஷ்ரப் முஸ்லிம் காங்கிரசை உருவாக்கும் முயற்சியில் இறங்கியிருந்தவேளை அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அவரைச் சந்தித்து "நீங்கள் புதுக் கட்சி ஒன்றை உருவாக்கத் தேவையில்லை. வடக்குக் கிழக்கில் தமிழ் பேசும் முஸ்லிம்கள் என்ற அடையாளத்துடன் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழலை நாம் ஏற்படுத்தித் தருவோம்" என்று கூறியபோது, முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கென்று தனியான கட்சி ஒன்று அவசியம என்பதைத் தெளிவுபடுத்தி அமிர்தலிங்கம் தலைமையிலான குழுவினரை அனுப்பி வைத்தார் அஷ்ரப்.

அவரது அரசியல் நுழைவு என்பது காணப்படுகின்ற சூழலை ஆராய்ந்து அதற்கேற்ப தமது ஆதரவு நிலைப்பாட்டை முன்வைப்பதாகவே இருந்தது.



1989இல் பிரேமதாச அரசுக்கு எதிராக லலித் அத்துலத் முதலியும் காமினி திசநாயக்காவும் நம்பிக்கையில்லாப்பிரேரணையைக் கொண்டுவந்தபோது பிரேமதாச, அஷ்ரப்பை நாடித் தனக்கு ஆதரவளிக்குமாறு கேட்டபோது அதற்குக் கைமாறாக நிந்தவூர் குடிநீர் வழங்கல்திட்டத்தை வழங்குமாறு கேட்டுப் பெற்றுக் கொண்டார்.

தற்போதைய 20ஆவது அரசமைப்பு விடயத்திலும் முஸ்லிம் தலைவர்கள்; அஷ்ரப்பின் அணுகுமுறையையே கையாண்டனர். அதிபர்தேர்தலிலும்பொதுத் தேர்தலிலும் தாம் சார்ந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி பெரும் வீழ்ச்சியைக் கண்டபின் இனிவரும் பத்து ஆண்டுகால அரசியலில் ராஜபக்ச தரப்பே நிலைத்திருக்கும் என்பதை அறிந்த முஸ்லிம் தலைவர்கள் தாம் ஒதுக்கப்பட்டுப்பத்துவருட வளர்ச்சியை இழக்க விரும்பவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் காபிர் நசீர் "இந்த ஆட்சி அபிவிருத்திக்காக அதிகளவு நிதியைச் செலவிட இருப்பதால் முஸ்லிம் மக்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு நாம் இந்த ஆட்சிக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

20ஆவது திருத்தத்துக்கான 3 இல் 2 பெரும்பான்மை வாக்குகள் என்பது கோட்டாபய ஆட்சியின் மதிப்பை, மரியாதையைத் தீர்மானிக்கும் விடயமாக இருந்தமையால் அந்தத் தருணத்தைப் பயன்படுத்தி முஸ்லிம் தலைவர்கள் தற்போதைய ஆட்சியைக் காப்பாற்றிய "கிங் மேக்கர்களாக" மாறியிருக்கிறார்கள். இலங்கையின் மூன்றாவது சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் தொடர்ச்சியாக இலங்கைத் தேசிய அரசியலில் பங்கெடுத்து வருகின்றனர்.

விமர்சனங்களுக்குப் பயப்படாத முஸ்லிம்கள்

முஸ்லிம்கள் மத ரீதியாகவோ, பண்பாட்டு ரீதியாகவோ சிங்களவருடன் இணையக்கூடிய சூழல் இல்லாதபோதிலும் சிங்களவர்கள் எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தாலும் இலங்கைக்குள் நின்று அரசியல் நடத்துவதே முஸ்லிம்களுக்கு இருக்கும் வழிமுறையாகும். அவர்கள் இந்தியாவையோ, அரபு நாடுகளையோ, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளையோ பின்னணியாகக் கொண்டு அரசியல் நடத்துவதில்லை.

அவர்களுக்கு இருக்கின்ற ஒரே வழி பெரும்பான்மைச் சிங்கள மக்களுடனும் ஆட்சியாளருடனும் இணைந்து செயற்படுவதே.

20 திருத்தத்தைத் தமிழருக்குச் சார்பாக நின்று எதிர்ப்பதால் தமக்கு எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை என்பது முஸ்லிம்களுக்கு நன்கு தெரியும். இந்த நிலைப்பாட்டை 1981இல் அஷ்ரப் தனிக்கட்சி ஒன்றை அமைத்ததில் இருந்தே செயற்படுத்தி வருகின்றனர். அதேவேளை தமது ஆதரவு இல்லாது பெரும்பான்மைக் கட்சிகள் தம்மை நிலைப்படுத்த முடியாது என்பதை நடைமுறையில் கையாள்வதிலும் அவர்கள் வல்லவர்களாகவுள்ளனர்.

வாக்களிப்பை நியாயப்படுத்தி வருகின்றனர்

கோட்டாபய அரசு 150 ஆசனங்களைப் பெற்றிருந்தபோதிலும் சபாநாயகர் மற்றும் முன்னாள் அதிபர் மைத்திரி ஆகியோர் வாக்களிக்காத நிலையில் 148 வாக்குகளே 20க்குச் சார்பாகப் பதிவு செய்யப்பட்டன. இந்த நிலையில் அரவிந்தகுமார் மற்றும் டயான கமகே ஆகியோர் அளித்த வாக்குகளால், 150 ஆக மாறியது. அதேவேளை 3 இல் 2 இற்கு மேற்பட்ட 6 வாக்குகளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி 4 வாக்குகளையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 2 வாக்குகளையும் வழங்கின.

"இந்த 6 வாக்குகளையும் தற்போது முஸ்லிம்கள் உச்ச கட்டப்பேரம் பேசும் வலுவாக மாற்றியிருக்கிறார்கள். இதில் முதலாவதாக கொரோனாவல் இறக்கும் முஸ்லிம்களை இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்ய வேண்டும் என வலியுறுத்துவது அமையும். சவ அடக்கத்துக்கான அனுமதி கிடைத்தால் இஸ்லாத்தைக் காப்பாற்றியவர்களாக வாக்களித்த 6 முஸ்லிம்களும் கட்சி பேதமின்றி வாழ்த்தப்படுவர்.

இது விடயத்தில் ஹக்கீம், ரிசாத் ஆகியோர் தமது கட்சிக்காரர்கள் அரசுக்குச் சார்பாக வாக்களித்தது தொடர்பில் கண்டிக்கவில்லை என்பது இது பற்றி அவர்களுக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தது என்பதையே காட்டுகிறது. அதேவேளை சார்பாக வாக்களித்த 6 பேருக்கும் எதிராக ஹக்கீமும் ரிசாத்தும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காது விட்டால் அவர்களையும் மக்கள் சக்தி கூட்டிலிருந்து விலக்குவோம் என்று சஜித் தலைமையிலான குழுவினர் எடுத்திருக்கும் முடிவு கோட்டாபய அரசுடன் இவ்விருவரும் கூட இணைவதற்கான பொன்னான வாய்ப்பையும் (வேறு வழியின்றிச் சேர்ந்தோம் என்பார்கள்) வழங்கியிருக்கிறது.

ஆக மொத்தத்தில் முஸ்லிம் தலைவர்கள் தமது இனத்தைப் பாதுகாப்பதற்கான செயற்பாட்டையே மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் போய் அரசியலில்எப்போதுவேண்டுமானாலும்எவர் பக்கமும் செல்லக்கூடியவர்கள் என்கிற வகையில் தமிழ் அரசியல்வாதிகள் விமர்சிக்க முற்படுவது ஏற்புடையது அல்ல.

தமிழ் அரசியல்வாதிகள் தமது பிறந்த தினம், மனைவி - பிள்ளைகளின் பிறந்த தினம் என மகிந்த, மைத்திரி, ரணில் ஆகியோரை அழைத்து கேக் வெட்டுவது, தமது பிளைகள், உறவினர்கள், அறிந்தவர், தெரிந்தவர், ஆதரவாளர்களுக்கான வேலை வாய்ப்புகளைப் பெறுவது, அமைச்சர்களிடம் நேரில் சென்று பேசி ஒப்பந்த வேலைகளைப் பெறுவது என்றுகாரியமாற்றுவதற்கும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் அரசியலுக்கும் இடையில் பெரிதாக வித்தியாசமில்லை.

முஸ்லிம் தலைவர்கள் ஆட்சியாளர்களை அனுசரித்துத் தமது சமூகம் சார்ந்து முடிவுகளை எடுக்க, தமிழ்த் தலைவர்கள் அரசை அனுசரித்துத் தமது குடும்பம் சார்ந்தே முடிவுகளை எடுக்கிறார்கள் என்பது கவலைக்குரியதே. .

வடக்குக் கிழக்கு இணைந்த தீர்வு விடயத்தில் முஸ்லிம்களும் சிங்கள ஆட்சியாளர்களும் ஒரே நிலைப்பாட்டையே எதிர்காலத்தில் எடுப்பார்கள். முஸ்லிம்கள் ஒருபோதும் தமிழருடன் இணைந்து அரசியல் செய்யப்போவதில்லை. தமிழரின் தீர்வுத் திட்ட விடயத்தில் இன்னோர் தடையாக முஸ்லிம்கள் இருப்பார்கள்.

தமிழர்கள் தமக்கான தீர்வுகளை எட்டுவதற்குப் பெரும்பான்மைச் சிங்களவர்களையும் சிறுபான்மை முஸ்லிம்களையும் சமகாலத்தில் கையாள வேண்டும். ஒரு சாராரையே கையாள முடியாமல் உழன்று வருகின்ற தமிழ்த் தலைவர்கள் என்கிற குருவிகளின் தலையில் பனம் பழமாகவே தமிழ் மக்களுக்கான தீர்வுகள் இனி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம் மிகு வாழ்வுக்கான வழிகாட்டலின் நிலை

பகுதி - 4

பேர் அறிஞன்

முறையில் கல்வி மற்றும் முறைசாராக் கல்விபோன்ற தொழிலுலக அறிவை வழங்கும் கல்வி முறைகளுள் முறையில் கல்விக்கான வாய்ப்புகள் குறைக்கப்பட்ட அல்லது பெருமளவிற்குக் குறைக்கப்பட்ட ஒருசூழலில் அதுதொடர்பாக தனிக் கவனம் செலுத்தப்படல் அவசியமானது.

இது விடயத்தில் அனைவருக்கும் கல்வி கட்டாயக் கல்வி மற்றும் சிறுவர் உரிமைகள் எனும் பெறுமதிமிக்க விடயங்கள் தொடர்பான புரிதல் குறைபாடு முதன்மைக் காரணியாக இருப்பதாகவே அவ தானிக்க முடிகிறது.

அதிலும் குறிப்பாகக் கட்டாயக் கல்வி என்பது வெறுமனே பாடசாலை வகுப்பறைப் போதனைக் கல்விதான் என்பது தவறான புரிதலேயாகும். இது அனைவருக்கும் முறைசார் கல்வி என்பதற்கும் பொருந்திப் போகிறது அல்லது வலிந்து பொருத்தப்படுகிறது. இதுவே சிறுவர் உரிமை எனும் விடயத்திற்கான முதன்மையான எதிர்ச் சிந்தனையாகவும் உள்ளது.

சிறுவரது விருப்பத்திற்கு மாறாக அவர்களுக்கு இயலாத அல்லது விரும் பாத ஒரு சூழலுக்குள் வலிந்திழுத்துச் சிறை வைக்கப்படுகின்றனர் என்பது தொடர்பான எண்ணங்களேதும் எழுந்துள்ளனவா?

அதாவது அவர்களுக்குப் பொருத்தமற்ற ஒரு கல்வி முறைக்குள்ளே ஆர்வமாக ஆராய்ந்தறிந்து எதையும் துருவி ஆராயும் பதின்மப்பராயத்தை முடக்கி வைத்துவிட்டுபின்னாட்களில் தொழிற் தகைமையும் தொழிற்தேர்ச்சி யும் அற்றவர்களாக அவர்களை முடக்கி வைத்ததை முற்றாக மறந்து அல் லது மறைத்து எதற்கும் உதவாத ஒரு தலைமுறை என்று அவர்களைக் குற் றம் சுமத்துவது நியாயமானதா?

அது அல்லது இவை பற்றிய திறந்த விவாதங்கள் ஆய்வுகள் ஏதும் நடந்தனவா? நடக்கின்றதா?

முறைசார் கல்விக்கூடாகத் தொழில்சார் வாழ்க்கைக்கு ஒருவனைத் தயார்ப்படுத்தமுடியுமாக இருந்தால் கட்டாயக்கல்வி என்பதை பாடசாலைகளில் வழங்குவது பொருத்தமுடையதுதான் என கூற முடியும்.

ஆனால் இன்றுள்ள முறைசார் கல்விப் பரப்பென்பது முன்பள்ளி தொடக்கம் க.பொ.த. சாதாரண தரம் வரை தடையற்ற வகுப்பேற்றம் என்று போய் க.பொ. த. சாதாரணதரப் பெறுபேறுகளின் வெளிவருகையோடு வீழ்ச்சி எனும் கூப்பாடு கள் வரை நடப்பன என்ன என்கின்ற விதமான திறந்த சுயாதீன ஆய்வுகளேதும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றனவா?

ஏன் அந்தச் சிந்தனைகூட எழவில்லை? இங்கேதான் முறைசார் கல்வியின் ஓர் அறுவடையை அவதானிக்கலாம்.

எப்படியெனில் உயர்பீடங்களிலும் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான இடங்களில் இருப்போர் பெற்றுக்கொண்டது வெறும் சான்றிதழ்களேயன்றி பிரயோக அறிவோ அல்லது சிந்தனையாற்றலோ அல்ல என்பதுதான் அது.

இவர்களால் பொருத்தமான முடிவுகளை எடுக்க முடியாமைக்கு அவர்களது (பதவி) இருப்பைத் தக்கவைத்தல் என்பதற்கப்பால் சிந்திக்க முடியாத ஏட்டு அறிவே காரணம் என்று கூறும் ஒருவனுக்குக் கூற அல்லது மறுதலித்து வாதிட ஏதாவது விடயங்கள் உள்ளனவா?

பொருத்தமற்ற ஏட்டுக் கல்வி அடிப்படையிலான கற்ற துறைக்குப் பெரும ளவில் பொருத்தப்பாடில்லாத தொழில் நியமனம் பெற்று வரும் ஒருவனால் பொருத்தமற்ற ஒன்றை எனினும் வினைத்திறனுடன் ஆற்ற முடியுமா?

அவ்வாறானவர்களால் எப்படி சூழலுக்கேற்றபடி பொருத்தமாகச் சிந்தி க்கவும் செயலாற்றவும் முடியும்?

உயர்தர வகுப்புகளிலும் சரி பட்டநெறிகளுக்கான பல்கலைக்கழகக் கல்வியாயினும் சரி எல்லாமே எப்போதோ வகுக்கப்பட்ட, எங்கோ தீர்மானிக் கப்பட்டபடியேதான் நடந்தேறுகின்றன.

அத்தகைய முறைசார் கல்வியைப் பெற்றவர் களால் சுயமாகச் சிந்திக் கவும் செயற்படவும் முடியுமெனவும் வினைத்தி றனான பெறுதியொன்று கிடைக்கு மென்றும் எப்படி எதிர்பார்க்க முடியும்?

இத்தகைய முறைசார் கல்வியால் உருவாக்கப்பட்ட - கற்பித்தல் பட்டய (டிப்ளோமா) மற்றும் பயிற்றப்பட்ட தொகுதி கல்விப் போதனையார்களினால் நிலைமைக்கேற்ப சிந்தித்தப் போதிக்கும் திறன் ஊடாக உருவாக்கப்பட்ட - பட்டதாரிகளின் அறிவுபூர்மாக சிந்தித்து ஆராய்ந்து முடிவெடுக்கும் திறன் நிலை என்ன? இவை தொடர்பான தொடர் மதிப்பீடுகளேதும் உள்ளனவா?

குறித்த போதனையாளர்கள் மற்றும் அவர்களை வழிப்படுத்துவோர் கொண்டுள்ள தொழிற் தேர்ச்சி மற்றும் அவர்களது செயற்றிறன் தொடர்பாக அளவீடுகளேதும் உள்ளனவா? அவ்வாறான அளவீட்டு முறைகள் (மீண்டும் எழுத்துப் பரீட்சை தவிர்ந்த) அளவு கருவிகளேதும் உள்ளனவா?

இவை தொடர்பான தொடர் செயற்பாடுகளின் தேவை பற்றிய சிந்தனைகளே தும் இதுவரை எழாததுகூட, பழக்கப்பட்ட முறைக்கு வெளியே சிந்திக்கக்கூட இயலாதவர்களாகவே நாம் உள்ளோம் என்பதற்கான ஒரு குறிகாட்டியேயன்றி வேறில்லை.

முறைசார் கல்வி என்பதற்குள்ளே பாடத்திட்டம், பாடப்பரப்பு என்பதற்கப்பால் போதனை முறைமை எனும் மிகப்பெரியதொரு விடயம் உள்ளதென்பதும் அதிலீடுபடுபவரின் திறனில் அது தங்கியுள்ளதால் அது பற்றிய கவனம் அதி கம் செலுத்தப்பட வேண்டியதொன்றென்பதும் கவனிப்பாரின்றியிருப்பது கவலைக்குரியது.

இந்த நிலையில்தான் முறைசார் கல்விக்குள்ளே பிள்ளைகளை இழுத்துத் திணிக்கும் செயல்துறைகள் முனைப்பாக நடைபெற்றுவருகின்றன.

அவர்கள் தமது வாழ்வுக்காக மிக இலகுவில் தமக்குப் பிடித்தமான, பொருத்தமான சூழலில் பெறமுடிந்த முறையிலும் மற்றும் முறைசாராக் கல்வி யையும் பெறும் அவர்களுக்கான உரிமை மீறப்படுகிறது.

சிறுவர்மீதானவன்முறைமுறைகேடுபோன்றவிடயங்கள்கண்காணிக்கப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் அவர்களுக்குரித்தான வாழ்வை வாழ சீரான வழிகாட்டல் கள் வழங்கப்படுகின்றனவா? இதில் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் துறை களின் பங்கு என்ன? அவற்றினது இயங்குதிறன் எந்தளவிலுள்ளது? போன்ற கேள்விகளை எழுப்பவேண்டிய தேவை உள்ளது, அதனையாவது பொருத்த மான முறையில், துறையில் செய்கின்றோமா?

(தொடரும்.....)

சிறுவரது விருப்பத்திற்கு மாறாக அவர்களுக்கு இயலாத அல்லது விரும்பாத ஒரு சூழலுக்குள் வலிந்திழுத்துச் சிறை வைக்கப்படுகின்றனர் என்பது தொடர்பான எண்ணங்களேதும் எழுந்துள்ளனவா?

விண்வெளியிலும் இனிமேல் விபத்தைத் தடுக்கத் திட்டம்

நோர்த் ஸ்டார் எர்த் ரூ ஸ்பேஸ் என்பது உலகளாவிய சுற்றுச் சூழல் பாது காப்பில் அக்கறைப்படுகின்ற கனடாவைச் சேர்ந்த நிறுவனம். தலேஸ் அலீனியா ஸ்பேஸ் என்பது பிரெஞ் - இத்தாலிய நாடுகளால் இயக்கப்படு கின்ற விண்வெளிப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனம். இந்த இரண்டு நிறுவனங்களும் இணைந்து விண்வெளியில் நடக்கின்ற விபத்துகளைத் தடுப்பதற்காகப் புதிய திட் டம் ஒன்றைத் தீட்டியுள்ளன.

இப்போதெல்லாம் விண்வெளியில் விபத்துகள் மோதல்கள் அதி கரித்துவிட்டன. இதனால்தான் அவற்றைத் தவிர்ப்பதற்கான திட்டங்க ளில் இவை இணைந்து ஈடுபட்டுள்ளன. அதாவது விண்ணில் நிகழ்கின்ற விபத்துகளைத் தடுப்பதற்காக விண்வெளியில் செயற்கைக்கோள் அமைப்பு ஒன்றை நிறுவுகின்ற பணிகளைத் தொடங்கப்போவதாக இவை கூறியுள்ளன.

இதன் முதற்படியாக நோர்த் ஸ்டார், அதன் 'ஸ்கைலர்க்' என்கிற விண்மீனின் முதல் மூன்று செயற்கைக்கோள்களை உருவாக்குவதற்காக தலேஸ் அலீனியா ஸ்பேஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

விண்வெளியில் இருந்தவாறே விண்வெளியில் உலாவுகின்ற செயற்கைக்கோள்கள் போன்ற மனிதர்களால் விண்ணுக்கு ஏவப்படுகின்ற பொருள்களைக் கண்காணிக்கும் முதல் வணிக சேவையாக இந்த விண்மீன் குழுக்களை விண்ணில் நிறுவுகின்ற திட்டம் இருக்கும். விண்ணில் நிறுவப்படுகின்ற அவற்றால், பூமியிலிருந்து விண்பொருள்களைக் கண்காணிப்பதைவிடத் துல்லியமாகக் கண்காணிக்க முடியும்.

விண்வெளியில் விபத்துகள் அதிகரித்துள்ள நிலையில் இந்தத் திட்டத்தைத் தீட்டியுள்ளன குறித்த நிறுவனங்கள். இந்த நிறுவனங்களின் திட்டப்படி விண்வெளி விபத்துகளைக் கண்காணிப்பது - தடுப்பது மாத்திரமன்றி விபத்துகளின் பின்னரான குற்றப்பணம் அறவீடு மற்றும் காப்புறுதிக் கொடுக்கல் ஆகியன குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது.

இதைவிட முக்கியமாக விண்வெளியில் சேர்கின்ற குப்பைகளைக் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும்கூட வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பூமியைப்போல மனிதர்களின் ஆதிக்கம் விண்வெளியில் அதிகரித்துவிட்டதால்தான் இவ்வாறான நிலை என்று சூழலியலாளர்கள் விவாதிக்கின்றனர்.

அமெரிக்காவின் தகவல்தொடர்பு குழு இரிடியம் சேட்டிலைட் எல்.எல்.சி மற்றும் ரஷ்ய காஸ்மோஸ் - 2251 படைத்துறைச் செயற்கைக்கோள் ஆகியவற்றால் இயக்கப்படும் விண்கலத்திற்கு இடையில் 2009ஆம் ஆண்டில் விண்ணில் நடந்த மோதல் பெருமளவு குப்பைகளை விண்வெளியில் பரப்பியது. அதன் பின்னர் விண்வெளியில் குப்பைகள் அதிகரித்து, அவை விண்வெளியில் மிதக்கின்ற - வேகமாக நகர்கின்ற காரணங்களால் பிற செயற்கைக்கோள்கள் தாக்கப்பட்டு சேதமடையக்கூடும் என்ற அச்சம் எழுந்தது.

இதனால் விண்வெளிக் குப்பைகள் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு செயற்கைக்கோள் ஏவுகின்றவர்கள் மீது 'சுற்றுப் பாதை நெரிசல் கட்டணம்' விதிக்க வேண்டும் என்று குரல்கள் எழுந்தன. இந்த நிலையில்தான் இதற்கு தீர்வு காணும் வகையில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசம் 5 லட்சம் உழைப்பன்!

இது ஒரு செம்மறிக் கதை

சும்மா ஒரு மாசம் இதாலை எவ்வளவு உழைக்கலாம் சொல்லுங்கோ பாப்பம்...? ஆடுகளாலை... ஐஞ்சு லச்சம் உழைக்கலாம். உவை யாராவது உழைப்பினமோ? சம்பளம் தருவாங்களோ?

"நாடோடிக் கணக்கிலதான் வாழ்க்கை. இஞ்சை முடிச் சுக்கொண்டு வாற மாசம் வேற தோட்டத்துக்குப் போகவேணும். பிறகு வேற தோட்டம். இப்பிடியே போகுது..."

நர்றாசர் என்று ஊரவர்களால் அழைக்கப்படுகின்ற நடராசர் ஐயா கைதடியைச் சேர்ந்தவர். பெருங்கூட்டமாக அவர் செம்மறி ஆடுகளை மேய்த்துத் திரிவதை செம்மணி, கைதடி, நாவற்குழிப் பகுதிகளிலுள்ள வயல்வெளிகளில் கண்டிருக்கிறேன். அவரது தொழில் எப்படியிருக்கும் என்று அறிகின்ற ஆவல் அப்போதெல்லாம் என்றும் மேலோங்கியிருந்தது.

கைதடியில் வசிக்கிறார் என்று அறிந்து அவரைத் தேடிச் சென்று விசாரித்து அவரது வீட்டை ஒருவாறு கண்டடைந்துவிட்டாலும், வீட்டில் அவர் இருக்கவில்லை. இறுதியில் எழுதுமட்டுவாழ்பகுதியில்உள்ளதென்னம் தோட்டம் ஒன்றில் ஆடுகளுடன் அவரைக் கண்டுபிடித்தேன். தொழிலில் சளைக்காத இடையராக அங்கும் அவர் ஆடுகளையேமேய்த்துக்கொண் டிருந்தார். நான் தேடியலைந்து கண்டு பிடித்ததைக் கூறியதும் தனது வாழ்க் கையே ஆடுகளுடன் அலைவதாகத் தான் இருக்கிறது என்று சாதாரணமா கக் கூறிச் சிரித்தார். தனது வாழ்வனுப வங்களையும் பகர்ந்தார்.

"57ஆம் ஆண்டு பிறந்தனான். இப்ப 63 வயது. ஆடு வளக்க 28.... 30 வய தில தொடங்கினது. எங்கட அப்பா நிறைய மாடு வளத்தவர். அப்ப எனக் கொரு சின்ன விருப்பம் வந்திற்று ஆடு வளப்பம் எண்டு. ஏ.எலெவல் முடிச்சாப் பிறகு எனக்கு அரச உத்தியோகம் கிடைச்சது. கவர்மெண்ட் ஜொப்...! அஞ்சாறு இடத்தில வேலை செய்த னான். படி மார்கெற்றிங் போர்ட் எண் டுறது நெல் சந்தைப்படுத்தும் சபை. அங்க நான் அசிஸ்ரென்ட் ஸ்ரோர் கீப்பர். அதுக்குப் பிறகு சீரியிலை... பிறகு போஸ்ற் ஒவ்பீசிலை... ஸ்ரேற் டிசிலறிஸ் கோப்பிறேசன்... (அரச வடி சாலைகள் கூட்டுத்தாபனம் - சாராயம்) சீதுவை களுத்துறையில இருக்கு. எல்லாம் 6 மாத பீரியட்டுக்கை தான்..."

அரச வேலையிலிருந்தாலும் ஐயா வுக்கு நாட்டம் ஆடு வளர்ப்பதிலேயே இருந்துள்ளது. அதனால் அரச வேலை களை உதறித் தள்ளிவிட்டுத் தனக் குப் பிடித்த தொழிலில் இறங்கி இன் றைக்குப் பெரியதொரு இடையனாகி விட்டேன் என்றும் பெருமைப்பட்டார்.

"கைதடியிலதான் தொழில் தொடங்கினது. வல்லைவெளி இருக் கெல்லோ.. வல்லைவெளி அங்கதான் ஆடு வாங்கினான். 40 ஆடு. ஒரு ஆடு 250ரூபா போட்டவங்கள். பத்தாயிரம் ரூபா. பத்தாயிரம் ரூபாயிலையும் 500ரூபா கழிச்சு விட்டிட்டான். 9500ரூபா நான் குடுத்த காசு. இப்ப ஒரு ஆடு வந்து 15 ஆயிரம், 20 ஆயிரம் வரை போகுது. ஆகக்கூடுதலா ஆயிரத்து ஐஞ்நூறு ஆடு எல்லாம் என்னட்ட நிண்டது, இப்ப ஒரு நானூறுதான் நிக் குது. நானே வித்துப்போட்டன். ஏனெண் டால் இது நான் தனியச் செய்யக்கூடிய வேலையில்ல. 50 - 100 எண்டால் ஒராள் தனிய ஓ.கே. (இடையிடையே ஆங் கிலமும் பேசுகிறார்) ஆயிரக் கணக் கில செய்யிறதெண்டால் தனியச் செய்ய ஏலாது. மூண்டுபேர் வேணும். நான் முதல் ஆயிரக் கணக்கில செய் யேக்க 4 பேர் 5 பேர் வேலைக்கு வைச் சிருந்தனான். இப்ப ஆக்களில்லை. வந்தாலும் இடையில நான் போகப் போறன் எண்டு போயிருவாங்கள். ஒருத்தருக்கும் விருப்பமில்லாத தொழில்... காடு மேடு வெயில் மழை பாராது திரியவேணும். தொகையா வளக்கேக்க நிறைய வருத்தங்கள் வரும். உந்தப் பை நிறைய மருந்துகள் தான் கிடக்குது. அவளவும் மருந்து 40, 50ஆயிரம் ரூபா மருந்துகள் கிடக்கு. இந்த முறை மழையில்லாததால வருத் தங்கள் இன்னும் வரயில்லை' என்றவர், யாழ்ப்பாணத்தில் ஒரு சிலரே இந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள் என்று பட்டியலிட்டார்.

"கைதடிப் பிள்ளையார் கோவில் வழிய மேய்க்கிறது ஒண்டு. தெல்லிப்ப ளையச் சேந்தவரின்ர ஆடுகள். மற்றது அளவெட்டியிலஒராள் வைச்சிருக்கிறார். அது பரம்பரையா வளக்கிற ஆடுகள். அது தகப்பன்ர தகப்பன்ரயெண்டு தலை முறை தலைமுறையா வைச்சிருக்கினம். மற்றது தெல்லிப்பளையில துர்க்கை யம்மன் கோயிலடியில இன்னுமொண்டு நிக்குது. அதுவும் தலைமுறைதான் மாமன் - மருமகன் எண்டு அப்பிடித் தொடருது. வல்லை வெளியில ஒண்டு நிற்குது. அது பெரிசாக் கனகாலம் எண் டில்ல. 20 வருசம் வரும். அளவெட்டி ஆடுகள்தான் கூட. ஆடுகளும் கூடக் காலமும் செய்யிற ஆடுகள்.

72வயது அவருக்கு. கலியாணம் முடிக்கயில்லைபோல... ஆட்டுக்காக... மற்றது தெல்லிப்பளையிலையும் வைச் சிருந்தவர் கலியாணம் முடிக்கயில்லை.... இப்பிடியே திரிஞ்சால் கலியாணத்தை முடிச்சு என்னசெய்யிறது...? இதை இன் னுமொராளை நம்பிச் செய்யவும் ஏலா தெல்லோ...? ஆயிரக் கணக்கில வைச்சி ருந்துபோட்டு வித்தது அதுக்குத்தான். எனக்கு ஏலாமவர அப்பிடி வைச்சிருந்தா மாட்டிப்போடுவன் நான். அவசரத்துக்கு இந்த வேலைக்கு ஆள் பிடிக்கவும் ஏலாது.

என்ன வேலையெண்டாலும் எட்டு எட்டரை மணித்தியாலம் செய்திற்று வீட்டை போயிருவாங்கள். இது அப்பிடி யில்லை... 24 மணித்தியாலயம் டியூட்டி. கூட நிண்டு மேய்க்கவேணும். அதுகளை அங்காலை இஞ்சாலை விடாமப் பாக்க வேணும், பாம்பு பூச்சி நாய் எண்டு கடிச்சுப் போடாமப் பாக்கவேணும். கள்ளரிட்டை யிருந்து பாதுகாக்கவேணும். மேய்ச்சுப் பட்டி கட்டி இரவு பட்டிக்கருகில கிடந்து சத்தம் சந்தாடி கேட்டால் எழும்பி லைற் அடிச்சுப்பாக்கவேணும். என்னஏதெண்டு.... மிருகம் வரும் கனநேரமெல்லாம் [illegible] வரும்... கவனமாப் பாத்து விடிய மேய்ச் சலுக்கு விட்டுப் பிறகு பட்டி கட்டிப் படுத்து... இப்பிடியே தொடரா வேலை யிருக்கும். விட்டிட்டு விலத்த ஏலாது. சாப்பாடு தண்ணியெல்லாம் நிற்கிற இடத்திலையேதான். மேய்ச்சலுக்கு நாங்கள் விட்டிட்டு, எருப்போடுறதுக்கா கக் காணிக்காரருக்குக் காசுக்குக் கட்டுவம்" என்று அனுபவம் மிக்க இடை யனாகத் தனது தொழிலிலுள்ள கடினங் கள் குறித்தும் விவரித்தார்.

அத்துடன் வருங்காலத்தில் ஆடுமே ய்ப்பை அரச வரையறைகளுக்குள் செய்வது சிரமம் என்றும் ஒப்பித்தார்.

"கைதடியில இருந்து நடந்து பளைப் பக்கம் ஆயிரம் ஆயிரத்தை நூறு ஆடு களையே கொண்டு போறனான். உது இப்ப 400 தானே. இரவு பத்துமணிக்குப் பிறகு ஏ - 9ஆல கொண்டு வந்தனான். வாகனங்கள் அடங்கினபிறகு. ஒருக் கால் பொலிஸ் மறிச்சுக் கேட்டவை. ஆற்றை ஆடு பொமிசன் எடுத்தனிங்களா எண்டு. நான் சொன்னன் இது என்ரை ஆடுகள்தான் உதுகளை மேய்க்கிற துக்கு ஏன் பொமிசன் எடுக்கவேணும் எண்டு. கொஞ்ச நேரம் அப்பிடி இப்பிடி எண்டு நிண்டிச்சினம். இவ்வளவு ஆட் டையும் கொண்டுபோய் பொலிஸ் ஸ்ரேச னிலையோ கோட்சிலையோ வைக்க ஏலுமே? நாறியெல்லே போயிரும்? பேந்து பேசாம விட்டிட்டினம்' என்றவர் தனக்குப் பிடித்த இந்தத் தொழிலைச் செய்து தனது குடும்பநிலையை உயர்த்தினேன் என்றும் பகர்ந்தார்.

"என்ர தலைமுறைக்கு - பிள்ளை யளுக்கெல்லாம் ஆட்டையே தெரியாது. மூண்டு பிள்ளையள். மூத்தவன் மொறட் டுவயில இஞ்சினியரிங் படிச்சவன். 32 வயசு. ரெண்டாவது படிச்சுக் கனடா போயிற்றான். மகள் கொலிஜ் ஒவ் எடியூ கேசன் அவளும் கனடா போயிற்றாள். எல்லாம் சரி பேந்தென்ன. நாமள்தான் உசத்தி விட்டிட்டன். படிச்சதுமட்டுமில்ல நல்லாவும் இருக்கிறாங்கள். நான் ஒராள் செத்தாத்தான் பத்துப்பேர் வாழலாம். நான் இப்பிடிக் கஸ்ரப்படுறதாலைதான் பிள்ளையள் நல்ல நிலைக்கு வந்திருக் குதுகள். நான் சொவ்ரா இருக்கவேணும் எண்டு நினைச்சால் அவங்கள் கஸ்ரப்பட் டிருப்பாங்கள். அவங்களிலை ஒராள் ஆட்டுக்க வந்திருப்பாங்கள். ஆனால் நான் கஸ்ரப்பட்டது அவங்களுக்கு எல் லாம் தெரியும். மறந்துபோகேல்ல" என் றவர் ஆடுகளை வளர்ப்பதில் இருக்கின்ற பெரும் சிரமமாக அவற்றுக்கு வருகின்ற நோய் நிலைகளைக் குறிப்பிட்டார்.

"முந்தி இயற்கை மருத்துவம்தான். வருத்தங்கள் வந்தா எங்களுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியாது. உப்புப் புளியக் கரைச்சுப் பருக்குவம். உள்ளி மிளகு கைமூலிகைகள் தான் கூடுதலா... இப்பவும் வருத்தங்கள் இருக்கு எல் லாத்துக்கும் மருந்துகள் வந்திட்டுது. இருந்தாலும் சில நோயளுக்கு மருந் தில்லை. இப்பபிரச்சினையா இருக்கிறது ஏற்பு. ஏற்பு வரக்கு முதல் மருந்து ஏத்த வேணும். தடுப்பூசி எல்லாத்துக்கும் போடவேணும். எங்களுக்கு எல்லாத் துக்கும்போடக் கஸ்ரம். அதாலை ஏற்பு வந்தா மாறாது. இன்னும் சிலர் வருத்தங் கள் வந்தால் மாறுதில்ல. என்ன வருத் தங்கள் எண்டும் தெரியுதில்ல. ஊசி அது இதுக்கும் சொல்லுக்கேக்குதில்ல. ஆட்டு வாதம், பூச்சியால வருத்தம், கடி - சொறி என்று நிறைய வருத்தங்கள் வரும்' ஆடுகளை ஊர் ஊராகத் திரிந்து மேய்க்கும் நிலையில் நாட்டில் நடந்த போர்க்காலத்துக்குள்ப்படிமுகம்கொடுத் தீர்கள் என்றுகேட்டபோது, ஆடுகளுடன் அகதியாய் அலைந்த கதையையும் விவரித்தார்.

"இப்ப அங்கயெல்லாம் வயல் விதைக் கத் தொடங்கீற்றாங்கள். அதாலை இங் கால வந்திற்றம். முந்தி நாவற்குழியில கட்டினாங்கள் போர்க் காலத்திலை யெல்லாம் அங்கைதான். இப்ப நாவற்குழி யில இடமில்லை. அதுதான் இஞ்சாலை வந்திற்றம். ஆனால், சண்டைக் காலத் தில 95ஆம் ஆண்டு வன்னியில இருந்த னான். கிளாலிக் கடலுக்குள்ளாலை ஏழெட் டுப் போட்டுகளைத் தொடுத்துக் கட்டி ஆடுகளை வன்னிக்குக் கொண்டுபோ னான். அப்பேக்க 300 சொச்ச ஆடுகள் தான் வைச்சிருந்தனான். அதுகளைக் கொண்டு போய் மல்லாவியில வைச்சு மேய்ச்சன்.

(19 பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாசம் 5 லட்சம் ...

நாலு வருசம் அங்கையிருந்து பிறகு அங்கை நெருக்கடி கூடிற்று. 99உப்பிரச்சினைவர.பிள்ளையளும்சின்னப்பிள்ளையள். மூத்தவனுக்கு 11 வயதிருக்கும். கிராஞ்சியிலயிருந்து ஆடுகளையும் பிள்ளையளையும் கடலால ஏத்திக் கொண்டு வந்து பாசையூரில இறங்கினன். ஆட்டைக் கைவிடெல்ல. வந்து ஒரு வருசம் இருக்கயில்லை பேந்து 2 ஆயிரத்திலஇடப்பெயர்வு.தென்மராட்சி - வட்டுக்கோட்டைக்கு ஆடுகளோட போனது.அளவெட்டியிலகொண்டுபோய் மேய்ச்சன்" இங்கு நடந்த இடப்பெயர்வுகளின்போது பிள்ளைகளுடன் அவர் ஆடுகளையும் சேர்த்துச் சுமக்கவேண்டிய பெரும் சுமைக்கு ஆளானேன் என்று ஆதங்கித்தார். அத்தோடு ஆடுகளைப் பெரும் சொத்து என்றும் வர்ணித்தார். கேள்விகளையும் தொடுத்தார்.

"இது பெரிய சொத்தெல்லோ. இதை எப்பிடியாவதுபகிரங்கப்படுத்திவிடுங்கோ. இதை எங்க... ஆரு ஏற்றுக்கொள்ளப் போறாங்கள்...? சும்மா ஒரு மாசம் இதாலை எவ்வளவு உழைக்கலாம் சொல்லுங்கோ பாப்பம்...?ஆடுகளாலை... ஐஞ்சு லச்சம் உழைக்கலாம். உவையாராவது உழைப்பினமோ? சம்பளம் தருவாங்களோ?அரசவேலைபெண்டால் ஆக மிஞ்சி மிஞ்சிப் போனா ஒரு லட்சம் தான் சம்பளம். டிகிரி முடிச்சு வெளியில வர அம்பதும் தாரானோ தெரியாது. இது தெரிஞ்சுகொண்டுதான் நான் கவர்மெண்டிலயிருந்து வெளியில வந்தனான். அந்த நேரமே எனக்குத் தெரியும். இப்ப அஞ்சு லட்சம் உழைக்கிறனான் அந்த நேரம் அம்பதாயிரம் வரும். அப்பேக்க கவர்மெண்ட் ஜொப்பில இருந்தவைக்கு 4 ஆயிரத்து 800 மாதம். ஒரு ஆடு 15 ஆயிரம் எண்டால் 100 ஆடு வித்தால் காணும்தானே! 100க்குக் கூட விப்பம். ஆயிரம் நிண்டால் 3 மாதம் விக்காமல் விட்டால் 1500ஆப் போகும். நான் 6 மாதத்தால் 500 விப்பன். பிறகு 1000 வரும். பிறகு அடுத்த மதாத்ததால் 500 விப்பன். வருசத்தில 1000ஐ வைச்சுக் கொண்டு 1000வித்த காலமும் உண்டு. வீடு கட்டி வீட்டுக்குப் போறதுக்கு றோட்டும் போட்டிருக்கிறன் பார்த்தனிங்களே? என்றவர் செம்மணி தொடங்கி கைதடி -நாவற்குழி -சாவகச்சேரி -கொடிகாமம் -பளை வரை தான் மேய்த்துத் திரிகின்ற ஆடுகளுக்குக் கொழும்புமற்றும்கிழக்கு மாகாணங்களில் அதிக கேள்வி இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

"வல்லைவெளியில நான் ஆரம்பத்தில வாங்கின ஆடுகளின்ர பரம்பரை ஆடுகள்தான் உவை. பாட்டன். பாட்டி பூட்டி எண்டும் நிக்கினம். சின்னவையும் இருக்கினம். இறைச்சிக்கு விக்கலாம். எருவும்நல்லவிலைதான்.பட்டிகட்டினால் ஒரு நாளைக்கு ஆயிரம் ஆயிரத்து ஐஞ்நூறு ரூபா வாங்குவன். சிலர் வந்து வாங்கிக் கொழும்புக்குக் கொண்டு போவாங்கள். அங்கை இதின்ர இறைச்சி சரியான டிமான்ட். வேணும் எண்டால் எல்லாத்தையும் நான் நாளைக்கே வித்துப்போடலாம் கொரோனா இல்லையெண்டால்... உடன விக்கலாம். கொழும்பிலையும் யாஎல கந்தானைப் பகுதியளுக்குத்தான் அதிகம்போகுது. வளக்கிறதுக்கும் கேள்வி கூட. அதுவும் கிழக்கு மாகாணத்து ஆக்கள்தான் வந்து வாங்குகினம். எங்கடை ஆக்களுக்கு இதிலை விருப்பம் இல்லை. அதோட சராசரி ஒரு ஆடு 17, 18 ஆயிரம் ரூபாக்கு விப்பன். 20ஆயிரத்துக்கும் குடுத்திருக்கிறன். இது செம்மறி இனம் தான். அதிலையும் லோக்கல் என்டு சொல்லிறது. ஊராடும் 30, 40 வைச்சிருக்கிறன் என்றார். நடராசர் ஜயா வளர்க்கின்ற செம்மறி ஆடுகள் இங்கிருந்து ஏற்றுமதியாகிக் கொழும்புக் ஹொட்டல்களில் கொழும்பு, வெளிநாட்டு வாசிகளுக்கு உணவாகின்ற இன்னொரு கிளைக் கதையும் இதற்குள் ஒளிந்திருப்பது தெரிந்தது. அது குறித்தும் இனித் தேடலாம்போலத் தோன்றியது...?

ஏன் இந்த நாடகம்?



முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிசாத் பதியுதீனின் கைது விவகாரப் பரபரப்புஉரத்துப்பேசப்பட்டுவந்தநிலையில், 20ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தமை வடக்கு, கிழக்கில் குறிப்பாகக் கிழக்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகள் அதிபர் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்பரப்புரைகளில்ராஜபக்சக்கள்மீண்டும்ஆட்சியைப் பிடித்தால் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்படப்போகும் பேரழிவைப் பற்றியே முழங்கியிருந்தனர். ஒருபடி மேலே சென்று மியான்மர் (பர்மா) முஸ்லிகளுக்கு ஏற்பட்ட கதிதான் இங்கும் ஏற்படும் என்றும் மிரட்டினார்கள்.

இப்படிப்பட்ட பரப்புரைகளுக்கூடாக ஆதரவைத் திரட்டி நாடாளுமன்றத்திற்குச் சென்றவர்கள்தான் இப்போது அதிபருக்கு மேலும் அதிகாரங்களை அள்ளி வழங்கும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை ஆதரித்திருக்கிறார்கள். இது வடக்கு, கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களுக்கும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. தமிழர் தரப்புக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மு.கா. மற்றும் ம.கா. கட்சிகளின் தலைவர்கள் திருத்தத்தை எதிர்த்து வாக்களிக்க அந்தக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேரும் ஆதரித்து வாக்களித்திருக்கிறார் என்பது முஸ்லிம்களை மேலும் குழப்பி விட்டுள்ளது. அத்துடன் ஏனைய சமூகங்கள் மத்தியில் இது முஸ்லிம்கள் நாடகமாடுகிறார்களோ என்கிற அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

அதிலும் குறிப்பாக மு.காவின் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்தை ஆதரித்த நிலையில், கட்சித் தலைவர் ரவூப் கக்கீமும் செயலாளர் நாயகம் சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் விடுத்திருந்த அறிக்கைகள் "இது என்ன நாடகமோ" என்று வியக்க வைத்தன. தான் சூழ்நிலைக் கைதியாகி இருக்கின்றார் என்று தலைவர் கக்கீம் சொல்ல, கட்சியின் அனுமதியின்றியே 4 நாடாளுமன்ற உறுப்பினர்களும் 20ஆவது திருத்தத்தை ஆதரித்தார்கள் என்கிற தொனியில் அவர்களிடம் விளக்கம் கோரப்படும் என்று அறிக்கை விட்டிருந்தார் செயலாளர் நாயகம்.

கடும் கண்டனம்

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான், "முஸ்லிம்கள் தொப்பி பிரட்டிகள்" எனப் பெரும்பான்மையினச் சிங்களவர்கள் விமர்சிப்பதை 20ஐ ஆதரித்து வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிரூபித்துள்ளனர் என்று தெரிவித்தார். அத்துடன் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாட்டை முஜிபுர் ர.".மான் போன்ற அரசியல்வாதிகளும் கடுமையாகச் சாடியிருந்தார்கள். தமிழர் தரப்பிலிருந்தும் கடுமையான கண்டனங்கள் பலரிடம் இருந்தும் வந்திருந்தன.

"பட்டுவேட்டிக் கனவில் கட்டியிருந்த கோமணத்தையும் விட்டுவிட்டனர்" என்று கொழும்பில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று ஆசிரியர் தலையங்கம் தீட்டியிருந்தது. யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகை ஒன்று இன்னும் ஒருபடி மேலே சென்று இந்தச் செயலை முஸ்லிம்களின் "பரவணிப் பழக்கம்" என்று விமர்சித்திருக்கின்றது.

இப்படிக் கடுமையான விமர்சனங்களை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் கிளப்பியுள்ளன. எனினும் இந்தச் செயலுக்கெதிராக மிகமோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தி முஸ்லிம்களை வசைபாடுவது சரியானதல்ல. "பரவணிப் பழக்கம்" என்பது போன்ற வார்த்தைகள் எல்லாம் கடுமையாக மக்கள் மனங்களைப் புண்படுத்தக்கூடியவை என்பதை ஊடகங்களும் புரிந்து கொள்ளவேண்டும்.

போட்டுடைத்த கரீஸ்

இத்தகைய கடும் விமர்சனங்கள், சர்ச்சைகளை அடுத்து முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பிரதித் தலைவருமான ஏ.எச்.எம்.கரீஸ் கல்முனையில் ஊடகச் சந்திப்பு ஒன்றை தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார். தமது செயற்பாடகளை அவர் அங்கு நியாயப்படுத்தினார்.

நாம் 20ஆவது திருத்தத்திற்கு வாக்களித்ததன் மூலம் அரசின் பங்காளிகளாகிவிட்டதாக அர்த்தமில்லை. வடக்கு, கிழக்கு உட்பட முஸ்லிம்களின் வாழ்க்கை குறித்த பொறுப்பு எமக்கு அதிகம் இருக்கின்றது.

தற்போதைய நிலையில் முஸ்லிம்களின் அரசியல் அதிகார நிலையில் பெரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் அதனைச் சமநிலைக்குக் கொண்டுவரவேண்டும். இப்போது அரசியல் அதிகார நிலையில் முஸ்லிம்கள் கடைசி நிலையில் உள்ளோம். குறிப்பாகக் கிழக்கில் இந்த நிலையால் முஸ்லிம்கள் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

எனவேதான் அரசியல் அதிகாரச் சமநிலையை நாம் அடைவது மிக முக்கியமானதாக இருந்தது. கிழக்கில் முஸ்லிம்களின் ஒட்டுமொத்த வாழ்வியலும் கேள்விக்குறியாகி உள்ள நிலையில் மக்கள் நலன் சார்ந்ததாகவே எமது முடிவு அமைந்தது.

நிறைவேற்று அதிகார அதிபர் முறையே சிறுபான்மை இனங்களுக்குச் சார்பானது என்பதில் மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் உறுதியாக இருந்தார். கட்சியின் தற்போதைய தலைவரும் அதில் உறுதியாக இருந்து ஆதரவளித்தார். அந்த அடிப்படையிலேயே தற்போது அதிபரின் அதிகாரம் வலுப்பெற்றிருக்கின்றது. அந்த அடிப்படையில் நாம் ஆதரவளித்ததில் தவறில்லை.

அத்தோடு கட்சித் தலைவரின் ஆதரவோடுதான் நாம் 20ஆவது திருத்தத்திற்கு வாக்களித்தோம். மனச்சாட்சிப்படி வாக்களியுங்கள் எனும் ஒப்புதலை அவர் வழங்கியிருந்தார் - என்றார்.

அப்போது, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் விமர்சித்திருக்கிறாரே என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. மு.காவுடன் இணக்கமாகச் செயற்படும் கட்சி என்ற அடிப்படையிலேயே இந்தக் கேள்வி அவரிடம் குறிப்பாகக் கேட்கப்பட்டது.

"எடுப்பார் கைப்பிள்ளையாக முஸ்லிம் சமூகத்தை எவரும் பயன்படுத்த முற்படக்கூடாது" என்று பட்டென்று பதிலளித்தார் கரீஸ். கூட்டமைப்பினர் இன்றும் வடக்கு - கிழக்கு இணைப்பைப் பற்றித்தான் பேசுகிறார்களே தவிர எம்மைப் பற்றி அதில் எதுவும் பேசுவது கிடையாதே என்றும் தெரிவித்தார். அதாவது, முஸ்லிம்களின் நலன்களைப் பற்றி அக்கறைப்படாத கூட்டமைப்பு குறித்து நாம் ஏன் அக்கறைப்படவேண்டும் என்று கூறுவதாக அவரது தொனி அமைந்திருந்தது.

கட்சியை மீறி நாம் செயற்பட்டிருந்தால் ஏன் இன்னும் எம்மைக் கட்சியில் இருந்து நீக்கவில்லையெனக் கேள்வி எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர், எம் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து கட்சியிலிருந்து நீக்கும்படி கோர சுமந்திரனுக்கு என்ன திராணி இருக்கின்றது எனவும் விசனப்பட்டார்.

அறிக்கையால் சலசலப்பு

முஸ்லிம் நாடாளமன்ற உறுப்பினர்களின் செயற்பாடு தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்த கருத்துக்கள் கிழக்கு முஸ்லிம்களிடம் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளன.

இரு முஸ்லிம் கட்சிகளினதும் தலைவர்களும் எதிர்த்து வாக்களிக்க ஏனைய உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தமை அர்த்தமற்ற ஒரு நிலைப்பாடு என்று குறிப்பிட்ட சுமந்திரன், உரியவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களை நாடாளுமன்ற உறுப்புரிமையில் இருந்து நீக்காத விடத்துஎதிர்காலத்தில்முஸ்லிம்காங்கிரசுடன் இணைந்து பயணிப்பது தொடர்பில் மீள் பரிசீலனை செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் மூத்த உறுப்பினர்கள் சிலரே அதிருப்தி தெரிவித்தனர். முஸ்லிம் காங்கிரசிற்கென்று ஒரு கொள்கையுள்ளது, மக்களாட்சி உரிமையும் உள்ளது. முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பொறுப்புமுள்ளது. சமூகத்தை வழிநடத்துவதற்கான போதிய அனுபவமும் அவர்களுக்குள்ளது. இதைக் கேள்விக்குட்படுத்தும் எந்தத் தார்மீக உரிமையும் சுமந்திரனுக்கு இல்லை என்றனவர் அவர்கள்.

அதேசமயம் சுமந்திரனின் கருத்துக்கு ஆதரவு தெரிவிக்கவும் ஆளில்லாமலில்லை. குறித்த இரு முஸ்லிம் கட்சிகளையும் சேராத பலரும் சுமந்திரனின் கருத்துக்கு பலமாக ஆதரவு தெரிவிக்கின்றனர். இதற்கிடையே 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்து அவர் வாயே திறக்கதிருப்பது ஏன் என்கிற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

இந்தப் பிடுங்குப்பாடு ஒருபுறமிருந்தாலும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை நோக்கி எழுப்பப்படும், 20ஆவது திருத்தத்தை ஆதரித்து வாக்களிப்பதற்கு முன்பாக அது குறித்து அறிஞர்கள், உலாமாக்கள், சமூக நலன் விரும்பிகள், அரசியல் நோக்கர்களுடன் கலந்தாலோசிக்காதது ஏன் என்கிற கேள்வி பதிலற்ற கேள்வியாகவே தொடர்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சம்பந்தர் கடையடிச் சமா

● ஆதிரன்

"கிழமைக்கு ஒருக்கா வந்து உங்களுக்குக் கதை சொல்லுறதால, இடைப்பட்ட நாளுக்குள்ள கனக்கச் சேர்த்து வைக்க வேண்டிக் கிடக்குது. போன கிழமை தமிழ் அரசுக் கட்சிக்குள்ள சீனியரின்ர கதை சொன்னனானெல்லே.... விறுக்கனாட்டம் விட்டுட்டுப் போனவர் அங்காலப் பக்கமே காணேல்ல எண்டு... மனுசன் பக்கா பிளானோடதான் நிண்டிருக்கிறார் பாருங்கோ! கரவெட்டிப் பிரதேச சபைக்குள்ளையும் ஆள் விளையாட்டக் காட்டிப் போட்டார் என்று தெரியுமே?

"ஓமண்ணை... எங்கட செயார்மன் தன்ர பதவியை தானாக விட்டு விலகுறதா அறிவிச்சவர் தானே... அதுக்கும் இவரே காரணம்...' சுப்பனுக்குச் சந்தேகம்.

"உங்களுக்கு உதுகள் விளங்காது பாருங்கோ... சுமந்திரன அடிக்க வேணும் எண்டு கங்கணம் கண்டிக் கொண்டு தலையால கிடங்கு கிண்டுற கூட்டம் ஒண்டு தமிழ் அரசுக் கட்சிக்குள்ள நிக்குது. இவன் எங்கட செயார்மன் பொடியன் படிச்சவன், கெட்டிக்காரன் அவன் போன முறை எலக்சனுக்கு சுமந்திரனோட தானே திரிஞ்சவன்..."

"ஏனண்ணை, படிச்சவங்கள், கொஞ்சம் விசியம் தெரிஞ்சவங்கள் எல்லாம் அவரோட தானே நிக்கிறாங்கள்?' தெரியாத மாதிரி எடுத்துத் தந்தான் கந்தன்.

"அது வேற பிரச்சினையடாப்பா... அதை விடுங்கோ..! இவையள் ஆடுற ஆட்டத்தை எல்லாம் பார்த்துக்கொண்டு இருக்க அந்த மனுசனும் என்ன பைத்தியக்காரனே.... அவரும் தன்ர ஆட்டத்தை ஆரம்பிச்சிட்டார். அதைப் பற்றிப் பிறகு சொல்லுறன். இப்ப சொல்ல வந்ததைச் சொல்ல விடு. இல்லாட்டி வயசு போன நேரத்தில மறந்து போடுவன்"

"கரவெட்டிச் சபையில தமிழ் அரசுக்கு அவ்வளவாப் பலமில்லை. வெறும் 9 பேரோட தொத்து பொறியிலதான் ஆட்சிபோய்க்கொண்டிருந்தது.எண்டாலும் செயார்மன் பெடியன் கொஞ்சம் கெட்டித்தனமாக் கொண்டோடினவன். என்ர இந்த 87 வருச வாழ்க்கையில - நான் அறிய எந்தச் செயார்மனும் கரவெட்டிக்கு இப்பிடிச் செய்யேல்ல. யாழ்ப்பாணத்தை கனவில கண்ட, அபிவிருத்தி நாயகன் அது - இது எண்டு காட்டின அமுல்பேபியின்ர தகப்பனும் இந்தச் சபையில ஒராள். ஏற்கனவே அந்த மனுசனுக்குத் தான் செயார்மன் ஆகிப்போட வேணும் எண்ட ஆசை. மகனை வைச்சு ஒண்டையும் புடுங்க முடியேல்ல எண்ட கடுப்பில இருந்தது.

இந்த வருசம் வரவு செலவுத் திட்டத்தில எப்பிடியும் தமிழ் அரசுக் கட்சியைத் தோக்கப்பண்ணி தான் செயார்மனா வர வேணும் எண்டுறது அவற்ற பிளான். அதுக்காகமூலப்பேசி ரெண்டுமூண்டுபேரைச் சேப் பண்ணி கட்சிக்குள்ளயே குழப்பி விட்டுக் கொண்டிருந்தவர்.

குழப்பிக் கொண்டிருந்த ரெண்டு பேரோடையும் கதைச்சுப் பேசி, வரவு செலவுத் திட்டத்தை பாஸ் பண்ணி விடுங்கோ, அதுக்குப் பிறகு நானாவே விட்டுட்டுப்போறன் எண்டு செயார்மன் சொல்லி, அவங்கள் ரெண்டு பேரும் ஓமெண்டுதான் இருந்தவங்கள். இதுக்குள்ள சீனியர் பூந்து, அவர் ரிசைன் பண்ணுறது எண்டு சொல்லுறதை எழுத்தில வேண்ட வேணும் இல்லாட்டி சுத்திப்போடுவார்... நீங்க ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்யச் சொல்லி மாவையரைக் கேளுங்கோ எண்டுகிண்டிவிட்டுட்டுநல்லபிள்ளையா இருந்துட்டார்.

முந்தித் தொடக்கமே வடமராட்சிக்குள்ள தன்னை விட்டுட்டு எல்லாச் சபைச் செயார்மன் மாரும் சுமந்திரனோட நிக்கிறத பொறுக்கேலாமல் புழுங்கிக் கொண்டிருந்த குலநாயகத்தாருக்கும் இது ஒரு நல்ல சந்தர்ப்பம். உடனடியா கட்சித் தலைமையிட்டச் சொல்லி கரவெட்டிப் பிரதேச சபைப் பிரச்சினையைச் சுமூகமாக முடிக்க ஒரு கூட்டம் போட வேணும் எண்டு, கூட்டத்தையும் போன கிழமை போட்டாச்சு....

எங்கட கட்சி உறுப்பினர்கள் எல்லாம் வரவு செலவை ஆதரிச்சுத்தான் வாக்களிக்க வேணும்..... எதிர்த்தியளோ... கட்சியைவிட்டே தூக்கிப்போடுவம் எண்டு வழமையான பாணியில வெடித்தார் மாவையர்... அப்ப கரவெட்டி செயார்மன் எழும்பி... இல்லை ஐயா, கட்சி தோக்கக்கூடாது... வரவு செலவுத் திட்டம் நிறைவேறினதும் நான் விலகுறன். அது தானே இவைக்கு வேணும்... எண்டு சொல்லி முடிக்கிறதுக்குள்ள.. சீமான் சீனியர் பேப்பரும் கையுமா நிக்கிறாராம் எண்டாப் பாருங்கோவன்.

செயார்மனிட்டை இராஜினாமாக் கடிதத்தை அதில வைச்சே எழுதி வாங்குறதுக்குத் தான் அந்த மீற்றிங்கையே போட்டவராம். அப்பப் பாருங்கவன்... என்னா ஒரு வில்லத்தனம்?'

"இந்தாள் பாத்த இன்னொரு வில்லங்கம் இப்ப விவகாரத்தில முடியப் போகுது. அது தெரியுமே உங்களுக்கு? உங்கினேக்க எல்லா நெற்றிலயும் வந்தது தானே... மாவையற்ற பொடியன் மாமனி தருக்கு மருமோனாகப் போகிறானாம் எண்டது. ஆரெண்டாலும் குமரொண்டு கரை சேருறது புண்ணியம்தானே... வாழ்த்திட்டு போறத விட்டுட்டு கதையளக்கிறன் எண்டு யோசியாதேங்கோ.....'

"எலக்சன் ரைம்மிலதான் உந்தக் கனக்சனே வந்ததாம் பாருங்கோ.... பிரசாரத்துக்குப் போறம் எண்டு - சேர்ந்து வேலை செய்த ரெண்டு வேட்பாளர்களின் மகனும், மகளும் குடும்பத்துக்குள்ள ரெண்டு எம்.பி. வரப்போகுது எண்டு சொல்லிச் சொல்லிக் கடுமையா வேலை செய்தவையாம். ஆனா.. காலக் கொடுமை ரெண்டு பேருமே வரயில்ல.

"வெளிநாட்டில படிச்சுப்போட்டு வந்து இறங்கின கையோட - ஏதோ இதுக்காகத் தான் வெளிநாட்டில இருந்துசுப்பிட்டதுபோலஉள்ளூராட்சிஎலக்சனுக்கு மகன இறக்கேக்கயே குடும்ப அரசியலை ஆரம்பிச்சுட்டார் எண்டு தொடங்கினவங்கள்... இனி அப்பா, மகன், மாமி எண்டு அரசியல் செய்யேக்க என்னத்தைச் சொல்லப்போறாங்களோ.... வெல்லா... நீ தான் சொல்ல வேணும்...."

"தமிழ் அரசுக்க மட்டும்தான் இப்பிடியெல்லாம் சீனுகள் ஓடுதெண்டு நினையாதேங்கோ... அங்கால சைக்கிளிண்ட குத்து வெட்டும் பயங்கரமா ஓடுது. மணிவண்ணனை மாநகர சபைக்கு வர விடாமப் பண்ணி கேஸ் போட்டு ரெண்டு வருசத்துக்குப் பிறகு வழக்கை வாபஸ் வாங்கி சுமந்திரன் செய்த வேலை, அதுக்குப்பிறகு மணிவண்ணனைச் சபைய விட்டு நிப்பாட்டுங்கோ எண்டு சொந்தக் கட்சிக்காரரே எலக்சன் கொமிசனுக்கு எழுதினது, அதை செய்ய விடாதேங்கோ எண்டு மணிவண்ணன் இடைக்காலத் தடை வாங்கினது எல்லாம் பழங்கதை.

மணிக்கு போடப்பட்ட ரெண்டு வருச இடைக்காலத் தடை விலக்கிக் கொள்ளப்பட்டதால, போன வியாழக் கிழமை நடந்த சபைக்குப் போன மணியை உள்ள விடக்கூடாது எண்டு அவன்ர கட்சிக்காரனே எழும்பி சபையில ஆர்ப்பாட்டமாம். பயபுள்ளவிசியத்தோடதான் கதைக்கும் எண்டு சபையிலயும் சரி, வெளியில - மக்களிட்டையும் சரி ஒரு நல்ல பேர் வாங்கின ஒரு தம்பிதான் இப்ப கட்சியில உள்ள விசுவாசத்தில கத்தோ கத்தெண்டுகத்தினவராம். எங்கட கட்சியால சபைக்கு வந்தவர் மணி. அவரைக் கட்சியே நிப்பாட்டிப் போட்டுது... பிறகெப்பிடி நீங்கள் உள்ள விடுவியள் எண்டு தம்பி சண்டித்தனம் காட்டியிருக்கிறார்.

எங்களுக்கு மணிவண்ணனைச் சபைக்குள்ள விடவேணாம் எண்டு தடை போட்ட கோட்டுத் தான், இப்ப அந்த வழக்கே வாபஸ் வாங்குப் பட்டுட்டு, அவர் போகலாம் எண்டு அறிவிச்சிருக்கு.. கோர்ட் ஓடரால வர முடியாம நிண்ட மணி, இப்ப கோர்ட் ஓடரோட வந்து நிக்கிறார். நாங்க விடத்தானே வேணும்? எண்டு மணி வரக்கூடாது எண்டு வழக்குப் போட வைச்ச முதல்வரே சொல்லி மணியை வர வேற்றாராராம்....

சோழியன் குடும்பி சும்மா ஆடுமே..... வரவு செலவுக்கு மணியும் அவற்றை அடிப்பொடிகளுமா ஆதரவு தருமெண்டு நம்புறார் போல...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் முகம்

வாசுகி நடேசன்

அடிக்கடி வேரோடு பிடுங்கப்பட்டு மீண்டும் மீண்டும் வெவ்வேறு இடங்களில் நடப்படும் பயிர்கள் எல்லம் பிழைத்துக் கொள்வதில்லை. சில செத்துமடிந்துவிடுகின்றன. சில உயிருக்காய் ஊசலாடுகின்றன. ஒரு சில மட்டுமே மீண்டும் தளிர்த்துத் துளிர்விடுகின்றன. இப்படித்தான் யாழ்ப்பணத்து மக்களும் அடிக்கடி வேரோடு பிடுங்கப்படுகிறார்கள். அவர்களது ஆணிவேர்கள் அறுந்துபோகின்றன.

எனது சிந்தனையை பஸ்சின் இரைச்சல் துண்டிக்கிறது. ஆர்வமாய்த் தெருவை நோக்குகிறேன். மூளாய் வீதியிலிருந்து நெல்லியான் சந்தி முடக்கில் திரும்பி, சுழிபுர வீதியால் இராணுவ வாகனம் ஒன்று மிகவேகமாகச் செல்கிறது. ஏமாற்றத்துடனும் சலிப்புடனும் நேரத்தைப்பார்க்கிறேன். மணி 7.30ஐக் காட்டுகிறது. எனது காத்திருப்பு முப்பது நிமிடத்துளிகளை விழுங்கிவிட்டது.

காத்திருப்பு
பஸ்சுக்கு ...
கப்பலுக்கு... நிவாரணத்துக்கு....
காணாமல்போனவருக்கு.....
பட்டியல் நீள்கிறது.
காத்திருப்பேதேசத்தின் தலைவிதியாகி... மீண்டும் பொறுமையாய் காத்திருந்தேன்&..

நானும் வேரோடு பிடுங்கப்பட்டவள்தான். ஆணிவேருக்குமண் அணையாய் அக்கா குடும்பத்தின் ஆதரவு கிட்டியது.

அக்கா வீட்டில் எல்லா வசதிகளும் இருந்தது உண்மையே. ஆனால், சுழிபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தினமும் பஸ்சில் பயணிப்பதென்பது நரக வேதனையாகவிருந்தது. எண்ணச் சுழியில் அகப்பட்ட மனம் அது இழுத்த இழுப்புக்கெல்லாம் சுழல்கிறது.

மேலும் பத்து நிமிடத்துளிகள் காத்திருப்பில் கரைகின்றன. பள்ளிக்குப் பிந்திச்செல்லுகையில் அதிபரின் பார்வை ஊடுருவித்துளைக்கும் அதில் கோடிடும் வெறுப்புக்குறி என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தும்.

வேதனை.. சலிப்பு.. கோபம்.. உணர்வுகள் போட்டியிடக் காத்திருப்புத் தொடர்கிறது.

7.45க்கு மிக வேகமாக மினி பஸ் ஒன்று வந்து நிற்கிறது. அவசர அவசரமாய் பஸ்ஸில் ஏறி அமர்கிறேன்.

மினிபஸ் புறப்பட்டபோது அதனைத் துரத்தியபடி வந்த இ.போ.ச பஸ் ஒன்று நெல்லியான் முடக்கில் திரும்பி முந்திச் செல்கிறது.

எனது மனம் அங்கலாய்த்துக்கொள்கிறது. இ.பொ.ச பஸ்ஸில் பயணம் செய்வதில் சில ஆதாயங்கள் உண்டு. பயணிகளின் எண்ணிக்கையில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லாமையால் நேரச் சிக்கனம் கூடியது. இராணுவச் சோதனைச் சாவடியில் பரிசோதனை சற்றுக்குறைவு.

இ.பொ.ச, மினிபஸ் இரண்டும் ஒன்றுக்கொன்று குரோதத்துடன் போட்டியிட்டுப் பறக்கின்றன. மினிபஸ் சாரதி இ.பொ.ச. சாரதியைத் திட்டித் தீர்க்கிறார். தமது பிழைப்பில் மண்ணைப் போடும் சாரதி மீது ஏற்பட்ட கொதிப்பில் நெருப்புத் துண்டங்களாய் வார்த்தைகள் தெறிக்கின்றன.

மினிபஸ்ஸின் வேகம் எனக்கு ஆறுதலைத் தருகிறது. குறித்த நேரத்தில் 15 நிமிடங்களையாவது மிச்சம் பிடிக்கலாம்.

மினிபஸ் சாரதியின் வார்த்தைகள் தடித்து காதில் வாங்க முடியாதனவாக வக்கரித்து வெளிப்படுகின்றன. எனது கவனத்தைத் தெருவில் செலுத்துகிறேன்.

மினிபஸ் சங்கானைத் தரிப்பிடத்தில் திடீர் பிரேக்குடன் குலுங்கி நிற்கிறது. வயிற்றுப்பிழைப்புக்காக மினிபஸ்ஸை ஓட்டத்தொடங்கிய சாரதியால் வீம்புக்கு வேட்டையாட முடியவில்லை.

கொதிக்கும் வார்த்தைகளால் தூஷித்தப்படி நிதானமாக பஸ்ஸை ஓயவைக்கிறார். கிளீனர் இறங்கி அருகில் இருந்த தேநீர்க் கடையில் சென்று அமர்கிறார். அவரது நிதானம் பஸ் உடனே புறப்படப் போவதில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லியது. அவர்களுக்கு அவர்களது பிழைப்பு. எனக்கு? என்னைப்போன்று அங்கே ஏறியிருந்த ஏனைய பயணிகளுக்கு?

வேதனை சலிப்பு விரத்தி போன்ற உணர்ச்சிக் கலவையுடன் பஸ்ஸில் உள்ளவர்களை நோட்டமிடுகிறேன்.

அவர்கள் முகங்களிலும் சலிப்பும் அவசரமும். சிலர் தங்கள் சலிப்பை வாய்விட்டுக் கூறுகிறார்கள்.

எனது பார்வை எனது இருக்கைக்கு சமாந்தரமான இருக்கையில் அமர்ந்திருக்கும் சிறுமியில் படிகிறது. அழகும் ஆரோக்கியமும் நிறைந்த அவளுக்கு 15 - 16 வயதுக்கு மேல் இருக்காது. அவள் சீருடை அணியவில்லை. ஆனால் நிச்சயமாகமாணவியாகத்தான்இருக்கவேண்டும். துடைத்துவிட்டது போல பளபளக்கும் அவளது முகத்தில் சூழலின் பாதிப்பு அதிகமாய்த் தெரியவில்லை. ஆனால்... அவளது வயதுக்கு மீறிய ஓர் உணர்வு .. இறுக்கம்... தற்செயலாகத்திரும்பியஅவள் எனது பார்வையின் ஊடுருவலை தவிர்க்கவோ என்னவோ, சட்டென மறுபக்கம் திரும்பிக்கொள்கிறாள்.

முணுமுணுப்பாய்த் தொடங்கி, பயணிகள் இப்பொழுது சாரதியை பஸ்ஸை எடுக்குமாறு வற்புறுத்தினர். சிலபயணிகள்பஸ்ஸில் புதிதாய்ஏறுகிறார்கள். பஸ்ஸில் இருக்கைகள் நிரம்புகின்றன. அதனால் திருப்தியடைந்ததாலோ அல்லது பயணிகளின் அதிருப்தியை விரும்பாத தாலோ சாரதி பஸ்ஸை எடுக்கிறார். கிளீனர் வந்து தொற்றிக்கொள்கிறார்.

பஸ் பதினைந்து நிமிட தாமதத்தின் பின் ஊரத்டொங்குகிறது. சங்கானைக்கு அடுத்து வந்த பஸ் தரிப்பில் சில பயணிகள் ஏறுகின்றனர். அவர்களோடு ஓர் ஆச்சியும்... முதுமையும் நோயும் கோடிடத் தள்ளாடி நிற்கும் கிழவிக்கு இடங் கொடுக்க அங்கு யாரும் முன்வரவில்லை. பயணித்தவர்களில் மிகவும் இளமையான அந்தச் சிறுமி எழுந்து இடம் கொடுப்பாள் என எதிர்பார்த்து அவளைத் திரும்பிப்பார்க்கிறேன். ஆனால் ஜன்னலுக்கு வெளியே வெறித்து நோக்கிக் கொண்டிருந்த அவள் அசையவில்லை.

நான் எழுந்து அந்த ஆச்சிக்கு இருக்கையை வழங்கினேன். மலர்ந்த முகத்துடன் கிழவி இருக்கையில் அமருகிறார்.

ஆசிரியை என்பதைப் பறைசாற்றும் எனது தோற்றம்... உடை .. எனது செயலைப் பார்த்த பின்னாவது அச்சிறுமியில் மாற்றம் ஏற்படுகிறதா எனத் திரும்பிப் பார்க்கிறேன். அவள் முகத்தில் தெரிந்த உணர்வு... எது என என்னால் மட்டிட முடியவில்லை. எனது பார்வையைத் தவிர்க்க மீண்டும் தலையைத் திருப்பிக் கொள்கிறாள்.

என்னுள் அவள் மீது சிறிது வெறுப்பு முகிழ்க்கிறது. இக்காலத்தில் மாணவர் ஆசிரியர், பெரியோரை மதிப்பதில்லை

சட்டம்பிதன எதிர்பார்ப்புகள் புறக்கணிப்புக்கு உள்ளாகும்போது இயல்பாக எழும்பும் வெறுப்பு அது. மெல்ல பஸ் சண்டிலிப்பாய் தடை முகாமில் வந்துநிற்கிறது. பஸ்ஸில் உள்ள அனைவரையும் இறங்கச் சொல்லும் கனத்த உத்தரவு இராணுவத்திடம் இருந்து பிறப்பிக்கப்படுகிறது.

ஏல்லோரும் இறங்கிறது. ஒருத்தரும் இருக்க வேணாம்.

நேற்று இராணுவ அணியினர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்ட தன் எதிரொலி அந்தக் கண்டிப்பான குரலில் தொனிக்கிறது.

இறங்கி நடக்கிறேன். முதியவர்கள் சிலரைத் தவிர இளம் வயதினர் இறங்கி வருகின்றனர். அந்தச் சிறுமி இறங்கி வருகிறாளா என நோட்டமிடுகிறேன். அவள் இறங்கி நடப்பதில் எனக்கு அற்ப சந்தோசம். ஆனால் அவள் இறங்கவே இல்லை! இதுகள் இப்படி இறங்காமல் விடுறதாலதான் அவங்களும் நேரத்தை மினக்கடுத்திறாங்கள். தங்களைவிட டால் ஆக்களில்லை எண்ட நினைப்பு. நாங்களெல்லாம் விசருகளே? இறங்கி நடக்கத் திமிர் . உடம்புமுழுக்கத் திமிர்

நான் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம்என்றவக்கிரத்தின்விளைவா அல்லது இன்றைய பொழுதுகளின் பாதக நிலைமைகள் ஏற்படுத்திய மன உளைச்சல்களுக்கெல்லம் வடிகாலாக அந்தச் சிறுமி அமைந்தாளா? எனக்குப் புரியவில்லை.

இராணுவத்திடம் அடையாள அட்டையைக் காட்டிவிட்டு தெரு ஓரத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறேன்.

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடி



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு காட்டும் அக்கறையை கொரோனாவை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களிலும் காட்டியிருக்க வேண்டும் என்று எம்மோடு பேசிய சுகாதரத்துறையினர் பலரும் விசனப்பட்டனர். அரசு சுகாதாரத் துறையினரின் கருத்துக்களைக் கேட்பதற்குத் தயாராக இல்லை என்பது அவர்களின் கவலை.

முதல் அலையின் தாக்கத்தால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளில் இருந்தே நாடு இன்னும் இயல்புக்குத் திரும்பாத நிலையில் மீண்டும் நாட்டை முடக்குவது என்பது பேராபத்தி லேயே முடியும் என்று அஞ்சுகின்றனர் ஆட்சியாளர்கள். எனவே இந்தியா போன்று பகுதியளவு கட்டுப்பாட்டுடன் நோயுடன் வாழப் பழகும் அணுகுமுறையையே கடைப் பிடிப்பதற்கு ஆட்சித் தரப்புத் திட்டமிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திடீர் அலை

கொரோனாவின் இரண்டாவது அலை பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற் சாலையில் இருந்தே கண்டறியப்பட்டது. அந்தத் தொழிற்சாலைக்கு எப்படி நோய்த் தொற்று வந்தது என்பது இன்னும் தெளிவாக அறிவிக்கப்படாத போதும், உக்ரேனில் இருந்து வந்தவர்களில் இருந்து இந்தத் தொற்று எற்பட்டிருக்கலாம் என்கிற ஒரு செய்தி பரப்பப்பட்டது.

இலங்கைக்கு வந்த உக்ரேனியர்களில் ஒருவருக்கு தொற்று இருந்தது என்றும் அவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த சொகுசு விடுதி சுகாதார நடைமுறைகளை முழுமையாகக் கடைப்பிடிக்காமல், தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்பாடலைக் கொண்டிருந்த தனது ஊழியர்களில் சிலரை வீடுகளுக்குச் சென்றுவர அனுமதித்திருந்தது என்றும் அவர்கள் மூலமே தொற்று வெளியே வந்திருக்கலாம் என்றும் அந்தக் கதையில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தொற்று ஏற்பட்ட விதம் குறித்து விசாரித்து இரு மாதங்களுக்குள் தனக்கு அறிக்கையிடுமாறு பிரதிச் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார் சட்ட மா அதிபர்.

10 ஆயிரம் தொற்று

இதற்கிடையே தொற்று ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. அவர்களில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் குணமாகியிருக்கிறார்கள் 5 பேர் வரையில் தொடர்ந்தும் சிகிச்சையிலும் கண்காணிப்பிலும் வைக்கப்பட்டுள்ளார். 19 பேர் இதுவரையில் உயிரிழந்திருக்கிறார்கள். தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ளோர் மட்டும் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள்.

ஐப்பசி (ஒக்டோபர்) மாதம் 3ஆம் நாள் தொற்றோடு இருந்தவர்களின் எண்ணிக்கை வெறும் 128. ஆனால் மாதக் கடைசியில் தொற்று ஏற்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தை கடந்துவிட்டது. ஒரு மாத காலத்தில் கிட்டத்தட்ட 40 மடங்கு அதிகரிப்பு.

இவ்வளவு தீவிரமான, துரிதமான அதிகரிப்பை அடுத்து நோயாளர்களைப் பராமரிப்பதற்கு ஏற்ற மருத்துவ மனைகள், மருத்துவ வசதிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் போதிளவிலானதாக இல்லை. இதனால் புதிய மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவதற்கு அரசு அவசர அவசரமாக முயற்சிக்கின்றது.

ஆனால், வசதிகள் உருவாக்கப்படுவதைவிட வேகமாக நோய்ப் பரவல் தீவிரமாகிக் கொண்டே போக்கின்றது. சடுதியாக ஆயிரக்கணக்கில் அதிகரித்து வரும் நோயாளர் எண்ணிக்கை மற்றும் தனிமைப்படுத்தப்படும் நபர்களின் எண்ணிக்கையைச் சமாளிப்பதற்கு முடியாமல் மருத்துவ மற்றும் சுகாதாரத் துறையினர் திணறத் தொடங்கியுள்ளனர்.

வியாழக்கிழமை இலங்கையில் மிக அதிகமான பி.சி.ஆர். சோதனைகள் செய்யப்பட்டுள்ளன. 11 ஆயிரத்து 773 பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கு முதல் நாளில் 11 ஆயிரத்து 552 பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. இருந்தாலும் பரிசோதனை முடிவுகளை அறிவதற்காக இன்னும் பல ஆயிரக்கணக்கான மாதிரிகள் காத்துக்கிடக்கின்றன. மாசி மாதத்திற்குப் பின்னர் இருந்து இதுவரையில் கிட்டத்தட்ட 5 லட்சம் பி.சி.ஆர். சோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் பி.சி.ஆர். பரிசோதனைகளைச் செய்வதற்கு இருக்கும் வசதிகளைக் கொண்டு செய்யக்கூடிய பரிசோதனை எண்ணிக்யின் எல்லை ஏற்கனவே கடக்கப்பட்டுவிட்டது என்கிறார் சுகாதார அமைச்சின் ஆய்வக வசதிகளுக்கான பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஆனந்த ஜெயலால்.

இப்போது வரைக்கும் சுகாதார அமைச்சின் கீழ் 22 ஆய்வகங்களில் பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்படுகின்றன. பல்கலைக்கழக ஆய்வகங்கள், மருத்துவமனை ஆய்வங்கள் தவிர தெரிந்தெடுக்கப்பட்ட தனியார் ஆய்வகங்களிலும் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதிகரித்துவரும் கேள்வியினால் சோதனைகளின் பெறுபேறுகள் துல்லியமானவையாக இல்லையோ என்கிற சந்தேகமும் எழுப்பப்படுகின்றது.

அண்மையில் உயிரிழந்த மனநலம் குன்றி இளைஞருக்குச் செய்யப்பட்ட பி.சி.ஆர். முடிவு மீது அவரது குடும்பத்தினர் பலத்த சந்தேகத்தை எழுப்பினர். வீட்டைவிட்டு வெளியே எங்கும் செல்லாத அந்த இளைஞருக்கு எப்படித் தொற்று ஏற்பட்டது? அதுவும் வீட்டில் உள்ள ஏனைய எவருக்கும் தொற்று ஏற்படாத நிலையில் வீட்டிலேயே அடைந்து கிடந்த இளைஞருக்கு மட்டும் எப்படித் தொற்று ஏற்பட்டது என்று அவர்கள் கேள்வி எழுப்பினர். பி.சி.ஆர். முடிவின் மீது அவர்கள் சந்தேகம் கிளப்புகின்றனர்.

இந்தச் சோதனைகளின் முடிவுகள் உலகம் முழுவதுமே 70 சதவீதம்தான் சரியானவையாக இருக்கின்றன என்கின்றது மருத்துவ வட்டாரம். அதனாலேயே ஒரு தடவை மட்டும் அன்றிப் பல தடவைகள், குறைந்தது 3 தடவைகளாவது இந்தச் சோதனை நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பி.சி.ஆர். சோதனை வசதியின் எல்லை ஏற்கனவே கடக்கப்பட்டுவிட்டதால் இனித் துரித முடிவுகளைப் பெறும் சோதனை முறையை விரைவில் அறிமுகப்படுத்த இருப்பதாக ஆனந்த ஜெயலால் தெரிவித்தார். சீனா மனது வைத்தால்தான் அதுவும் சாத்தியம். அதேநேரம் இந்த துரித சோதனைத் தொகுதியின் நம்பகத் தன்மைகுறித்து இந்தியாவில் பலத்த சந்தேகம் கிளப்பப்பட்டது என்பதும் கவனத்திற்குரியது. இதனால் அந்தச் சோதனைகள் இடைநிறுத்தப்பட்டது கூட அங்கு நடந்திருக்கின்றது.

இங்கு ஏற்கனவே பி.சி.ஆர். முடிவுகள் மீதே சந்தேகங்கள் எழுப்பப்படும் நிலையில் துரித சோதனை முடிவுகள் குறித்து எத்தகைய கேள்விகள் எதிர்காலத்தில் எழுமோ?

மொத்தத்தில் நெருக்கடி நிலையைப் புரிந்துகொண்டு தேவையற்ற வகையில் நடமாட்டத்தைத் தவிர்த்துக்கொண்டு, வீடுகளில் பாதுகாப்பாக இருப்பதுடன், சுகாதார நடைமுறையான அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளுவது, முக்கவசங்களை அணிந்து கூடிய இடைவெளியைப் பின்பற்றி நடப்பதே எல்லோருக்கும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மேற்கு....

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ச சீனாவின் பக்கமாக இருந்துகொண்டு மேற்குலகைக் கையாண்டார் என்றால் ரணில் மேற்கின் பக்கமாக இருந்து கொண்டு கொண்டு சீனாவைக் கையாண்டார். இதனை சுவிற்சர்லாந்தில் நடந்த உலக வர்த்தக மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்த சமயம் ரணிலின் நெருங்கிய சகாவான அர்ஜூன் மகேந்திரன் செய்தியாளர்களிடம் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

மேற்கையும் கிழக்கையும் எதிரெதிர் நிலைகளில் கையாள்வதன் மூலமே இலங்கையை வெற்றிகரமாக வளர்த்தெடுக்க முடியும் என்பதைச் சிங்கள ஆட்சியாளர்கள் தெளிந்து அறிந்திருக்கிறார்கள். அதில் அவர்கள் கைதேர்ந்தும் இருக்கிறார்கள்.

இலங்கையை முன்வைத்து அமெரிக்காவும் சீனாவும் வெளிப்படுத்திய கருத்து மோதல்களின் பின்னரும் அயலுறவுத்துறை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன செய்தியாளர்களிடம் மிக நிதானமாகக் கூறியது, "இறைமையுள்ள விடுதலையான கட்டுப்பாடுகளற்ற நாடான இலங்கையின் அயலுறவுக் கொள்கை பக்கச்சார்பற்று இருத்தல், அணி சேராதிருத்தல், நட்போடிருந்தல்" என்பதுதான்.

எமது அமைவிட முக்கியத்துவம் காரணமாக எமக்கு வருகின்ற வாய்ப்புக்கள் குறித்தும் பொறுப்புக் குறித்தும் நாம் அக்கறையுடனேயே இருக்கின்றோம் என்றும் அதனடிப்படையில் இலங்கையின் வான் மற்றும் கடல் பரப்புகளின் சுதந்திரத்தின் முக்கயத்துவத்தையும் இலங்கை உணர்ந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கூடாக அவர் சொல்ல விளைந்ததெல்லாம் எமது கடல், வான் பரப்புக்கள் எந்தவொரு நாட்டுக்கும் விட்டுக்கொடுக்கப் படமாட்டாது என்பதுதான். அதிபராகப் பதவியேற்றது முதல் கோட்டாபய ராஜபக்சவும் இதனையேதான் தெரிவித்து வருகின்றார்.

வெளித் தோற்றத்திற்கு ராஜபக்சக்கள் சீனா பக்கம் சாய்வதைப் போன்று தோன்றினாலும், சீனாவிடம் இருந்து கடனுதவிகள் பலவற்றையும் பெற்றுக்கொண்டாலும் கிழக்கு மற்றும் மேற்குக்கு இடையிலான உறவுகளை அவர்கள் தெளிவாகவே கையாள்கின்றார்.

2019ஆம் ஆண்டில் இலங்கையின் ஆகக்கூடுதலான ஏற்றுமதி அமெரிக்காவிற்கு மட்டுமே இடம்பெற்றிருக்கின்றது என்பதே இதற்கு உதாரணம்.

சீனாவைக் காட்டி அமெரிக்காவிடமும் அமெரிக்காவைக் காட்டி சீனாவிடமும் நன்மைகளை எப்படிப் பெற்றுக்கொள்வது என்பதில் அவர்கள் தெளிவாகவே இருக்கின்றார்கள்.

ஆனால், இந்த முரண்பாடுகளால் பழம் நழுவிப் பாலில் விழும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழர்களின் நிலைதான் தெளிவற்றது என்பது பரிதாபத்திற்குரியது.

போர் ...

மீண்டும் பஸ்ஸில் ஏறிக் கால் கடுக்க நிற்கிறேன் இப்பொழுது பயணி கள் அதிகரித்திருந்தமையால் நெரிசல் அதிகமாக இருந்தது. வியர்வை ஒருபுறம் மிக அருகில் ஒன்றோடு ஒன்று மோதும் மூச்சுக்காற்று மறுபுறம். அருவருப்புணர்வு மேலிடுகிறது. ஆராவது இறங்க மாட்டார்களா .இருப் பதற்கு ஓர் இடமும் கிடைக்காதா? என ஏக்கமாக இருக்கிறது.

அவளது இருக்கையின் கம்பியை பிடித்தபடி முதியவர் ஒருவர் நிற்கிறார்.

அச்சிறுமியை பார்க்கப் பிடிக்கவில்லை. முகத்தத் திருப்பிக்கொள் கிறேன்.

பஸ் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலடியில் உள்ள இராணு வச் சோதனைச் சாவடியில் நிற்கிறது. மீண்டும் எமது கீழ்ப்படிவான அடி மைத்தனத்தை எடுத்துக் காட்ட ஒக்கம பவின்ட இறக்கப் படுகிறோம்.

பெண் பொலிஸின் ஸ்பரிச தீட்சை பெற்றுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் மீண்டும் காத்திருக்கிறேன். பிள்ளையார் எம்மைப் பார்த்து என்றும் போல் சிரிக்கிறார்.

இப்பொழுதாவது அச்சிறுமி இறங்குகிறாளா?.ஏமாற்றம்தான் மிஞ்சு கிறது. இம்முறை எப்படியாவது இருக்க இடம்பிடித்திட வேண்டும் என்ற வேகத்துடன் பஸ் வந்தவுடன் விரைவாக ஏறுகிறேன்.

சிறுமியின் பக்கத்தில் இருந்தவர் மருதடியில் இறங்கியிருக்கவேண் டும். இருக்கை காலியாக இருந்தது.

அவசர அவசரமாக அவ்விருக்கையில் அமர்கிறேன்.

எனக்கு வசதியாக இடம் தருபவள்போல் சற்று நகர்ந்து இருக்கிறாள்.

அவளது இறுகிய முகம் சற்றுத் தளர்கிறது. சிறுகோடாய் புன்னை நெளிகிறது. அடுத்த கணமே மறைகிறது. மீண்டும் ஜன்னலுக்கு வெளியே வெறித்து நோக்குகிறது.

நேரம் 8.40ஐத் தொட்டுக்கொண்டிருந்தது பாடசாலக்கு 9.30க்கு முதல் நான் போய்ச் சேரமுடியாது என்பது உறுதியாயிற்று. தலைக்கு மேல் வெள்ளம் போன பின் சாண் ஏறினால் என்ன முழம் ஏறினால் என்ன என்ற விரக்தி நிலைக்கு வந்திருந்தேன்.

முன்னே இராணுவத்தின் பவள் வாகனம் ஒன்று தெருவை நிறைத்த படி மிக வேகமாக வரவே பஸ்சாரதி திடீர் பிறேக் போட்டு விபத்தைத் தவிர்த்துக் கொள்கிறார்.

எனது மடியில் இருந்த கோப்புக்களில் இருந்த காகிதங்கள் பரந்து விழுந்தன. அச்சிறுமி தன்னிச்சையாக குனிந்து காகிதங்களைப் பொறுக்கித் தரத்தொடங்குகிறாள். நானும் குனிந்து அக்காகிதங்க ளைப் பொறுக்க முனைந்த பொழுது&&

மின்சாரத்தால் தாக்குண்டவள் போல் அதிர்ச்சியுடன் நிமிர்கிறேன். அச்சிறுமியின் கால்களில் ஒன்று&.? இத்தேசம் இன்னும் எத்தனை பேருக்கு ஜெயப்பூர் கால்களைப் பரிசாக வழங்கப் போகிறதோ...?

கேள்வி பெரிதாக எழுந்து பயமுறுத்துகிறது. போரின் அவலங்களின் தாற்பரியங்களைத் தரிசித்தபோது எனது மன உளைச்சல்கள் மிக அற்பமானவை என்பது புரிந்தது.

மானசீகமாக அந்தச் சிறுமியிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள் கிறேன்.



சாம் - ராமேஸ்குமார்

சைவ நெறி என்பது வெறும் வார்த்தையல்ல

சைவ நெறி என்பது ஒரு மதம் கிடையாது. அது ஒரு தனி மனித வாழ் வியல் உணர்வாகும். அதை ஒரு மதமென எண்ணுபவர்கள் மிகப்பெரும் மதம் கொண்ட யானைக்கு சமமானவர்களாக இகழப்படுவது நிச்சயம்.

ஓர் உயிரை தன்னுடைய கருவறையிலே ஒரு தாய் உருவாக்குவது போல். ஒரு மனிதனுடைய மேலான ஆன்ம உணர்வுகளே ஒழுக்கங்களாக, தர்மங்களாக ஒன் றிணைந்து அவனது ஆன்மீக இதயத்திலிருந்து பரிணமித்து பரிபூரணமான சைவ நெறி வாழ்வியலை இந்த உலகத்துக்கு ஒவ்வொரு நொடியும் நிரந்தரமாய் பிறப் பித்துக் கொண்டு இருக்கின்றது.

தன் மூச்சுக் காற்றோடு முழுமையாக ஒன்றித்துப் போனவனே நிறை நிலை தெய்வீக மனிதன் ஆவான் என்பது போல, தன் இதயத் துடிப்போடு எந்நேரமும் பரிசுத்தத்தை ஒன்றிக்கச் செய்ய வல்லவனே ஒரு விழிப்பான சைவ நெறியாளன் ஆகிறான்.

நெற்றியில் பட்டையும். கழுத்திலே உருத்திராட்ச கொட்டையும். இடுப்பிலே மடிப்பு பிசகாத வேட்டியும். வயிற்றுப் பசிக்கு தூய்மையான சைவ உணவும். தன் பெயருக்கு முன்னால் ஒரு பட்டமும் இருந்து விட்டால் மட்டும் ஒருவன் சைவ நெறியிலே என்றும் நின்று நிலைக்க முடியாது. இது பகட்டுக்கான வெறும் புற அடையாளங்கள் மாத்திரமே. இது பக்திக்கான வாசல்கள் கிடையாது. இதனால் எந்த ஆத்ம விமே சனமும் ஒரு நாளும் பெற முடியாது.

சைவ நெறியின் முக்கிய குறிக்கோள் முதலில் உலக விசயங்களை உடலளவிலும், மனதளவிலும் துறந்து. பின்னர் மனதையும் துறக்கச் செய்ய வேண்டும். இது இரண்டையும் துறக்காத ஒருவனால் சைவ நெறி வாழ்வியலின் அதி சூட்சுமத்தை அல்லது அதன் நுட்பத்தை ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது.

ஒன்றென இரண்டென ஒத முடியாமல் ஓவியம் போல் இருந்தேனடி குதம்பாய்... என்ற ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைக்கு ஏற்ப, ஒரு சைவ நெறியாளன் புறவுலகையும் அகவுலகையும் அத்வைத பாவனையாக இரண்டறக் கலக்கச் செய்து. ஒரு ஓவியம் போல் மனதால் அசைவற்று தன் சொந்த ஆன்மா வில் என்றும் நிலைத்திருத்தலே சைவ நெறியின் உன்னத தத்துவ வழிபாடாகும்.

அதை விடுத்து எம் அகவுணர்வுக்குள் சைவ நெறியை ஒரு நொடி கூட முற்றும் உணர்ந்து வாழாமல். வெத்துக் கோங்களாலும், வெறும் கூக்குரல்களாலும் நேர்மை யான சைவ நெறியாளனாக ஒருபோதுமே மிளிர முடியாது. நான் சைவ நெறியாளன் என்பது வார்த்தையில் மட்டுமே இல்லாமல் அது ஒரு மகத்தான வாழ்க்கையாக என்றென்றும் மாற வேண்டும். அப்போதுதான் சிவபூமி என்றும் சிவமயமாய் திகழும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சீனத்திடம் நக்குண்ம நாவிழந்த சிறீலங்கா

சபாஷ் சரியான போட்டி என்கிற நிலையை அடைந்திருக்கிறது இலங்கையை மையப் படுத்திய அமெரிக்க - சீன பனிப்போர். இது வரை காலமும் இந்தப் பனிப்போர் என்ற இராஜதந்திரத் தமிழ்ச் சொல்லை பத்திரிகைகளில் படித்திருப்போம். கட்டுரைகளில் படித்திருப்போம். முதன் முதலாக சமூக வலைதளங்களில் அறிமுக முள்ள அனைவர் முன்னாலும் ஒரு பனிப்போரை அம்பலத்தில் நடத்திக்கொண்டிருக்கிறது சீனத் தூதரகம்.

BRISL, ChinaEmSL ஆகிய இரு ருவீற்றர் பக்கங் களும் இலங்கையை மையப்படுத்தி அமெரிக்காவுக்கு எதிரான தமது கருத்தை வெளிப்படையாகவே எழுதி வருகின்றன. ஒரு தூதரகம் இன்னொரு நாட் டின் சுயாதீனத்தில், இறையாண்மையில் வெளிப் படையாகவே இறங்கிக் கலக்குவது சுவாரஸ்யமா னதாக இருக்கிறது. ஆனால் இந்த அதிகாரத்தை யார் வழங்கினார்கள்? எப்படி இதனை எடுத்துக்கொண் டார்கள் என்பதெற்கெல்லாம் பதிலும் மிக அருகில்தான் உண்டு.

அதாவது புலிகளை அழிக்க உதவிய நாடுகளின் பட்டியலில் சீனா அதிகலாபத்தைப் பெற்றுக்கொண்டது. அந்த லாபத்தின் அறுவடையைத்தான் இந்தத் தீவு இனி அனுபவிக்கப்போகிறது. இந்த லாபத்தில் நடக்கும் பங்கிடல் போட்டியின் தோல்வியை ஜீர ணித்துக்கொள்ள முடியாத இந்தியாவும் அமெரிக் காவும் சுடுதண்ணீர் குடித்துவிட்டுக் குதிக்கின்றன.

மீளமீள நொண்டிச்சாட்டுகளுடன் இத்தீவை கையாளமுயற்சிக்கின்றனர். ராஜபக்சக்களின் யுகத்தில் அதெல்லாம் சாத்தியமற்றது என்பது யாரும் அறியாத ஒன்றல்ல. அத்தோடு சீனா சிறி லங்காத் தீவில் இறங்கியிருக்கும் ஆழம் மிகப் பெரி யது.

இலங்கை தீவின் வரைபடத்தையே மாற்றிய சீனா

இதுவரை காலமும் சிறீலங்கா தீவானது மாம்பழ வடிவுடையது, நெட்டாங்கு இவ்வளவு அகலாங்கு இவ்வளவுஎனப் படித்திருப்போம். சீனாவின் கொழும்பு துறைமுக நகர விரிவாக்கத்திற்குப் பின்னால் (காலிமுகத்திடலை அண்டிய கடலின் 296 ஹெக்ரே யர் பகுதியை மண்ணிட்டு நிரப்பி அமைக்கப்படும் புதிய நகரத் தொகுதி. இதனை கடலிடமிருந்து நிலத்தை மீட்கும் திட்டம் என்கிறார்கள்) இந்தத் தீவின் வரைபடமே மாற்றப்பட்டிருக்கிறது. (படம்)

இந்துமா சமுத்திரத்தின் மத்தியில் சிறு முத் துப்போன்றிருக்கும் தீவின் எதிர்கால இருப்புதொடர் பிலோ, கடல் நீர்மட்ட அதிகரிப்பினால் எதிர்காலத் தில் தீவுக்கு ஏற்பட இருக்கும் அபாயம் குறித்த எச்சரிக்கைகள் குறித்தோ அக்கறை செலுத்தப் படாமலேயே இந்தத் திட்டம் முடிவுறுநிலையை எட்டியிருக்கின்றது. இலங்கையில் அமையும் சீனா வின் நகரம் வண்ணமயமானது. நாட்டின் அபிவிருத்தி யை விரைவுபடுத்தக்கூடியது என்கிற விளம்பரங்க ளின் பின்னாலே இது இடம்பெற்றிருக்கிறது. அதாவது ஒருநாட்டின் வரைபடத்தையேமாற்றியமைக் குமளவுக்கு இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துவிட்டது.

இந்தப் பொறியிலிருந்து இலங்கை தீவி னால் இனி வெளிவரவும் முடியாது. காரணம் தலைக்கு மேல் எகிறியிருக்கும் கடன்கள். உதவிகள்.

இத்தீவு இனி சீனாவிடமிருந்து விலக முடியாததற்கு அடுத்த காரணம், சந்தை. அதாவது நமது பகுதிகளில்கூட சீனத் தயா ரிப்புப் பொருட்களைத் தவிர்த்து ஒரு விளக் குமாற்றைக்கூட வாங்கமுடியாதளவுக்கு சின சந்தையின் விரிவாக்கம் நடந்திருக் கிறது.

உணவுப்பொருட்கள் தொடங்கி, அன்றாட உபயோகப்பொருள்கள், மின்னியல்பொருள் கள் என அனைத்து இடங்களையும் சீனத் தயாரிப்புப் பொருள்கள் பிடித்திருக்கின்றன. உள்ளூர் உற்பத்தி களும், உள்நாட்டு உற்பத்திகளும் தவிடு பொடியாகுமளவுக்கு இந்தச் சந்தை விரிவாக்கம் நடந்திருக்கிறது.

பொருள்களின் தரநிர்ணயத்திலோ, சுகாதார விடயங்களிலோ அக்கறை செலுத்தாதுலாபநோக் கில் மட்டும் கவனம் செலுத்தும் நுகர்வுப் பண்புடை யாளர்களாகிய இலங்கைவாழ்மக்களுக்கு சீனத்து மலிவுப் பொருள்கள் பெரும் வரம்தான்.

அப்பொருள்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு, சுற்றுச்சூழல் விளைவுகள் குறித்தெல் லாம் அரசும் அக்கறை காட்டுவதில்லை, மக்களும் கவனமெடுப்பதில்லை.

வீதி புனரமைப்பு, உள்நாட்டுக் கட்டுமான பணி களில் பெருமளவிலான சீன நிறுவனங்கள் ஈடுபடு கின்றன. யாழ்ப்பாணத்தில், வவுனியாவில் கூட தனிச் சீன மொழிப் பெயர்ப்பலகைகளுடன் கட்டு மான நிறுவனங்கள் இயங்கிவருவதை அவதானித்தி ருப்போம்.

திறந்து கிடக்கும் பொருளாதார சூழலில் இவை யெல்லாம் சாதாரண விடயமாயினும், உள்நாட்டு மக்கள் வறுமையில் கிடந்துழல, வெளிநாட்டு நிறு வனங்களுக்கு இத்தொழில் வாய்ப்புக்களை வழங் குவதானது, இந்நாட்டு மக்களை மேலும் பிச்சைக் காரர்களாகவும், சோம்பேறிகளாகவுமே மாற்றும். சொந்தமக்கள் உணர்ந்து செயற்படாத அபிவிருத்தி யானது இலங்கைவாழ் மக்களுக்கு நன்மை பயப் பதைவிட, அதனை அமைத்துக்கொடுக்கும் நாட்டி னருக்கே திக நன்மையை ஏற்படுத்திக் கொடுக் கின்றது.

இவையெல்லாம் போக, மிக அண்மைக் கால மாக சீனர்கள் இலங்கையில் தடைசெய்யப்பட்டி ருக்கும் தொழில்களைக்கூட ஆரம்பித்திருக்கி றார்கள்.

கடந்த வாரம் இரண்டு செய்திகள் சீனர்களை மையப்படுத்தி வந்திருந்தன. கொழும்பில் நவீன கட்டடத்தொகுதியொன்றில் வாடகைக்கு இடம்பெற் றுக்கொண்ட சீனர்கள் அங்கு சட்டவிரோத சூதாட் டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதேபோல கசிப்பு எனப்ப டும் தடைசெய்யப்பட்ட சாராய வடிசாலையை நடத் திய சீனர்களும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இன்னொரு நாட்டிலிருந்து விசா பெற்று நாட்டுக் குள் வந்திருக்கும் பிறநாட்டவர்கள், அந்த நாட்டைச் சுற்றிப்பார்க்கலாம், கல்வி கற்கலாம், தொழில் செய்யலாம். ஆனால் இலங்கையில் மட்டும் மேற் குறித்த எல்லாவற்றையும் தவிர்த்துவிட்டு சட்ட விரோத செயல்களில் ஈடுபடலாம் என்ற நிலை உரு வாகியிருக்கிறது. அதுவும் சீனர்களுக்கு சிறப்பான வாய்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் இறைமையைமீறி இச்செயல்களையெல் லாம் இலங்கைத் தீவால் எப்படி அனுமதிக்க முடிகி றதெனில், நாக்குண்டார் நாவிழந்தார் இராஜதந்திரத் தின் அடிப்படையில்தான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 55ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் பிறின்ட் ஹவுஸ் பிறைவேட் லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781